

KALKI ஜூலை 1, 1951 4 அணா



"என் சருமத்தை
எழிலோங்கச்செய்யும்

லக்ஸ்
டாய்லட் சோப்பிற்கு

எனது நன்றி"

என்று கூறுகிறார்

ருக்மணி தேவி



இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தை வசீகரமாகச்செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 255-172 TM


மோகன
சுந்தரம்
தமிழ்
ஜே. ஆர். ரங்கராஜுவின்
துப்பறியும் நவீனம்....
ஸ்ரீ சுகுமார் தயாரிப்பு...
டைரக்ஷன்... A.T. கிருஷ்ணஸ்வாமி, B.A.
M.S. PICTURES
RELEASE
விரைவில் வருகிறது !

ராஜபுதன சித்திரக்கலையின் உதாரணம்



சமையல் செய்வது ஓர் கலை



ஆனால் அதன் வெற்றிக்குக் காரணம் உபயோகிக்கும் சாதனங்களைப் பொறுத்தது

துஷார்

வனஸ்பதி

இருமுறை சுத்தம் செய்யப்பட்டு பக்குவம் செய்த மேன்மையான சமையல் சாதனம்

நீடித்த புதுமைக்கும், ரகத்தின் மேன்மைக்கும், பரிசுத்தத்திற்கும் இணையற்று விளங்குவது துஷார் வனஸ்பதி. மேலும் மிஞ்சிய சிறிய அளவுகூட வீணாக்காமல் மீண்டும் உபயோகிக்கும் வண்ணம் கெடாதவாறு எப்போதும் ஒரே நிலையில் உள்ளவாறு துஷார் வனஸ்பதி பக்குவம் செய்யப்பட்டது.

துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கர்நூல்

"எனது கைகளை உபயோகிப்பதே மிக சிரமமாயிருந்தது" — பிறகு "க்ருஷன்" வழியைப் பின்பற்றியதால்





கீல்வாதத்தினின்றும் விடுபட்டேன்

ஒரு காலத்தில் இவர் கீல்வாதத்தினால் மிகவும் அவஸ்தைப் பட்டார். பிறகு அதைத் தடுக்கும் முறையை அறிந்ததிலிருந்து பல வருஷங்களாக அதிலிருந்து விடுதலை பெற்றுள்ளார். சுலபமானதும், அவசியம் தெரிந்திருக்க வேண்டியதுமான ஒரு சிகிச்சை அது; அவரது கடிதத்தைப் படியுங்கள் :—

"பிரதி குளிர்காலத்திலும் எனது தோள்களில் மிகுந்த வலிகாரணமாகக் கைகளை உபயோகிப்பதே சிரமமாயிருந்தது. ஐந்து வருஷங்களுக்கு முன்னர், "க்ருஷன்" உப்புக்கள் உபயோகித்துப் பார்த்ததில் ஒரு வாரத்தில் நல்ல குணம் கண்டதுமன்றி மெத்த ஆறுதலும் அடைந்தேன். ஒரு மாதத்தில் வலி முழுவதும் மறைந்ததுமல்லாமல் நல்ல ஆரோக்கியமும், புத்துயிர் பெற்ற யௌவன உணர்ச்சியும் பெற்றிருப்பதாக உணர்ந்தேன். ஒருவர் சாதாரணமாக நினைப்பதுபோல், இந்த யௌவன உணர்ச்சி தற்காலிகமானதாக அல்லாமல் நிரந்தரமாகவே இருந்தது." —C. A., Poona

கீல் வாதத்தின் வலிகளும், விறைப்பும் சாதாரணமாக தேகத்திலுள்ள அபரிமிதமான மூத்திர அமிலங்களால் உண்டாக்கப்படுகின்றன. "க்ருஷனில்" உள்ள ஆறுவித உப்புக்கள் ஈரலையும், மூத்திரக்காய்களையும், நன்கு வேலை செய்யுமாறு தூண்டுவதுடன் உபத்திரவங்களுக்குக் காரணமான அதிகப்படி மூத்திர அமிலங்களை உடலிலிருந்து வெளியேற்றவும் உதவுகிறது. தினந்தோறும் உட்கொள்ளும் "சிறு அளவு" க்ருஷன், கழிவு பதார்த்தங்கள் உடலில் தங்கிப் புளித்துப் போகாதவாறு குடல்களை நன்கு இயங்குமாறு செய்வதனால் மூத்திர அமிலங்கள் ஒரு போதும் உடலில் தேங்கி நிற்க முடிவதில்லை. எல்லா கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.



Ad. KSID. 16.

புதிய இசைத்தட்டுகள்!


ஸ்ரீமதி **கே. என். ருக்மணிதேவி**



N.28243

தமிழ் மொழி போலே

கர்வம் கொள்ளாதே




ஸ்ரீ **டி. எம். சௌந்தரராஜன்**

N.28244

வள்ளல் பெருமைதனை

ஹரி ஹரி தேவா



ஸ்ரீ **எஸ். எம். ஏ. கதிர்**

N.28242

என் முகம் பாருமையா

மறை மலர் பாதா



கெம்பராஜ் புரொடக்ஷன்ஸ்

ராஜ விக்கிரமா

பாட்டுகள்

ஸ்ரீமதி **என். காந்திமதி &**

ஸ்ரீ **எஸ். ராஜம்**

N.28252

கோகில கண்டத்தின்

2 பாகங்கள்

முந்திய வெளியீடுகள்

N.28201 to N.28203

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

தி கிராமபோன் கம்பெனி லிமிடெட்

கல்கத்தா — பம்பாய் — மதராஸ் — டில்லி

பொருள் அடக்கம்

கல்கி

மலர் 10 இதழ் 48 | 1951 ஜூலை 1 | கர ஆ ஆனி 17உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


தேவகி
சினிமாப் படங்கள்
சமுதாய முன்னேற்றத்திற்கே
என்பதற்கு
இந்தக் கதை
ஒரு சான்று...
கணபதி பிக்சர்ஸ் தயாரிப்பு...
மு.கருணாநிதி
R.S.மணி
சென்னை
பிரபாத் · பாரகன் லக்ஷ்மி
மற்றும் தமிழ் நாடெங்கும்....
மாடர்ன் தியேட்டர்ஸ்

கல்கி

மலர் 10 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 48

எண்ணெயும் புகையும்

பழங்கதை ஆகி விட்டதாக எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்த முப்பத்தெட்டாவது அக்ஷரேகையின் மற்றொரு புறம் சில தினங்களுக்கு முன் திடீரென்று புகையத் தொடங்கியது.

அதன் விளைவாக ஒரு தேசத்தின் பிரதம மந்திரி பலியானார். பலியானவருக்குப் பதிலாகப் பதவி ஏற்றுக் கொண்ட மற்றொரு பிரமுகர் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பார்லிமெண்டுக் கட்டிடத்தில் போய்ப் பல நாட்கள் வரையில் ஒளிந்து கொண்டிருந்தார்.

தெருக்களில் இதுவரையில் உலகமே கண்டிராத விசித்திரமான ஊர்வலம் ஒன்று நடந்தது. ஒவ்வொரு பார்லிமெண்டு அங்கத்தினரையும் பொது ஜனங்களில் ஒவ்வொருவர் தோளில் தூக்கிக்கொண்டு தெருக்களில் வெறி நடனம் புரிந்து சென்றனர்.

இத்தனை அல்லோல கல்லோலங்களும் முப்பத்தெட்டாவது அக்ஷரேகை ஓடும் ஈரான் தேசத்தில்தான் நிகழ்ந்தன.

உலகத்திலே எண்ணெய் உற்பத்தியில் ஈரான் தேசம் நாலாவது ஸ்தானத்தை வகிக்கிறது. அந்த நாட்டில் எண்ணெய் எடுக்கும் ஏகபோக உரிமையை இதுவரையில் பிரிட்டிஷார் அனுபவித்து வந்தார்கள். அந்த உரிமைக்கு முற்றுப் புள்ளி வைக்க இப்போது ஈரான் மக்கள் தீர்மானித்து விட்டனர். வெறும் தீர்மானத்துடன் நிற்கவில்லை; செயலிலும் இறங்கி விட்டார்கள்.

ஈரானில் பிரிட்டிஷ் எண்ணெய்க் கம்பெனி சுமார் நாநூறு கோடி ரூபாய் வரையில் மூலதனம் போட்டிருப்பதாக மதிப்பிடுகிறார்கள். மேற்படி கம்பெனி தனக்குக் கிடைக்கும் லாபத்தில் ஒரு சிறு பகுதியை ஈரான் சர்க்காருக்குக் கொடுத்து வருகிறது. அந்தத் தொகையே கோடிக்கணக்கில் இருக்கிறது எனில், பிரிட்டிஷாருக்குக் கிடைக்கும் லாபம் எத்தனை கோடியோ!

ஈரானில் உற்பத்தியாகும் எண்ணெய் மூலம் கிடைக்கும் கொள்ளை லாபத்தைப் பிரிட்டிஷார் ஏன் தட்டிக்கொண்டு போக வேண்டும்? தங்கள் சொத்தில் தங்களுக்கு உரிமையின்றி ஈரான் மக்கள் ஏன் கஷ்டப்பட வேண்டும்?

எனவே ஈரானில் எண்ணெய் எடுக்கும் உரிமையைத் தங்களுடைய நிர்வாகத்தில் எடுத்துக்கொண்டுவிட ஈரான் சர்க்கார் தீர்மானித்தனர். மேற்படி தீர்மானம் ஈரான் பார்லிமெண்டிலும் ஏகமனதாக நிறைவேறியது.

ஈரான் சர்க்காரின் உறுதியைக் கண்டு கலங்கிய பிரிட்டிஷார் மேற்படி சர்க்காருடன் சமரசப் பேச்சு நடத்துவதற்காக ஒரு தூது கோஷ்டியை ஈரானுக்கு அனுப்பி வைத்தார்கள். பிரிட்டிஷ் எண்ணெய்க் கம்பெனிக்குக் கிடைக்கும் மொத்த லாபத்தில் பாதியை ஈரான் சர்க்காருக்குக் கொடுப்பதாக பிரிட்டிஷ் கோஷ்டி அறிவித்தது. ஆனால் ஈரான் சர்க்கார் அதற்கு இணங்கவில்லை.

"முதலில் கம்பெனியின் முழு நிர்வாகத்தையும் எங்களிடம் ஒப்புவித்து விட வேண்டும். உங்களுக்கு வேண்டுமானால் லாபத்தில் கால் பாகத்தைத் தருகிறோம்" என்று ஈரான் சர்க்கார் பிரதிநிதிகள் உறுதியாகக் கூறி விட்டார்கள்.

சமரசப் பேச்சு வெற்றி பெறாததால் பிரிட்டிஷ் தூது கோஷ்டி திரும்பிச் சென்று விட்டது. ஈரான் அரசாங்கத்தின் கட்டளைப்படி ஈரான் தேச இராணுவம் இப்போது பிரிட்டிஷ் எண்ணெய்க் கம்பெனியின் நிர்வாகத்தைப் பலாத்காரமாக எடுத்துக் கொள்ள முற்பட்டிருக்கிறது.

"ஈரான் வழிக்கு வரா விட்டால் அந்த நாட்டிலுள்ள எண்ணெய் வயல்களை யெல்லாம் வெடி வைத்துத் துவம்சம் செய்து விடுவோம்" என்று கூடச் சில பிரிட்டிஷ் தீவிர வாதிகள் பயமுறுத்துகிறார்கள்.

ஐரோப்பாவும், ஆசியாவும் ஈரான் எண்ணெயைப் பெரிதும் நம்பிக் கொண்டிருக்கின்றன. ஈரான் எண்ணெய்க்கு ஆபத்து ஏற்படுமாயின் முக்கியமாக இந்தியாவில் எண்ணெய்ப் பஞ்சம் ஏற்பட்டுத் தொழிற்சாலைகள் ஸ்தம்பித்து நிற்கும்படி நேரலாம். அது போலவே மற்றும் பல நாடுகளில் தொழிற்சாலைகள் இயங்க முடியாமற் போய் விடும்.

பிரிட்டிஷ் எண்ணெய்க் கம்பெனியின் நிர்வாகத்தை எடுத்துக் கொள்ள ஈரானுக்கு உரிமை உண்டு என்று அமெரிக்கா ஒத்துக் கொள்கிறது. பிரிட்டனும் வேண்டா வெறுப்பாக ஒப்புக் கொள்கிறது.

லாபத்தில் யாருக்கு எவ்வளவு பங்கு கிடைக்க வேண்டும் என்பதை ஒட்டியே இப்போது தகராறு ஏற்பட்டிருக்கிறது.

இந்த எண்ணெய் விவகாரம் புகையுடன் நின்று விடுமா அல்லது யுத்த நெருப்பாக மூண்டு விடுமா? — இந்தக் கேள்விக்குப் பதில் என்ன என்பது பிரிட்டன் கைக்கொள்ளப் போகும் முறைகளையே பொறுத்திருக்கிறது.

நீலன் சிலை சிரித்தது ஏன்?

"ஐயோ! நீலன் சிலை எங்கே!" என்ற கூக்குரல் ஒரு நாள் இரவு சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் கேட்டது. வெகு காலம் இந்தக் கொடிய நீலன் சிலை மவுண்ட்ரோடு மத்தியில் காட்சியளித்ததும் ராஜாஜியின் ஆட்சியில் அதைப் பெயர்த்து எடுத்து மியூஸியத்தில் கொண்டு சேர்த்ததும் நேயர்கள் அறிந்ததே. அந்தச் சிலையைத் திடீரென்று காணோமென்றால் மற்றச் சிலைகளுக்கெல்லாம் திகில் உண்டாவது இயல்புதானே! அவைதான் அவ்விதம் கூக்குரல் எழுப்பின. நல்ல வேளையாகப் பொழுது விடிவதற்குள் நீலன் சிலை திரும்பி வந்து யதாஸ்தானத்தில் அமர்ந்தது. அமர்ந்து சும்மா வாயை மூடிக்கொண்டு இருந்ததா! அதுதான் இல்லை! "ஹாஹா ஹாஹா" என்று பழைய மியூஸியம் கட்டிடத்துக்கு ஆபத்து வரும்படியாகச் சிரித்தது. "எங்கே போயிருந்தாய்! என்ன பார்த்தாய்! எதற்காகச் சிரிக்கிறாய்!" என்று மற்றச் சிலைகள் சரமாரியாகக் கேள்விகள் கேட்டன. "நான் என்னமோ இந்த தேசத்து ஜனங்களைக் கொடுமைப் படுத்தியதாக என்னை இங்கே கொண்டு வந்து தள்ளினார்களே! இப்போது இவர்களுடைய காங்கிரஸ் ஆட்சி தஞ்சாவூரில் நடக்கும் இலட்சணத்தைப் போய்ப் பார்க்கட்டும்!" என்று சொல்லிவிட்டு, நீலன் சிலை மறுபடியும் "ஹாஹ் ஹஹ்ஹா" என்று சிரிக்கத் தொடங்கியது.

• • • •

தஞ்சாவூர் ஜில்லாவில் இப்போது நம் ஒப்பில்லாத் தலைவர் நேருஜியின் சுதந்திர சர்க்கார் ஆட்சிதான் உண்மையில் நடைபெறுகிறதா! அல்லது செத்துப் போன ஓட்வயர், டையர், ஓப்ரியன்களின் ஆவிகள் அங்கே வந்து அதிகாரம் செலுத்துகின்றனவா! — இந்தச் சந்தேகம் நமக்குக் கீழே வெளியாகியிருக்கும் கடிதத்தைப் படித்தபோது எழுந்தது. கடிதம் எழுதியவர், நீண்ட நாள் தேசபக்தரான பொறுப்பு வாய்ந்த மாகாணக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர். கடிதம் வருமாறு:—

தஞ்சாவூர்
19—6—51

ஜூன் 3-ந் தேதி 'கல்கி'யில் "சுயராஜ்யம் வந்து என்ன பயன்?" என்ற விஷயத்தைப் படித்தேன். அக் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களைவிட அட்டூழியம், அக்கிரமம் என் தஞ்சை தாலுகா கிராமங்களில் நடந்த வண்ணமாயிருக்கின்றன. இவைகளைப் பற்றி வட்டார அஸெம்பிளி அங்கத்தினர்கள் கவலை கொள்ளக் காணோம். நிலைமை நிரம்ப மோசமாகி வருகிறது. என் கவனத்திற்கு வந்துள்ள சில விஷயங்கள் காங்கிரஸ் தொண்டன் என்ற முறையில் எனக்குத் தாங்க முடியாத வேதனையைக் கொடுக்கின்றன.


1. தஞ்சைக்குச் சமீபத்திலுள்ள வண்ணாரப்பேட்டை கிராமத்தில், வைத்திலிங்கப் பாளுண்டார் என்பவரைக் கொள்முதல் அதிகாரிகள் நையப் புடைத்தார்களாம். அன்னாரின் கண்ணைக் கட்டிச் சுடுவோம் என்றும், ஊசியைக் கையில் ஏற்றுவோம் என்றும் பயமுறுத்தினார்களாம். சாணியைக் கரைத்து வரும்படி ஒரு ஸ்திரீயை வற்புறுத்தி, சாணி ஜலத்தால் வைத்திலிங்கத்தை அபிஷேகம் செய்து.............அவரை மற்றொருவருடன் கட்டித் தெருவில் இழுத்துச் சென்றார்களாம். இச் சம்பவங்களைப் பற்றிக் கேள்விப்பட்டு அக் கிராமத்திற்கு நான் சென்று பட்டாமணியம் உள்படச் சம்பந்தப்பட்டவர்கள் கொடுத்த வாக்கு மூலங்களை வாங்கி முதல் மந்திரிக்கு அனுப்பி, இதைப் பற்றி விசாரணை செய்ய வேண்டும் என்று கோரியிருக்கிறேன்.

2. தஞ்சைக்கு நாலு மைலுக்கப்பாலுள்ள மாரியம்மன் கோவில் கிராமத்தில் கொள்முதல் கூட்டம். அவ்வூர்வாசிகளாகிய நான்கு பேர்களை வண்டியில் ஏற்றிப் பலர் சேர்ந்து அடித்தார்கள். அவர்களை அரஸ்ட் செய்திருப்பதாகப் பயமுறுத்தினார்கள். அதில் இரண்டு பேர்களுக்குக் கலியாணம் நிச்சயமாகியிருந்த சமயம். அவர்கள் சார்பாக அந்த நபர்களை விடுவிக்கும்படி கோரப்பட்டது. அதன் பேரில் 200 பேர்கள் முன்னிலையில், 200 முட்டிக்கால் தோப்புக் கரணம் போட்டால் விட்டு விடுவதாகச் சொன்னார்கள். கெஞ்சிக் கொண்டதின் பலனாக 200ஐ 100 ஆகக் குறைத்தார்கள். செங்கற்கள் கொண்டு வரப்பட்டு, ஒவ்வொரு தரம் தோப்புக்கரணம் போடும் பொழுதும் முழங்கால் கல்லில் சத்தம் கேட்கும்படியாய்ப் போட வேண்டுமென உத்தரவு பிறந்தது. போட்டு விட்டு விடுதலை பெற்றுக் கலியாணமும் ஆகிவிட்டது!

• • • •


இன்னும் இப்படிப்பட்ட பல விஷயங்களைப் பற்றித் தகவல்கள் எனக்குக் கிடைத்துள்ளன.

எழுவாய்! பயனில்லை!!



மேற்கு ஐரோப்பாவில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக நான்கு வல்லரசுகளின் பிரதிநிதிகள் மாதக் கணக்கில் மகாநாடு நடத்தினார்கள். கடைசியில் ஒரு முடிவுக்கும் வராமல் கலைந்தார்கள்!

சிங்கம் கிழடுதானா?



பிரிட்டிஷார் பாரசீகத்தில் கோடானுகோடி மூலதனம் போட்டு நடத்தும் எண்ணெய்க் கிணறுகளைப் பாரசீக சர்க்கார் கட்டாயமாக வசப்படுத்திக் கொண்டனர். சிங்கம் சும்மா இருக்குமா? சொரூபத்தைக் காட்டுமா?

நீங்கள் எழுதி யிருக்கிறபடி ஒரு நீதிபதியை விசாரணை செய்யச் சொன்னால்தான் உண்மை தெரிய வரும். நான் இந்தக் கிராமங்களுக்கு நேரில் போய்ப் பலரையும் கண்டு விசாரித்தேன். அவர்கள் கொடுத்த வாக்குமூலங்களை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரிடமும் முதல் மந்திரியிடமும் சமர்ப்பித்தேன். அவர்கள் என்ன செய்வார்கள் என்று தெரிந்து கொள்ளக் காத்திருக்கிறோம். . . .

இப்படிக்கு
....
முனிசிபல் கவுன்ஸிலர், &
த. நா. கா. அங்கத்தினர்.

கடிதத்தில் எட்டு உதாரணங்கள் தரப்பட்டிருக்கின்றன. படிப்பதற்குப் பயங்கரமாகவும் அருவருப்பாகவும் இருக்கிறது. கடிதம் எழுதிய அன்பர் மேற்கூறிய சம்பவங்களை நேரில் பார்க்கவில்லை; பார்த்திருக்கவும் முடியாது தான். (த. நா. கா. கமிட்டி அங்கத்தினர் ஒருவரைக் கூட்டி வந்து பக்கத்தில் வைத்துக் கொண்டு இம்மாதிரி காரியங்களை அதிகாரிகள் செய்யும்படியாகத் தமிழ்நாடு இன்னும் அவ்வளவு சீர்கெட்டுப் போகவில்லை.) ஆகையால், சம்பவங்கள் ஒருவேளை மிகைப்படுத்தப் பட்டிருக்கலாம். ஆயினும் ஓரளவேனும் அடிப்படையில் உண்மையில்லாவிட்டால், இத்தகைய அருவருப்பான நிகழ்ச்சிகளை யாரும் கற்பனை செய்திருக்க மாட்டார்கள் அல்லவா!

யார் பேரில் புகார் செய்யப்படுகிறதோ, அந்த அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கே புகாரை அனுப்பி விசாரிக்கச் சொல்வதில் பயனில்லை. ஸ்தலத்திலுள்ள அதிகாரிகள் தங்கள் நிர்வாகத்தின் மீது நடந்தவற்றைப் பூசி மெழுகி "ஒன்றும் நடக்கவில்லை" என்று சொல்லிவிடத்தான் பார்ப்பார்கள்.

நம் பிரதமர் கனம் குமாரஸ்வாமி ராஜா அவர்கள் கொள்முதல் அட்டூழியங்கள் பற்றிக் கவனம் செலுத்துவதாக அறிந்து நமது மகிழ்ச்சியை வெளியிட்டிருந்தோம். பிரதமர் அடுத்த வாரத்தில் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்யப் போவதாக அறிகிறோம். அச்சமயம் நேரில் மேற்கூறிய கிராமங்கள் சிலவற்றுக்குச் சென்று உண்மையை விசாரித்தறிந்து காங்கிரஸ் ஆட்சியின் நல்ல பெயரை நிலைநாட்டுவார் என்று நம்புகிறோம்.

தஞ்சையே? உனக்கு இந்தக் கதியா?

காவிரி நதி பாயும் தஞ்சை ஜில்லா சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாக அறிஞர்களுக்கும், கலைஞர்களுக்கும், வீரர்களுக்கும் பிறப்பு அளித்திருக்கிறது.

சமீப காலத்தில், சென்ற நூறு ஆண்டுகளில் பல மேதாவிகளையும், தேசபக்தர்களையும் தோற்றுவித்திருக்கிறது.

தேசிய சுதந்திரப் போராட்டம் தொடங்கிய நாளிலிருந்து அப்போராட்டத்தின் முன்னணியில் இருந்து வந்திருக்கிறது.

மற்ற ஜில்லாக்களில் உள்ளது போல் பஞ்சமும் பற்றுக்குறையும் அங்கு இல்லை. பல ஜில்லாக்களின் பற்றுக் குறைக்கு அன்னமளித்து உதவும் நிலையில் இருக்கிறது.

கல்வியிலும் நாகரிகத்திலும் பொதுவாக எல்லாத் துறைகளிலும் மேம்பாடு அடைந்திருக்கிறது.

அத்தகைய ஜில்லாவில் மேற் கூறியவை போன்ற அட்டூழியங்கள் நடைபெறுகின்றன வென்றால், அதற்குச் சென்னை மந்திரி சபையை நாம் பொறுப்பாக்க விரும்பவில்லை; தஞ்சை ஜில்லாவிலுள்ள அதிகாரிகள் மீதும் குற்றம் சுமத்த விரும்பவில்லை.

தஞ்சை ஜில்லாவின் அரசியல் தலைவர்கள் மீதே குற்றம் சாட்டுகிறோம்.

*　　*　　*

தஞ்சை ஜில்லாவின் அரசியல் சென்ற சில காலமாகச் சீரழிந்து கிடக்கிறது.

சென்னைச் சட்டசபையில் தஞ்சை ஜில்லாவின் சார்பாக வந்திருக்கும் அங்கத்தினர்கள் பெரும்பாலும் பேசாமடந்தைகள்; அல்லது சுய காரியப் புலிகள்.

சென்னை மந்திரி சபையில் தஞ்சை ஜில்லாக் காரர் யாரும் கிடையாது.

தஞ்சை ஜில்லாவில் இப்போது ஒரு ஜில்லா காங்கிரஸ் கமிட்டி கிடையாது!

சென்னை மாகாணத்திலேயே ஜில்லா காங்கிரஸ் கமிட்டி இன்னும் ஏற்படாத பெருமையை தஞ்சாவூர் ஜில்லா மட்டுமே பெற்றிருக்கிறது!

தஞ்சை ஜில்லா இந்தக் கதியை அடைந்திருப்பதற்குக் காரணம் என்ன!

அந்த ஜில்லாவின் அரசியல் வாழ்வு ஒரு சில பெரிய மனிதர்களின் கையில் சிக்கியிருப்பதுதான் காரணம்.

பட்டுக்கோட்டை ஸ்ரீ நாடிமுத்துப் பிள்ளை, பூண்டி ஸ்ரீ கிருஷ்ணசாமி வாண்டையார், குன்னியூர் ஸ்ரீ சாம்பசிவ ஐயர், திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ முதலியார்,—இவர்களுக்குள் நடைபெறும் ஆதிக்கப் போராட்டந்தான் இன்றைக்குத் தஞ்சாவூர் ஜில்லா அரசியல்.

இந்தப் பெரிய மனிதர்கள் நாலுபேரும் ஒற்றுமையுடன் அரசியலில் ஈடுபட்டு வேலை செய்தால், எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்யலாம்; தஞ்சை ஜில்லாவை மாகாணத்தில் முதன்மையா யிருக்கச் செய்யலாம்; மாகாணத்துக்கே வழி காட்டிகளாகவும் இருக்கலாம்.

இவர்களுடைய அறிவு, ஆற்றல், ஆள்கட்டு, மற்ற வசதிகள் எல்லாம் இப்போது தங்களுக்குள் போரிடுவதிலேயே செலவாகி விடுகின்றன.

இதனால் மேற்கூறிய பிரமுகர்கள் மாகாண அரசியலில் தாங்கள் வகிக்க வேண்டிய ஸ்தானத்தை இழந்து விடுகிறார்கள்.

அத்துடன் தஞ்சை ஜில்லா மக்கள் அல்லல் படுகிறார்கள். தங்களுடைய சுக துக்கங்களை எடுத்துச் சொல்லிப் போராடுவதற்கு நல்ல பிரதிநிதிகள் இல்லாமல் தவிக்கிறார்கள்.

ஆகவே, தஞ்சை ஜில்லா மக்கள் இச்சமயம் விழித்தெழ வேண்டும். பொதுத் தேர்தல் நெருங்கி வரும் இச்சமயத்தில் தஞ்சை மக்கள்

சும்மா இருந்து விட்டால், அப்புறம் 'நாங் இள கன்று......' என்னும் பழமொழிக்கு உதாரணமாகும்படி நேரிடலாம்.

"ஐயா! பெரிய மனிதர்களே! நீங்கள் உங்கள் சண்டையை நிறுத்தி விட்டு ஜில்லா வாசிகளின் நன்மைகளைக் கவனிப்பதாயிருந்தால் சொல்லுங்கள்; இல்லாவிட்டால் நாங்கள் வேறு அரசியல் தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம்" என்று தஞ்சை ஜில்லா வாசிகள் கண்டிப்பாகச் சொல்லிவிட வேண்டும்.

உலகம் உங்களுக்கு!

இரண்டு வாரத்துக்கு முன்னால் "போட்டி போட வேண்டாம்!" என்று பிராமணப் பிள்ளைகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தோம் அல்லவா! அதன் பலன் கைமேல் கிட்டி விட்டது! இளைஞர் ஒருவர் அடி மடியில் கை போடவும் துணிந்து விட்டார். "எழுதிவிட்டீர், ஐயா! எழுதிவிட்டீர்! உமக்கு என்ன வந்தது! கையில் பேனா இருக்கிறது! பேனாவில் மசியும் இருக்கிறது! எழுதித் தள்ளி விட்டீர்! உம்முடைய யோசனையைக் கேட்டு என்ஜினியரிங் காலேஜுக்கு நான் போகாமலிருந்தால், உம்முடைய பத்திரிகாசிரியர் வேலையை இப்படி என்னிடம் தள்ளி விடுவீரா!" என்னும் பொருள்பட அந்த இளைஞர் காரசாரமாகக் கடிதம் எழுதி யிருக்கிறார்.

மேற்படி இளைஞர் தம்முடைய இருபது வயதுப் பிராயத்தை இப்படி நமக்குத் தள்ளி விட்டு, நமது முதிர்ந்த வயதையும் அநுபவத்தையும் பத்திரிகாசிரியர் வேலையையும் சேர்த்து எடுத்துக் கொள்வதா யிருந்தால், ரொம்ப ரொம்ப சந்தோஷத்துடன் அந்தப் பரிவர்த்தனைக்குச் சம்மதிக்கிறோம்.

அவருடைய இருபது வயதுப் பிராயம் நமக்குக் கிடைக்கும் பட்சத்தில் என்ஜினியரிங் காலேஜில் போய் முட்டிக் கொள்ளவும் மாட்டோம். அங்கு இடங் கிடைக்கவில்லை என்பதற்காக ஏங்கி நிற்கவும் மாட்டோம். "இந்த உலகமே நம்முடையது! நமது வருகைக்காகவே இவ்வுலகம் இத்தனை நாளும் காத்திருக்கிறது!" என்ற நம்பிக்கையுடன், உலகத்தை வெற்றி கொள்ளப் புறப்படுவோம்.

"உலகத்தை வெற்றி கொள்வதற்கு வழி என்ன!" என்று மற்றவர்களிடம் கேட்க மாட்டோம். நமக்கு நாமே வழி கண்டு பிடித்துக் கொண்டு செல்வோம்.

இம்மாதிரி உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் வாழ்க்கையில் இறங்கியவர்கள்தான் உலகில் அரிய காரியங்களைச் சாதித்துப் பெரிய வெற்றிகளையும் அடைந்திருக்கிறார்கள். இதற்கு உலக சரித்திரத்திலும் உதாரணம் இருக்கிறது; நம்முடைய கண் முன்னாலும் பல உதாரணங்கள் இருக்கின்றன.

நம்முடைய வேண்டுகோளைப் பரிபூரணமாக ஆதரித்து எழுதி யிருக்கும் நண்பர்கள் அத்தகைய சில உதாரணங்களைத் தங்கள் கடிதங்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது இளம் நண்பர்கள் அந்த உதாரணங்களைத் தெரிந்து ஞாபகத்தில் வைத்துக் கொள்வது நலம்.

ஸ்ரீ அனந்தராமகிருஷ்ணன் என்ற பெயரைத் தென்னிந்தியாவில் வர்த்தக உலகத்தில் அநுபவம் உள்ளவர்கள் அனைவரும் கேட்டிருப்பார்கள். இவர் கலாசாலைப் படிப்பு முடிந்து வெளியில் வந்ததும் சென்னைத் துறைமுக இலாகாவில் உத்தியோகத்துக்காக மனுப் போட்டார். அந்த உத்தியோகத்துக்கு அப்போது மாதம் நூற்றைம்பது ரூபாய் சம்பளம். உத்தியோகம் கிடைத்துவிடும் போலிருந்தது; ஆனால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை. அவர் பிராமண இளைஞர் என்ற காரணத்தினால் உத்தியோகம் கிடைக்கவில்லை. அதனால் ஸ்ரீ அனந்தராம கிருஷ்ணன் மனம் இடிந்துபோய் உட்கார்ந்து விடவில்லை. வேறு உத்தியோகம் பெற முயற்சி தொடங்கினார். சென்னை மவுண்ட்ரோட்டில் உள்ள ஸிம்ஸன் கம்பெனியில் உத்தியோகத்துக்கு அமர்ந்தார். இப்போது அக்கம்பெனியின் மானேஜிங் டைரக்டராக இருக்கிறார். மவுண்ட்ரோட்டில் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலை வரையில் அவர் நிர்வகிக்கும் கம்பெனிகளும் பண்டகசாலைகளும் தொழிற்சாலைகளும் வியாபித்திருக்கின்றன. அவருடைய நிர்வாகத்தின் கீழ் பதினாயிரம் பேர் உத்தியோகம் பார்த்து வருகிறார்கள். மாதம் இருநூறு ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குவோர் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவரை நமது சர்க்கார் நன்கு பயன்படுத்திக் கொண்டால் தென்னாட்டைத் தொழில் துறையில் "இணையில்லாத வளம் பொருந்தியதாக ஆக்கி விடலாம்" என்று விஷயம் தெரிந்தவர்கள் சொல்கிறார்கள்.

ஸ்ரீ அனந்தராம கிருஷ்ணனுக்கு அப்போது துறைமுகத்தில் வேலை கிடைத்திருந்தால், அவருக்கு எவ்வளவு நஷ்டம்!—தென்னாட்டுக்கே எவ்வளவு நஷ்டம் நேர்ந்திருக்கும்!

அடுத்த உதாரணம் மதுரை ஸ்ரீ டி. வி. சுந்தரமய்யங்கார் அவர்கள். இவருடைய பெயரை வர்த்தகத் துறையில் உள்ளவர்கள் மட்டுமின்றித் தமிழ் நாட்டார் அனைவருமே அறிந்திருப்பார்கள். "கடிகாரம் நின்றுபோய் விட்டதா! டி. வி. எஸ். பஸ் வரும்போது நேரத்தைச் சரிசெய்து கொள்ளலாம்!" என்று ஜனங்கள் சொல்லும்படியாக, அவ்வளவு நிர்வாகத் திறமையுடனே இவர் மோட்டார் பஸ் விடும் தொழிலை நடத்தினார். நாளடைவில் மோட்டார் விற்பனைக் கம்பெனிகளும், மோட்டார் ரிப்பேர் தொழிற்சாலைகளும் அமைத்தார். இவருடைய புதல்வர்கள் இன்றைக்குத் தொழில் துறையில் 'செப்போலியன்'களாக விளங்குகிறார்கள்.

ஸ்ரீ டி. வி. சுந்தரமய்யங்கார் வாழ்க்கை ஆரம்பித்தபோது சர்க்கார் உத்தியோகத்தில் ஈடுபட்டு அதிலேயே காலத்தைக் கழித்திருந்தால் ஒரு சிறிய பென்ஷன் பெற்றுக்கொண்டு நிம்மதியாக இருக்கலாம். ஆனால் "அப்படி அவர் செய்யாமல் போனாரே!" என்று

யாராவது இன்றைக்கு வருத்தப் படுவார்களா! அவருடைய புதல்வர்களிடம் கேட்டுப் பார்த்தால் தெரியும்!

சென்னை ஸ்ரீ சி. ராஜம் அவர்களைப் பற்றி ஒருவேளை அவ்வளவாகத் தெரியாமலிருக்கலாம். வாழ்க்கை ஆரம்பத்தில் அவர் மாதம் பத்து ரூபாய் சம்பளத்துக்கு ஈரோட்டுக்குப் போனார். தேடிப் போன வேலை கிட்டவில்லை. அங்கிருந்து கல்கத்தா சென்றார். லட்சக்கணக்கில் சம்பாதித்தார்; அப்படியே செலவும் செய்தார். தமது வாழ்க்கை அநுபவங்களையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு இன்று தம்மிடம் மிச்சமிருந்த பொருள் அவ்வளவையும் நன்கொடையாகக் கொடுத்துச் சென்னைக்கு அருகில் உள்ள குரோம்பேட்டை என்னும் இடத்தில் 'டெக்னலஜி' கலாசாலை ஒன்று ஏற்படுத்தி யிருக்கிறார்.

கடைசியாக தென்னாட்டில் மட்டுமின்றி பாரதநாடு முழுவதும் இன்று பெயர் பிரசித்தியாகியிருக்கும் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் அவர்கள் நமது இளைஞர்களின் கண் முன்னாலேயே நிற்கிறார். இண்டர்மீடியட் வகுப்போடு அவர் கல்வியை நிறுத்தியவர். அப்போது ஒரு உத்தியோகத்துக்கு அவர் போயிருந்தால், அல்லது சாக்ஷாத் என்ஜினியரிங் கலாசாலையிலே தான் சேர்ந்திருந்தால், இப்போது சாதித்திருக்கும் காரியங்களில் ஆயிரத்தில் ஒன்று சாதித்திருக்க முடியுமா! இந்தியாவிலேயே சிறந்த ஸ்டுடியோவின் சொந்தக்காரராயும், இந்தியாவிலேயே இணையில்லாத வெற்றி யளித்த படத்தின் டைரக்டராகவும் ஆகியிருக்க முடியுமா!

ஆனால் நமது இளம் நண்பர்கள் கேட்கலாம்; கட்டாயம் கேட்கத்தான் செய்வார்கள்.

"எல்லாரும் ஒரு அனந்தராமகிருஷ்ணனாகவோ, ஒரு டி. வி. சுந்தரமய்யங்காராகவோ, ஒரு சேஷசாயியாகவோ, ஒரு சி. ராஜமாகவோ, அல்லது (அடே அப்பா!) ஒரு எஸ்.எஸ். வாஸனாகவோ ஆகிவிட முடியுமா!" என்று ஆத்திரத்தோடு கேட்பார்கள்.

அவர்களை நாம் கேட்கிறோம். என்ஜினியரிங் கலாசாலையில் சேருகிறவர்கள் எல்லாரும் ஒரு சீப் என்ஜினியர் வெங்கடாச்சாரியாகவோ அல்லது சீப் என்ஜினியர் திருமலை அய்யங்காராகவோ ஆகிவிட முடியுமா!

ஒரு பெரிய மாகாணத்தில் இரண்டு அல்லது மூன்று சீப் என்ஜினியர் உத்தியோகங்கள் தானே இருக்க முடியும்!

இன்று என்ஜினியரிங் படிக்கும் மற்ற ஆயிரக்கணக்கானவர்கள் கீழ் உத்தியோகங்களில் தானே காலங் கழித்தாக வேண்டும்!

சீப் என்ஜினியர் வேலை வேண்டாம்; அடுத்த படியான ஸுபரின்டெண்டிங் என்ஜினியர் வேலைதான் எத்தனை இருந்துவிட முடியும்!

இதோ இன்றைக்கு (ஜூன் 26உ) டில்லியிலிருந்து வந்திருக்கும் செய்தியைப் பாருங்கள். ஆறு ஸுபரின்டெண்டிங் என்ஜினியர் உத்தியோகங்களை ரத்து செய்து விட்டதாக அச்செய்தி சொல்லுகிறது! இது ஒரு சிறிய அறிகுறிதான்! — இப்போதே உத்தியோகங்களை ரத்து செய்வதாக இருந்தால், வருங்காலத்தில் எப்படி இருக்கும் என்று ஊகித்துக் கொள்ளுங்கள்.

பிராமண இளைஞர்களுக்கு மட்டுமின்றி, எல்லா வகுப்புகளையும் சேர்ந்த இளைஞர்களுக்கும் சொல்லுகிறோம்: நீங்கள் ஆசைப்பட்டபடி என்ஜினியரிங் கலாசாலையிலோ வேறு கலாசாலையிலோ இடம் கிடைக்கா விட்டால், அதனால் 'எல்லாம் முழுகிப் போய் விட்டது!' என்று நிராசை அடைந்துவிட வேண்டாம்.

இதோ இந்தப் பரந்த உலகம் உங்களுடையது! இது உங்களுடைய வரவுக்காகவே காத்திருக்கிறது! — என்னும் நம்பிக்கையுடன் வேறு துறைகளைத் தேடுங்கள்!

அட்டைப்பட விளக்கம்

"நான் ஒரு கனவு கண்டேன். என் காதலி என் தலைமாட்டில் வந்து உட்கார்ந்து கொண்டு என் தலையைத் தன் தளிர்க் கரங்களால் நீவினாள். அவளுடைய மெல்லிய விரல்கள் என் தலை மயிரிடையே விளையாடியபோது, என் உள்ளத்தில் அளவில்லாததோர் ஆனந்த உணர்ச்சி பெருகியது.



"நான் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டேன். ஜன்னல் வழியாக வெளி உலகத்தைப் பார்த்தேன். வான் முகடு நட்சத்திரங்களின் ஒளியால் செம்பிழம்பாகத் திகழ்ந்தது. மண்ணுலகம் நிசப்தமாக இருந்தது. நானோ, 'இதே நிமிஷம் நான் கண்ட கனவுக்கு ஏற்றாற்போல — எதுகையாக — அவளும் கனவு காண்பாளோ' என்று எண்ணி வியந்தேன்."

இது கவியரசர் ரவீந்திரநாத டாகுரின் அற்புதக் கவி ஒன்றில் மிளிரும் கருத்து.

நமது சித்திரக்காரர் அந்த இன்பக் கனவு கண்ட காதலனின் வியப்பை இந்த இதழ் அட்டையில் கொண்டு வந்திருக்கிறார்.

அது மட்டுமல்ல; அக் காதலரை "ஐயா! உம்முடைய காதலி நீர் கனவு கண்ட அதே நேரத்தில் ஒரு கிளியை உம்மிடம் தூது அனுப்புவதாகக் கனவு கண்டாள். அது உம்முடைய கனவுக்கு ஏற்ற எதுகைதானா?" என்று கேட்கிறார்.

நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? — 'அப்படியும் இருக்கலாம்' என்கிறீர்களோ?

அக்கப்போர்

''ரேடியோ கருவி ஒன்று பலத்த சத்தத்துடன் கீழே விழுந்து உடைந்தது.''

—கல்கத்தா செய்தி

ரேடியோ கருவி இருந்தாலும் உடைந்தாலும் சத்தம் போடத் தவறுவது போலிருக்கிறது!

★

''இயந்திரங்கள் இயங்கும் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் அஜாக்கிரதையாக இருந்தால் கூட கைகால்கள் அகப்பட்டுக் கொள்ளாமல் தடுக்கும் ஒரு நூதன சாதனம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.'' —லண்டன் செய்தி

தொழிலாளர்கள் அஜாக்கிரதையாக இருக்கும் போது அவர்களை அனாவசியமான வேலை நிறுத்தத்தில் ஈடுபடுத்தும் நபர்களிடம் அவர்கள் அகப்பட்டுக் கொள்ளாமல் தடுக்க ஏதாவது சாதனம் இருக்கிறதா!

★

''டாக்டர் கோஷ் அவர்களை ஸ்ரீ கிருபளானி சந்தித்து ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்.''

—புதுடில்லிச் செய்தி

இதன் பலனாகக் கிருபளானி — கோஷ்டி ஏற்பட்டதில் வியப்பில்லை!

★

''சிரஞ்சீவி ... பி.ஏ. ஆனர்ஸ் அவர்களுக்கும் சௌபாக்கியவதி .... பி.எஸ்ஸி அவர்களுக்கும் ....ல் விவாதம் இனிது நடந்தது.''

—ஒரு விளம்பரம்

விவாகம் என்பதே வாழ்க்கையை எப்படி நடத்துவது என்பதைப் பற்றின ஒரு நீண்ட விவாதம்தானே!

★

''இந்த திராவிடக் கழகத்தினர் சிறையில் இருந்துகொண்டு சாப்பிடுவதைவிடத் தங்கள் சொந்த ஜில்லாவான தஞ்சைக்குச் சென்று உணவு உற்பத்தி செய்வது நல்லது. ஆகையால் இவர்களை விடுதலை செய்கிறேன்.''

—நீதிபதி மாக்

தஞ்சை ஜில்லாவுக்குப் போனாலும் அங்கும் இவர்கள் சாப்பிட்டுக் கொண்டுதானே இருப்பார்கள் என்கிறார் ஒரு தி. மு. க. அங்கத்தினர்.

★

''நெல்லூர் ஜில்லாவுக்கு என்று ஒதுக்கப்பட்ட ரூ. 32,000 பெறுமான மூன்று நூல் அதிசயமாக மறைந்து போய்விட்டது. போலீசார் விசாரித்து வருகின்றனர்.''

—நெல்லூர்ச் செய்தி

நெல்லூரில் மாயமாய் மறைந்த நூல் கர்நூல் ஜில்லாவில் கண்டெடுக்கப்படுமா!

★

''திருவனந்தபுரத்திலிருந்து சென்னை புறப்பட்ட விமானம் ஒன்று நெல்லை ஜில்லாவிலுள்ள கரிவலம் வந்த நல்லூர் கிராமத்தில் திடீரென இறங்கியது. காரணம் தெரியவில்லை!''

—ஒரு செய்தி

காரணம் தெரியாமல் என்ன! கரிவலம்வந்த நல்லூரைத் தானும் வலம் வரலாம் என்று அந்த விமானம் எண்ணி இருக்க வேண்டும்!

★

''காஷ்மீர் பிரச்னையில் இந்தியா விட்டுக் கொடுக்காததால் இனி காஷ்மீரின் விமோசனம் போர்க்களத்தில்தான் தீர்மானம் ஆக வேண்டும்'' என்று சர்தார் மூகம்மது ஆலம் கான் இங்கு கூறினார். —லாகூர் செய்தி

ஆலம் கான் ஆனதால்தான் அவர் பேச்சில் விஷம் இருக்கிறது போலும்.

★

''சங்கீத கலாநிதி ஸ்ரீ டி. எல். வெங்கடராமய்யர் சென்னை ஹைகோர்ட் நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.''

—ஒரு செய்தி

இனி சங்கீத சபைகள் தங்கள் மகாநாடுகளுக்குத் தலைமை வகிக்கச் சங்கீதம் தெரியாத நீதிபதிகளைத் தேடி அலைந்து அல்லல் பட வேண்டியதில்லை!

★

''கரும்பு விசேஷ கமிட்டி தன் அறிக்கையைச் சர்க்காருக்குச் சமர்ப்பித்து விட்டது.''

—சென்னைச் செய்தி

அறிக்கையில் கமிட்டியானது கரும்பு உற்பத்தி விஷயமாக நிலைமையைச் சக்கை வேறு சாறு வேறாகப் பிழிந்து காட்டி இருக்கும்.

★

''அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் நிரந்தர காரியதரிசி ஸ்ரீ சாதிக் அலி காங்கிரஸிலிருந்து ராஜிநாமா செய்து விட்டார்.''

—புதுடில்லிச் செய்தி

காங்கிரஸை விட்டு விலகிய ஸ்ரீ ஸாதிக் அலி என்ன ஸாதிக்கப் போகிறார் என்பது இனி மேல்தான் தெரிய வேண்டும்.

★

''துறைமுகத் தொழிலாளி ஒருவனை அவன் மேலதிகாரி அடிக்கவே, துறை முகத்திலிருந்த சுமார் இரண்டாயிரம் தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்து விட்டனர்.''

—பம்பாய்ச் செய்தி

தொழிலாளியை 'ஸ்டிரைக்' செய்தால் தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்வதில் வந்து முடியும் என்பது அந்த அதிகாரிக்கு ஏன் முன்பே 'ஸ்டிரைக்' ஆகவில்லை!

★

''தங்களுடைய தேர்தல் சின்னமாகத் தீவட்டியை ஹிந்துமகா சபைக்காரர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.'' —புதுடில்லிச் செய்தி

பொதுஜனங்களின் மனத்தைக் கொள்ளை கொள்ள முயற்சிக்கிறார்களா!

★


''எட்டு மாதங்களாக சைக்கிள்கள் திருடி வந்தவன் கைது.'' —சென்னைச் செய்தி

அவனுடைய சகடயோகம் முடிந்து விட்டது போலும்!

★

''தேச சேவைக் கருவியாக இருக்க நான் ஆசைப்படுகிறேன்.'' —ஸ்ரீ கிருபளானி

வெறும் கருவி என்று அவரை இனி யாரும் நினைக்க வேண்டாம்!



அத்தியாயம் 14

இரண்டு பூரண சந்திரர்கள்

அன்று தஞ்சை நகரம் அல்லோல கல்லோலப் பட்டது. பல காலமாகத் தலைநகருக்கு வராதிருந்த இளவரசி மனம் மாறித் தஞ்சைக்கு வருகிறார் என்றால் அந்த நகர மாந்தர்களின் எக்களிப்புக்குக் கேட்பானேன்? சோழ நாட்டில் இளவரசி குந்தவையின் அழகு, அறிவு, தயாளம் முதலிய குணங்களைப் பற்றித் தெரியாதவர்கள் இல்லை. தினம் ஒரு தடவையாவது ஏதேனும் ஒரு வியாஜம் பற்றி அவருடைய பெயரைக் குறிப்பிட்டுப் பேசாதவர்களும் இல்லை. இந்த வருஷம் நவராத்திரி வைபவத்துக்கு இளவரசி தஞ்சை அரண்மனையில் வந்திருப்பார் என்ற வதந்தி முன்னமே பரவி மக்களின் ஆவலை வளர்த்திருந்தது. எனவே, இன்றைக்கு வருகிறார் என்று தெரிந்ததும் தஞ்சைக் கோட்டை வாசலில் ஒரு ஜன சமுத்திரமே காத்துக் கொண்டிருந்தது. பூரண சந்திரனுடைய உதயத்தை எதிர்பார்த்து ஆல்லாத ஆரவாரம் செய்யும் ஜல சமுத்திரத்தைப் போல் இந்த ஜன சமுத்திரமும் ஆர்வம் மிகுந்து ஆரவாரம் செய்து கொண்டிருந்தது.

கடைசியில், பூரண சந்திரனும் உதயமாயிற்று. ஏன்? இரண்டு நிலாமதியங்கள் ஒரே சமயத்தில் உதயமாயின! தஞ்சைக் கோட்டை வாசலண்டை குந்தவை தேவி தன் பரிவாரத்துடன் வந்து சேர்ந்தபோது, கோட்டைக் கதவுகள் தடால் என்று திறந்தன. உள்ளேயிருந்து தேவியை வரவேற்று அழைத்துப் போவதற்காக அரண்மனைப் பரிவாரங்கள் வெளி வந்தன. அந்தப் பரிவாரங்களின் முன்னணியில் இரு பழுவேட்டரையர்களும் இருந்தார்கள். அது மட்டுமல்ல; அவர்களுக்குப் பின்னால், முத்துப் பதித்த தந்தப் பல்லக்கு ஒன்றும் வந்தது. அதன் பட்டுத் திரைகள் விலகியதும் உள்ளே பழுவூர் இளையராணி நந்தினி தேவியின் சுந்தர மதிவதனம் தெரிந்தது.

குந்தவை யானையிலிருந்தும் நந்தினி பல்லக்கிலிருந்தும் இறங்கினார்கள். நந்தினி விரைந்து முன்னால் சென்று குந்தவைக்கு முகமன் கூறி வரவேற்றாள். அந்த வரவேற்பைக் குந்தவை புன்னகை புரிந்து அங்கீகரித்தாள்.

சோழ நாட்டின் அந்த இரு பேரழகிகளையும் அங்கு ஒருங்கே கண்ட ஜனத்



இரவின் உற்சாகம் கரை புரண்டு ஓடியது. நந்தினி பொன் வர்ணமேனியாள்; குந்தவை செந்தாமரை நிறத்தினள். நந்தினியின் பொன் முகம் பூரண சந்திரனைப் போல் வட்ட வடிவமாயிருந்தது; குந்தவையின் திருமுகம் கைதேர்ந்த சிற்பிகள் வார்த்த சிலை வடிவத்தைப் போல் சிறிது நீள வாட்டமாயிருந்தது. நந்தினியின் செவ்வரியோடிய கருநிறக் கண்கள் இறகு விரித்த தேன் வண்டுகளைப் போல் அகன்று இருந்தன; குந்தவையின் கரு நீல வர்ணக் கண்கள் நீலோத்பலத்தின் இதழைப் போல் காதளவு நீண்டு பொலிந்தன. நந்தினியின் மூக்கு தட்டையாக வழுவழு வென்று தந்தத்தினால் செய்தது போல் திகழ்ந்தது. குந்தவையின் மூக்கு சிறிது நீண்டு பன்னீர்ப் பூவின் மொட்டைப் போல் இருந்தது. நந்தினியின் சிறிது தடித்த இதழ்கள் அமுதம் ததும்பும் பவழச் செப்பைப்போல் தோன்றியது. குந்தவையின் மெல்லிய இதழ்களோ தேன் பிலிற்றும் மாதுளை மொட்டெனத் திகழ்ந்தது. நந்தினி தன் கூந்தலைக் கொண்டை போட்டு மலர்ச் செண்டுகளைப் போல் அலங்கரித்திருந்தாள். குந்தவையின் கூந்தலோ "இவள் அழகின் அரசி" என்பதற்கு அடையாளமாகச் சூட்டிய மணி மகுடத்தைப் போல் அமைந்திருந்தது.

இப்படியெல்லாம் அந்த இரு வனிதா மணிகளின் அழகையும் அலங்காரத்தையும் தனித் தனியே பிரித்து ஒப்பிட்டுப் பார்த்து எல்லாரும் மகிழ்ந்தார்கள் என்று சொல்ல முடியாதுதான். ஆயினும் பொதுப் படையாக இருவரும் நிகரில்லா சௌந்தரிய வதிகள் என்பதையும், அங்க அமைப்பிலும் அலங்காரத்திலும் மாறுபட்டவர்கள் என்பதையும் அனைவருமே எளிதில் உணர்ந்தார்கள்.

நந்தினியின் பேரில் அதுவரையில் நகர மாந்தர்களுக்கு ஓரளவு அதிருப்தியும் அருவையையும் இருந்து வந்தன. குந்தவைப் பிராட்டியை ஒவ்வொருவரும் தங்கள் குல தெய்வமெனப் பக்தியுடன் பாராட்டினார்கள். ஆனால் இப்போது பழுவூர் இளைய ராணி கோட்டை வாசலுக்கு வந்து இளைய பிராட்டியை வரவேற்றது மக்களுக்கு மிகுந்த குதூகலத்தை விளைவித்தது.

மக்கள் இவ்விதம் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்கையில் நந்தினிக்கும் குந்தவைக்கும் நடந்த சம்பாஷணை மின்னலை

கல்கி

மின்னல் வெட்டும் தோரணையில் அமைந்தது.

"தேவி! வருக! வருக! எங்களை அடியோடு மறந்து

விட்டீர்களோ என்று நினைத்தோம். இளைய பிராட்டியின் கருணை எல்லையற்றது என்பதை இன்று அறிந்தோம்'' என்றாள் நந்தினி.

''அது எப்படி, ராணி! தூரத்திலிருந்தால் மறந்து விட்டதாக அர்த்தமா? நீங்கள் பழையாறைக்கு வராதபடியால் என்னை மறந்து விட்டதாக வைத்துக் கொள்ளலாமா?'' என்றாள் குந்தவை.

''தேன் மலரை நோக்கி வண்டுகள் தாமே வரும்; அழைப்பு வேண்டியதில்லை. அழகிய பழையாறைக்கு யாரும் வருவார்கள். இந்த அவலட்சணமான தஞ்சைக் கோட்டைக்குத் தாங்கள் வந்தது தங்கள் கருணையின் பெருமையல்லவா?''

''அது என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்? தஞ்சைபுரியை அவலட்சண நகரமென்று சொல்லலாமா? இங்கே சௌந்தரியத்தையே சிறைப்படுத்தி வைத்திருக்கும்போது?......'' என்றாள் இளைய பிராட்டி.

''நானும் அப்படித்தான் கேள்வியுற்றேன்; சக்கரவர்த்தியை இங்கே சிறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள் என்று. இனிமேல் கவலையில்லை. அவரை விடுவித்துச் செல்லத் தாங்கள் வந்து விட்டீர்கள் அல்லவா?'' என்று நந்தினி கூறியபோது அவளுடைய கண்களில் மின்வெட்டுத் தோன்றி மறைந்தது.

''அழகாயிருக்கிறது! சுந்தர சோழ சக்கரவர்த்தியைச் சிறை வைக்க இந்திராதி தேவர்களாலும் முடியாது. சிறிய மனிதர்களால் எப்படி முடியும்? நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை. சௌந்தரிய தேவதையான நந்தினிதேவியைப் பற்றிச் சொன்னேன்......''

''நன்றாகச் சொல்லுங்கள், தேவி! அவர் காது பட இதைச் சொல்லுங்கள். என்னைச் சிறையில் வைத்திருப்பதுபோலத்தான் பழுவூர் அரசர் வைத்திருக்கிறார். தாங்கள் கொஞ்சம் சிபாரிசு செய்து......''

''என் சிபாரிசு என்னத்துக்கு ஆகும்? தங்களை வைத்திருப்பது சாதாரண சிறையல்லவே? காதல் என்னும் சிறையல்லவா! அதிலும்......''

''ஆம், தேவி! அதிலும் கிழவருடைய காதல் சிறையாயிருந்து விட்டால் விமோசனமே இல்லை! ஏதோ 'பாதாளச் சிறை' என்கிறார்களே? அதில் அடைக்கப் பட்டவர்களாவது வெளி வரக் கூடும்! ஆனால்......''

''ஆமாம், ராணி! அதிலும் நாமாகப் போட்டுக் கொண்ட விலங்காயிருந்தால், நாமாகத் தேடிச் சென்ற சிறையாயிருந்தால், விடுதலை கஷ்டமானதுதான்!......சீதை, கண்ணகி, நளாயினி, சாவித்திரி வழியில் வந்தவர்கள் விடுதலை தேடவும் மாட்டார்கள்!......அதோ அங்கே என்ன அவ்வளவு கூச்சல்?'' என்றாள் குந்தவைப் பிராட்டி.

உண்மையாகவே, கோட்டை வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் திரளாக நின்று கொண்டிருந்த பெண்களின் நடுவிலிருந்து அந்தப் பெருங் கூச்சல் எழுந்து கொண்டிருந்தது. குந்தவையும் நந்தினியும் அவ்விடத்தை நெருங்கிப் போனார்கள். பெண்கள் பலர் ஏக காலத்தில் கூச்சலிட்டபடியால் முதலில் இன்னதென்று புரியவில்லை. பிறகு கொஞ்சம் விளங்கியது. இளைய பிராட்டியை அடிக்கடி அரண்மனைக்கு வந்து பார்க்க அவர்கள் விரும்புவதாகவும், ஆகையால் நவராத்திரி ஒன்பது நாளும் கோட்டைக்குள் பிரவேசிப்பதில் உள்ள கட்டுக் காவல்களை நீக்கிவிட வேண்டும் என்றும் அவர்கள் கோருவதாகத் தெரிந்தது

''ராணி! தங்கள் கணவரிடமாவது மைத்துனரிடமாவது சொல்லி, இவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றச் சொல்லுங்கள். கேவலம் இந்த ஸ்திரீகளைக் கண்டு பயப்படுவானேன்? இவர்களால் சோழ சாம்ராஜ்யத்துக்கு என்ன ஆபத்து வந்துவிடும்? பழுவூர் சகோதரர்களின் ஆணை நாலா திசையிலும் கடற்கரை வரையில் நீண்டு பரந்திருக்கிறது அல்லவா?'' என்றாள் குந்தவை.

''அது என்ன, கடற்கரையோடு நிறுத்தி விட்டீர்கள்? கடல்கடந்து அப்பாலும் அவர்களுடைய ஆணையும் அதிகாரமும் போகின்றன. இதற்கு அடையாளம் சீக்கிரமே கிடைக்கும்!'' என்று சொல்லி நந்தினி செய்த புன்னகை குந்தவையின் இருதயத்தைப் பிளந்தது. 'இந்தப் பாதகி வார்த்தையின் உட் கருத்து யாதாயிருக்கலாம்!' என்று சிந்தித்தாள்.

இதற்குள் நந்தினி பெரிய பழுவேட்டரையரைச் சமிக்ஞையால் அருகில்

அழைத்து அப்பெண்களின் கோரிக்கையையும் இளையபிராட்டியின் விருப்பத்தையும் தெரிவித்தான்.

"இளையபிராட்டியின் வார்த்தைக்கு எதிர்வார்த்தை ஏது?" என்றார் பழுவேட்டரையர்.

பின்னர், ஜனத்திரளின் கோலாகல ஆரவாரத்தினிடையே அவர்கள் கோட்டைக்குள் பிரவேசித்தார்கள்.

அன்று முதல் சில தினங்கள் தஞ்சை நகரும் சுற்றுப் புறங்களும் அளவில்லாக் குதூகல ஆரவாரத்தில் திளைத்துக்கொண்டிருந்தன. குந்தவை தேவி தஞ்சைக்கு வந்த சமயத்தில் நவராத்திரி உற்சவம் சேர்ந்து கொண்டது. பழுவேட்டரையரும் தம்முடைய வாக்கை நிறைவேற்றினர். தங்கு தடையில்லாமல் அந்தப் பத்து நாட்களிலும் ஜனங்கள் கோட்டைக்குள் புகவும் வெளி வரவும் அநுமதித்தார். கோட்டை வாசற் கதவுகள் சதா காலமும் அகலத் திறந்திருந்தன. கோட்டைக் குள்ளே அரண்மனைகளிலும் வெளியில் ஊர்ப் புறங்களிலும் பல கோலாகல நிகழ்ச்சிகள் நடந்து வந்தன. அவற்றைக் கண்டு களிக்கப் பெருந்திரளாக மக்கள் குழுமிக் கொண்டிருந்தார்கள். அக் கூட்டங்களின் நடுவே அடிக்கடி இரண்டு பூரண சந்திரர்கள் சேர்ந்தாற்போல் உதயமாகிக் கொண்டிருந்தார்கள். அந்தக் காட்சியைக் கண்டு ஜனசமுத்திரம் பொங்கிப் பூரித்து ஆரவாரித்தது. ஆனால் வெளியில் இவ்வாறு ஒரே உற்சவ உற்சாக குதூகலமாயிருந்தபோது. அந்த இரண்டு பூரண சந்திரர்களுடைய இதயப் பிரதேசங்களிலும் எரிமலைகள் பொங்கி அக்கினிக் குழம்பைக் கக்கிக் கொண்டிருந்தன. பழுவூர் இளையராணிக்கும் பழையாறை இளையபிராட்டிக்கும் ஓயாமல் போராட்டம் நடந்துகொண்டிருந்தது. சொல்லம்புகளைக் கொண்டும் விழிகளாகிற வேல்களைக் கொண்டும் அவ்விரு அழகிகளும் துவந்த யுத்தம் நடத்திக்கொண்டிருந்தார்கள். அந்தப் போராட்டத்தில் இரு பக்கமும் கூருள்ள வாள்கள் ஒன்றோடொன்று உராய்ந்த போது தீப்பொறிகள் பறந்தன. தீட்டிச் சாணை பிடித்த ஈட்டிகள் ஒன்றையொன்று தாக்கி ஜுவாலை வீசின. இருண்ட வானவெளியில் இரண்டு மின்னல்கள் ஒன்றையொன்று வெட்ட இரண்டும் சேர்ந்து துடிதுடித்தன. கொடிய அழகு வாய்ந்த இரண்டு பெண் புலிகள் ஒன்றையொன்று கட்டித் தழுவிக் கால் நகங்களினால் பிறாண்டி இரத்தம் கசியச் செய்தன. பயங்கர சௌந்தரியம் பொருந்திய இரண்டு நாக சர்ப்பங்கள் படம் எடுத்து ஆடி அவற்றின் கூரிய மெல்லிய சிவந்த நாக்குகளை நீட்டி ஒன்றையொன்று விழுங்கிவிடப் பார்த்தன.

இந்த அதிசயமான போராட்டத்தில் அவர்கள் உற்சாக வெறியும் அடைந்தார்கள்; வேதனைப் பட்டு உளம் புழுங்கியும் துடித்தார்கள்.

நகர மாந்தர்களின் உற்சாகத்திலும் கலந்து கொள்ளாமல், இந்த இரு சந்திரமதிகளின் போராட்டத்தையும் புரிந்து கொள்ளாமல், ஒரே ஒரு ஆத்மா தவித்துக் கொண்டிருந்தது. கொடும்பாளூர் இளவரசி வானதிக்கு இப்போதெல்லாம் இளையபிராட்டியுடன் பேசுவதற்கே அவகாசம் கிடைக்கவில்லை. அக்காளுடன் கூடக் கூடப் போனாளே தவிர, வெளியில் நடப்பது ஒன்றிலும் அவள் மனம் ஈடுபடவில்லை. தனக்குள்ளே ஒரு தனிமை உலகைச் சிருஷ்டித்துக் கொண்டு அதிலேயே சஞ்சரித்து வந்தாள்.

அத்தியாயம் 15

இரவில் ஒரு துயரக் குரல்

சோழ நாட்டில் அக்காலத்தில் ஆடல் பாடல் கலைகள் மிகச் செழிப் படைந்திருந்தன. நடனமும் நாடகமும் சேர்ந்து வளர்ந்திருந்தன. தஞ்சை நகர் சிறப்பாக நாடகக் கலைஞர்கள் பலரைத் தோற்றுவித்தது. அந்த நாளில் வாழ்ந்திருந்த கருவூர்த் தேவர் என்னும் சிவநேசச் செல்வர் 'இஞ்சி*சூழ்' தஞ்சை நகரைப் பற்றிப் பல பாடல்களில் கூறியிருக்கிறார்.

"மின்னேடும் புருவத்து இளமயிலனையார்
விலங்கல் செய் நாடகசாலை
இன்னடம் பயிலும் இஞ்சி சூழ் தஞ்சை"

* இஞ்சி — கோட்டை மதிள்.



என்று அவருடைய பாடல்களில்ஒன்று வர்ணிக்கிறது. தஞ்சை நகரில் நாடகக் கலை ஓங்கி வளர்ந்ததற்கு அறிகுறியாக நாடக சாலைகள் பல இருந்தன. அந்த நாடக சாலைகளில் எல்லாம் மிகச் சிறந்த நாடகசாலை சக்கரவர்த்தியின் அரண்மனைக் குள்ளேயே இருந்தது.

புதிய புதிய நாடகங்களைக் கற்பனை செய்து அமைக்கும் கலைஞர்கள் தஞ்சை நகரில் வாழ்ந்து வந்தனர். அதற்கு முன்னெல்லாம் புராண இதிகாச காவியங்களில் உள்ள கதைகளையே நாடகங்களாக அமைத்து நடிப்பது வழக்கம். சில காலமாகத் தஞ்சை நாடகக் கலைஞர்கள் வேறொரு துறையில் கவனம் செலுத்தி வெற்றி பெற்றிருந்தார்கள். சரித்திரப் புகழ்பெற்ற வீரர்களின் வரலாறுகளை அவர்கள் நாடகமாக அமைத்தார்கள். அவர்களுடைய காலத்துக்குச் சிறிது முற்பட்டவர்களின் வீரக் கதைகளையும் நாடகங்களாக்கி நடித்தார்கள். அப்படிப்பட்ட வீரர்கள் சோழ வம்சத்தில் பிறந்தவர்களைப் போல் வேறு எங்கே உண்டு? ஆகையினால், கரி

கால் வளவர், விஜயாலய சோழர், பராந்தக தேவர் முதலிய சோழ வம்சத்து மன்னர்களின் சரித்திரங்களை நாடகங்களாக்கி நடித்தார்கள்.

நவராத்திரித் திருநாளில் சக்கரவர்த்தியின் அரண்மனையில் சோழ வம்சத்து மன்னர்களின் வீர சரித்திர நாடகம் மூன்று நாட்கள் நடைபெற்றன. சித்திர விசித்திரமாக அமைத்த நாடகசாலைக்கு எதிரே அரண்மனை நிலா முற்றத்தில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூடியிருந்து நாடகங்களைக் கண்டு களித்தார்கள். அரண்மனைப் பெண்டிர் அமர்வதற்கு ஒரு தனியான இடம், நீலப் பட்டு விதானத்தின் கீழ் முத்திழைத்த சித்திரத் தூண்களுடன் ஏற்பாடாகி இருந்தது. அதன் கீழ் மகாராணிகளும், இளவரசிகளும், அவர்களுடைய அந்தரங்கத் தோழிமார்களும் அமர்ந்து நாடகம் பார்த்தார்கள். அப்போதெல்லாம் குந்தவை தேவிக் அருகாமையிலேயே நந்தினி வந்து உட்கார்ந்தாள். இது மற்றப் பெண்களில் சிலருக்குப் பிடிக்கவில்லையென்றாலும், அதை அவர்கள் மனதிலேயே வைத்துக் கொண்டு பொருமினார்களேயன்றி வேறெதுவும் செய்ய முடியவில்லை. பெரிய பழுவேட்டரையர், பழுவூர் இளையராணி இவர்களுடைய கோபத்துக்குப் பாத்திரமாக யாருக்குத்தான் துணிவு இருக்கும்? இளைய பிராட்டியே அந்தக் கர்வக்காரிக்கு அவ்வளவு மதிப்பளித்து மரியாதை செய்யும் போது மற்றவர்கள் எம்மாத்திரம்?

சோழ வம்ச மன்னர்களைப் பற்றிய மூன்று நாடகங்களில் மூன்றுவதான பராந்தக தேவர் நாடகம் மிகச் சிறந்து விளங்கியது. அன்றைக்குத்தான் நாடகம் பார்த்த ஜனங்களின் மத்தியில் ஒரு சிறிய சலசலப்புத் தோன்றி வளர்ந்தது.

அதுவரை சோழ நாட்டை அரசு புரிந்த சோழ மன்னர் பரம்பரையில் சுந்தரச் சோழரின் பாட்டனா



ரான கோப்பரகேசரி பராந்தகர் வீரப் புகழில் சிறந்து விளங்கினார். சுமார் நாற்பத்தாறு ஆண்டுகள் இவர் ஆட்சி நடத்தினார். இவருடைய காலத்தில் சோழ சாம்ராஜ்யம் விரிந்து பரவியது. ஈழ நாட்டிலிருந்து துங்கபத்திரை நதி வரையில் அவருடைய ஆணை சென்றது. பல போர்கள் நடந்தன; மகத்தான வெற்றி கிடைத்தன. 'மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வர்மர்' என்ற பட்டம் பெற்றார். தில்லைச் சிதம்பரத்தில் சிற்றம்பலத்துக்குப் பொன் வேய்ந்து புகழ் பெற்றார். இவருடைய வாழ்க்கையின் இறுதியில் சில தோல்விகள் ஏற்பட்டு இராஜ்யம் சுருங்கியது. ஆனால் இவருடைய வீரப் புகழ் மட்டும் குன்றவில்லை. வடக்கே இரட்டை மண்டலத்திலிருந்து கடல் போன்ற மாபெரும் சைன்யத்துடன் படையெடுத்து வந்த கன்னரதேவன் என்னும் அரசனுடன் தக்கோலத்தில் இறுதிப் பெரும்போர் நடந்தது. இப்போரில் பராந்தகருடைய மூத்த புதல்வராகிய இராஜாதித்தர், — இந்தப் பரத கண்டம் என்றும் கண்டிராத வீராதி வீரர்,— படைத் தலைமை வகித்தார். கன்னரதேவனுடைய சைன்யத்தை முறியடித்து விட்டு யானை மீதிருந்தபடி உயிர் துறந்து வீர சொர்க்கம் எய்தினார். அந்த வீரருடைய அம்பு பாய்ந்த சடலத்தை அப்படியே ஊருக்கு எடுத்து வந்தார்கள். அரண்மனையில் கொண்டு சேர்த்தார்கள். பராந்தக சக்கரவர்த்தியும் அவருடைய தேவிமார்களும் நாட்டைப் பாதுகாப்பதற்காக உயிர் துறந்த வீரப் பெருமகனின் உடலைத் தங்கள் மத்தியில் போட்டுக்கொண்டு கண்ணீர் பெருக்கினார்கள். திரைக்குப் பின்னாலிருந்து அசரீரி வாக்கு "வருந்தற்க! வருந்தற்க! இளவரசர் இராஜாதித்தர் இறக்கவில்லை; சோழநாட்டு மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் கோயில் கொண்டு விளங்குகிறார்!" என்று முழங்கிற்று. இந்த இறுதிக் காட்சியுடன் நாடகம் முடிவடைந்தது.

அந்தத் தலைமுறைக்கு முந்திய தலைமுறையில் நடந்த வீர சம்பவங்கள் நிறைந்த இந்த நாடகத்தை ஜனங்கள் பிரமாதமாக ரஸித்து மகிழ்ந்தார்கள். சபையோருக்குள்ளே சல சலப்பு ஏற்பட்டதன் காரணம் என்னவென்றால்; பராந்தக தேவரது காலத்தில் நடந்த பெரும்போர்களில் அவருக்கு இரண்டு சிற்றரசர்கள் அருந்துணையாக இருந்தார்கள். ஒருவர் கொடும்பாளூர் சிற்றரசர்; இன்னொருவர் பழுவூர்க் குறுநில மன்னர். இந்த இருவரும் சோழ வம்சத்தாருடன் உறவுத் தளையினால் பிணைக்கப்பட்டவர்கள். பெண் கொடுத்துப் பெண் வாங்கியவர்கள். இருவரும் இரண்டு கரங்களைப் போல் பராந்தகருக்கு உதவி வந்தார்கள். யார் வலக்கை, யார் இடக்கை என்று சொல்ல முடியாமலிருந்தது. இருவரையும் தம் இரண்டு கண்களைப் போல்ப் பராந்தக சோழர் ஆதரித்து, சன்மானித்து வந்தார். இரண்டு கண்களில் எது உயர்வு, எது தாழ்வு என்று சொல்ல முடியாது தானே? இப்போது அதிகாரம் செலுத்தி வந்த பழுவேட்டரையர்களின் பெரிய தந்தை பராந்தகருக்கு உதவி செய்தவர். அவர் பெயர் பழுவேட்டரையர் கண்டன் அமுதனார். ஈழத்தில் உயிர் துறந்த கொடும்பாளூர்ச் சிறிய வேளாரின் தந்தைதான் (அதாவது வானதியின் பாட்டனார்) பராந்தக தேவருக்குத் துணை புரிந்த கொடும்பாளூர்ச் சிற்றரசர்.

பராந்தக தேவரின் நாடகம் நடத்தியவர்கள் மேற்கூறிய இரண்டு சிற்றரசர்களுக்குள்ளே எவ்வித உயர்வு தாழ்வும் வேற்றுமையும் கற்பியாமல் மிக ஜாக்கிரதையாகவே நாடகத்தை ஒத்திகை செய்திருந்தார்கள். இருவருடைய வீரப் புகழும் நன்கு வெளியாகும்படி நடித்தார்கள். பராந்தக தேவர் அந்த இரு வீரர்களையும் சமமாகச் சன்மானித்ததைக் குறிப்பாக எடுத்துக் காட்டினார்கள்.

ஆனபோதிலும் நாடகம் பார்த்த சபையோர் அத்தகைய சமபாவத்தைக் கொள்ளவில்லையென்பது சீக்கிரத்திலேயே வெளியாயிற்று. அவர்களில் சிலர் கொடும்பாளூர்க் கட்சி என்றும் வேறு சிலர் பழுவூர்க் கட்சி என்றும் தெரிய வந்தது. கொடும்பாளூர்த் தலைவன் வீரச் செயல் புரிந்ததை நாடக மேடையில் காட்டிய போது சபையில் ஒருபகுதியார் ஆரவாரம் செய்தார்கள். பழுவூர் வீரன் மேடைக்கு வந்ததும் இன்னும் சிலர் ஆரவாரித்

தார்கள். முதலில் இந்தப் போட்டி சிறிய அளவில் இருந்தது. வரவரப் பெரிதாகி வளர்ந்தது. நாடகத்தின் நடுநடுவே "நாவலோ* நாவல்!" என்னும் சபையோரின் கோஷம் எழுந்து நாலு திசைகளிலும் எதிரொலியைக் கிளப்பியது.

சபையில் எழுந்த இந்தப் போட்டி கோஷங்கள் குந்தவை தேவிக்கு உற்சாகத்தை அளித்தன. கொடும்பாளூர் கட்சியின் கோஷம் வலுக்கும்போது பக்கத்திலிருந்த கொடும்பாளூர் இளவரசியைத் தூண்டி, "பார்த்தாயா, வானதி! உன் கட்சி இப்போது வலுத்து விட்டது!" என்பாள். கள்ளங்கபடற்ற வானதியும் அதைக் குறித்துத் தன் மகிழ்ச்சியைப் புலப்படுத்துவாள். பழுவூர்க் கட்சியாரின் கோஷம் வலுக்கும் போது இளைய பிராட்டி நந்தினியைப் பார்த்து, "ராணி! இப்போது உங்கள் கட்சி பலத்து விட்டது!" என்பாள். ஆனால் இது நந்தினிக்கு உற்சாக மூட்டவில்லை என்பதை அவள் முகக்குறி புலப்படுத்தியது. இந்த மாதிரி ஒரு போட்டி ஏற்பட்டதும், அதிலே ஜனங்கள் பகிரங்கமாக ஈடுபட்டுக் கோஷமிடுவதும், இளைய பிராட்டி அதை மேலும் தூண்டி விட்டு வருவதும், அந்த அற்பச் சிறுமி வானதியையும் தன்னையும் ஒரு நிறையில் சமமாக வைத்துப் பரிகசிப்பதும் நந்தினியின் உள்ளக் கனலைப் பன்மடங்கு வளர்த்து வந்தது. கோபித்துக் கொண்டு எழுந்து போய் விடலாமா என்று பலதடவை தோன்றியது. அப்படிச் செய்தால் அந்தப் போட்டியைப் பிரமாதப் படுத்தித் தன் தோல்வியை ஒப்புக் கொண்டதாகும் என்று எண்ணிப் பழுவூர் ராணி பல்லைக் கடித்துக் கொண்டிருந்தாள்.

இதை யெல்லாம் குந்தவை கவனித்து வந்தாள். நந்தினியின் மனோநிலையைக் கண்ணாடியில் பார்ப்பதுபோல் அவளுடைய முகத் தோற்றத்திலிருந்து தெரிந்து கொண்டு வந்தாள். ஆனால் வேறொரு விஷயம் இளைய பிராட்டிக்குத் தெரியாத மர்மமாயிருந்தது.

போரில் பாண்டியமன்னன் தோல்வியடைந்தது, அவன் இலங்கை மன்னனிடம் சென்று சரணாகதி அடைந்தது, இலங்கை மன்னனிடம் உதவி பெறாமல் மணிமகுடத்தையும், இரத்தின ஆரத்தையும் அங்கேயே விட்டுவிட்டுச் சேர நாட்டுக்கு ஓடியது முதலியவற்றை நாடகத்தில் காட்டிய போது சபையோர் அனைவருமே அளவிலா உற்சாகத்தைக் காட்டினார்கள். ஆனால் நந்தினியின் முகம் மட்டும் அப்போதெல்லாம் மிக்க மன வேதனையைப் பிரதிபலித்தது. இதன் காரணம் என்னவென்பது பற்றி இளைய பிராட்டி வியப்புற்றாள். கொஞ்சம் பேச்சுக் கொடுத்துப் பார்க்கலாம் என்று எண்ணி, "சக்கரவர்த்தியும் நம்முடன் இருந்து இந்த அருமையான நாடகத்தைப் பார்க்க முடியாமற் போயிற்றே? பாட்டனார் சாதித்த இக் காரியங்களை இவரும் தம் காலத்தில் சாதித்திருக்கிறார் அல்லவா? அப்பாவுக்கு மட்டும் உடம்பு குணமானால்?......" என்றாள்.

"தானே உடம்பு குணமாகி விடுகிறது. அவருடைய செல்வப் புதல்வியும் இங்கு வந்து விட்டார்கள். இலங்கையிலிருந்து மூலிகையும் சீக்கிரம் வந்து விட்டால் சக்கரவர்த்திக்கு நிச்சயம் உடம்பு குணமாகி விடும்" என்றாள் நந்தினி.

"இலங்கையிலிருந்து மூலிகை வருகிறதா? அது என்ன?" என்றாள் குந்தவை.

"தெரியாதவரைப் போல் கேட்கிறீர்களே? இலங்கையிலிருந்து மூலிகை கொண்டு வரப் பழையாறை வைத்தியர் ஆள் அனுப்பியிருக்கிறாராமே? தாங்கள்தான் ஆள் கொடுத்து உதவினீர்கள் என்று கேள்விப்பட்டேனே? அது பொய்யா?"

குந்தவை பல்லினால் உதட்டைக் கடித்துக் கொண்டாள். பார்ப்பதற்கு முல்லை மொக்கைப் போல் பல்வரிசை அழகாயிருந்தாலும் கடிக்கப்பட்ட உதடுகளுக்கு வலிக்கத்தான் செய்தது. நல்ல வேளையாக "நாவலோ நாவல்!" என்னும் பெருங் கோஷம்

★ இந்த நாளில் உற்சாகத்தையும் ஆதரவையும் காட்டுவதற்கு ஜனங்கள் ஜயகோஷம் செய்வது போல் அக்காலத்தில் "நாவலோ நாவல்!" என்று சத்தமிடுவது வழக்கம்.

அச்சமயம் எழுந்தபடியால அந்தப் பேச்சு அத்துடன் தடைப்பட்டது.

* * *

சுந்தர சோழரின் வண்மையும் வனப்பும் ஆயுளும் அரசும் வாழ்கென வாழ்த்திவிட்டு நாடகம் முடிவடைந்தது. சபையோர் கலைந்து ஆனந்த குதூகலத்தினால் ஆடிக்கொண்டு தத்தம் வீடு சென்றார்கள். சிற்றரசர்களின் தேவிமார்களும் அவர்களுடைய பரிவாரங்களும் சென்றார்கள். பின்னர், சக்கரவர்த்தினி வானமகா தேவியும் மற்றுமுள்ள அரண்மனைப் பெண்டிரும் சோழர் குல தெய்வமான துர்க்கையம்மன் ஆலயத்துக்குப் புறப்பட்டார்கள்.

சுந்தர சோழர் உடல் நலம் எய்தும்படி மலையமானின் புதல்வி பல நோன்புகள் நோற்று வந்தார். துர்க்கை அம்மன் கோயிலுக்கு அடிக்கடி சென்று அவர் பிரார்த்தனை செலுத்துவது உண்டு. நவராத்திரி ஒன்பது நாள் ராத்திரியும் துர்க்கை அம்மனுக்கு விசேஷ பூஜைகள் நடந்தன. சக்கரவர்த்தியின் சுகத்தைக் கோரிப் பலிகள் இடப்பட்டன. ஒவ்வொரு நாள் இரவும் மகாராணி கோயிலுக்குச் சென்று அர்த்த ஜாம பூஜைக்குப் பிறகு திரும்புவது வழக்கம். அரண்மனையின் மூத்த பெண்டிர் பலரும் மகாராணியுடன் ஆலயத்துக்குச் செல்வார்கள்.

இளம் பெண்களை துர்க்கை சந்நிதிக்கு அழைத்துப் போகும் வழக்கமில்லை. பூசாரிகள் மீது சில சமயம் சந்நதம் வந்து அகோரமாக ஆடுவார்கள். சாபம் விளைந்த வரலாறுகளைச் சொல்லுவார்கள். இளம் பெண்கள் பயப்படக் கூடும் என்று அழைத்துப் போவதில்லை.

ஆனால் இளைய பிராட்டியிடம் "நீ பயந்து கொள்வாய்!" என்று சொல்லி நிறுத்த யாருக்குத் தைரியம் உண்டு? அந்த ஒன்பது தினமும் தாய்மார்களுடன் குந்தவையும் துர்க்கை கோயிலுக்குச் சென்று அம்மனுக்குப் பிரார்த்தனை செலுத்தி வந்தாள். இச்சமயங்களில் வானதி தனியாக அரண்மனையில் இருக்கவேண்டி நேர்ந்தது.

பராந்தக தேவர் நாடகம் நடந்த அன்று இரவு வானதியின் உள்ளம் உற்சாகத்தினால் பூரித்திருந்தது. தன் குலத்து முன்னோர்கள் செய்த வீரச் செயல்களை அரங்க மேடையில் பார்த்து அவளுக்குப் பெருமிதம் உண்டாகியிருந்தது. அத்துடன் இலங்கை நினைவும் சேர்ந்து கொண்டது. ஈழப் போரில் இறந்த தன் தந்தையின் நினைவும், தந்தையின் மரணத்துக்குப் பழி வாங்கி வரச் சென்றிருக்கும் இளவரசரின் நினைவும் இடைவிடாமல் எழுந்தன. தூக்கம் சிறிதும் வரவில்லை. கண்ணிமைகள் மூடிக்கொள்ள மறுத்தன. இளைய பிராட்டி ஆலயத்திலிருந்து திரும்பி வந்து அன்றைய நாடகத்தைப் பற்றி அவருடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தால் பிறகு தூக்கம் வரலாம்; அதற்குமுன் நிச்சயமாக இல்லை.

வெறுமனே படுத்துப் புரண்டு கொண்டிருப்பதைக் காட்டிலும் அரண்மனை மேல் மாடத்தில் சற்று உலாவி வரலாமே என்று தோன்றியது. மேன்மாடத்திலிருந்து பார்த்தால் தஞ்சை நகரின் காட்சி முழுதும் தெரியும். துர்க்கை ஆலயத்தைக் கூடப் பார்த்தாலும் பார்க்கலாம்.— இவ்விதம் எண்ணிப் படுக்கையை விட்டு எழுந்து சென்றாள். அந்த அரண்மனைக்கு வானதி புதியவள் தான். ஆயினும் மேன்மாட நிலா முற்றத்தைக் கண்டு பிடிப்பது அவ்வளவு ஒன்றும் கஷ்டமாயிராது. நீள நெடுகப் பாதைகளும் இருபுறமும் தூண்களும் தூங்கா விளக்குகளும் இருக்கும்போது என்ன கஷ்டம்?

பாதைகள் சுற்றிச் சுற்றிச் சென்று கொண்டிருந்தன. முன்னிரவில் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசித்த விளக்குகள் பல அணைந்து விட்டன. சில புகை சூழ்ந்து மங்கலான ஒளி தந்தன. ஆங்காங்கு பாதை முடுக்குகளில் தாதிமார்கள் படுத்தும் சாய்ந்தும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களை எழுப்பி வழி கேட்க இஷ்டப்படாமல் வானதி மேலும் சென்று கொண்டிருந்தாள். அந்த அரண்மனைப் பாதைகளுக்கு ஒரு முடிவே யில்லை போலத் தோன்றியது.

திடீரென்று ஒரு குரல் கேட்டது. அது தீனமான துயரக் குரலாகத்

தொனித்தது. வானதிக்கு ரோமாஞ்சனம் உண்டாயிற்று. உடம்பு நடுங்கியது. அவளுடைய கால்கள் நின்ற இடத்திலேயே நின்றன.

மறுபடியும் அந்த அபயக் குரல்.

"என்னைக் காப்பாற்றுவார் யாருமில்லையா?"

ஆகா! இது சக்கரவர்த்தியின் குரல் போல அல்லவா இருக்கிறது? என்ன ஆபத்தோ தெரியவில்லையே? உடல் நோயின் கோளாறு? அல்லது வேறு ஏதாவது இருக்குமா? சக்கரவர்த்தினி முதலிய மூத்த பெண்டிர் அனைவரும் கோயிலுக்குச் சென்று விட்டார்களே? சக்கரவர்த்திக்குப் பக்கத்தில், யாரும் இல்லாமலா இருப்பார்கள்? ஆயினும் போய்ப் பார்க்கலாம்.

நடுங்கிய கால்களை மெதுவாக எடுத்துவைத்து வானதி மேலும் சில அடி நடந்தாள். குரல் கீழே யிருந்து வருவதாகத் தோன்றியது. அந்த இடத்தில் பாதையும் முடிந்தது. குனிந்து பார்த்தால் கீழே ஒரு விசாலமான மண்டபம் தெரிந்தது. ஆகா! சக்கரவர்த்தியின் சயனக்கிரஹம் அல்லவா இது? ஆம்; அதோ சக்கரவர்த்திதான் படுத்திருக்கிறார்; தன்னந் தனியாகப் படுத்திருக்கிறார். மேலும் ஏதோ அவர் புலம்புகிறார். என்னவென்று கேட்கலாம்.

"அடி பாவி! உண்மை தானடி! நான் உன்னைக் கொன்று விட்ட உண்மைதான்! வேண்டுமென்று கொல்லவில்லை. ஆனாலும் உன் சாவுக்கு நான்தான் காரணம். அதற்கு என்ன செய்யச் சொல்கிறாய்? வருஷம் இருபத்தைந்து ஆகிறது. இன்னமும் என்னை விடாமல் சுற்றுகிறாயே? உன் ஆத்மாவுக்குச் சாந்தி என்பதே கிடையாதா? எனக்கும் அமைதி தரமாட்டாயா? என்ன பிராயச்சித்தம் செய்ய ,வேண்டுமோ, சொல்! அந்தப்படி செய்து விடுகிறேன். என்னை விட்டுவிடு!...... ஐயோ! என்னை இவளுடைய கொடுமையிலிருந்து விடுவிப்பார் யாருமில்லையா? எல்லாரும் என் உடல் நோய்க்கு மருந்து தேடுகிறார்களே! என் மனநோயைத் தீர்த்துக் காப்பாற்றுவார் யாரும் இல்லையா!......போ! போ! போய்விடு!......இல்லை, போகாதே! நில்! நான் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லி விட்டுப் போ! இப்படி மௌனம் சாதித்து என்னை வதைக்காதே! வாயைத் திறந்து ஏதாவது சொல்லி விட்டுப் போ!"

இந்த வார்த்தைகள் வானதியின் காதில் இரும்பைக் காய்ச்சி விடுவது போல் விழுந்தன. அவளுடைய உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் குலுங்கியது. தன்னையறியாமல் கீழே குனிந்து பார்த்தாள். மண்டபத்தில் நாலாபுறமும் அவளுடைய பார்வை சென்ற வரையில் பார்த்தாள்.

சக்கரவர்த்திக்கு எதிரில் சற்றுத் தூரத்தில் ஓர் உருவம் நின்றுகொண்டிருந்தது. அது பெண்ணின் உருவம். பாதி உருவந்தான் தெரிந்தது. பாக்கிப் பாதி தூண் நிழலிலும் அகில் புகையிலும் மறைந்திருந்தது. தெரிந்த வரையில் அந்த உருவம்...ஆ! பழுவூர் இளைய ராணியைப் போல அல்லவா இருக்கிறது? இது என்ன கனவா! சித்தப் பிரமையா? இல்லை! உண்மையேதான்! அதோ அந்தத் தூண் மறைவில் ஒளிந்து நிற்பது யார்? பெரிய பழுவேட்டரையர் அல்லவா? சந்தேகமில்லை! அவர்கள்தான்! பழுவூர் இளைய ராணியைப் பார்த்து விட்டா சக்கரவர்த்தி அப்படியெல்லாம் பேசுகிறார்? "உன்னைக் கொன்றது உண்மைதான்" என்று அலறினாரே, அதன் பொருள் என்ன?......

திடீரென்று வானதிக்கு மயக்கம் வரும்போலிருந்தது; தலை சுற்றத் தொடங்கியது. இல்லை, அந்த அரண்மனையே சுற்றத் தொடங்கியது. சீச்சீ! இங்கே மயக்கமடைந்து விழக்கூடாது. கூடவே கூடாது.

பல்லைக் கடித்துக்கொண்டு வானதி அங்கிருந்து சென்றாள். ஆனால் திரும்பிச் செல்லும் பாதை தொலையாத பாதையாயிருந்தது. அவள் படுத்திருந்த அறை வரவே வராது போல் தோன்றியது. முடியாது; இனிமேல் நடக்க முடியாது; நிற்கவும் முடியாது.........

குந்தவைப்பிராட்டி கோயிலிலிருந்து திரும்பி வந்தபோது வானதி அவள் அறைக்குச் சற்றுத் தூரத்தில் நடைபாதையில் உணர்வற்றுக் கட்டை போல் கிடப்பதைக் கண்டாள்.

*** இந்த வாரத்தில் "புதுமைப் பித்தன்" நினைவு நாள். தமிழ் இலக்கிய ரஸிகர்களால் கொண்டாடப்படுகிறது. பலவித ரஸங்களும் பொருந்திய அருமையான சிறு கதைகளைப் "புதுமைப் பித்தன்" தமிழுக்கு அளித்திருக்கிறார். தமிழ் இலக்கியத்துக்குப் புதுமைப் பித்தன் செய்திருக்கும் தொண்டின் ஞாபகார்த்தமாகக் "கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்" என்னும் கதையைக் கீழே பிரசுரிக்கிறோம். இந்தக் கதையில் புதுமைப் பித்தனின் கற்பனைத்திறனும் நகைச்சுவையும் தளிர்விட்டுப் பொங்குவதைக் காணலாம்.

கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்

"புதுமைப் பித்தன்"

மேலகரம் மே. க. ராமசாமிப் பிள்ளை அவர்களின் ஏக புத்திரனும் செல்லப்பா என்பவருமான மேலகரம் மே. க. ரா. கந்தசாமிப் பிள்ளையவர்கள், 'பிராட்வே'யும், 'எஸ்பிளனேடு'ம் கூடுகிற சந்தியில் ஆபத்தில்லாத ஓரத்தில் நின்று கொண்டு வெகு தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார். 'டிராமி'ல் ஏறிச் சென்றால் ஒன்றே காலணா. காலணா மிஞ்சும். பக்கத்துக் கடையில் வெற்றிலைப் பாக்குப் போட்டுக் கொண்டு வீட்டுக்கு நடந்து விடலாம். பஸ்ஸில் ஏறிக் கண்டக்டரை ஏமாற்றிக் கொண்டே சென்ட்ரலைக் கடந்து அப்புறம் டிக்கட் வாங்கித் திருவல்லிக்கேணிக்குப் போனால் அரைக் 'கப்' காப்பி குடித்து விட்டு வீட்டுக்குப் போகலாம்; ஆனால் வெற்றிலை கிடையாது......

'கண்டக்டர் தான் என்னை ஏமாற்று ஏமாற்று என்று வெற்றிலை வைத்து அழைக்கும் போது அவனை ஏமாற்றுவது. அதாவது அவனை ஏமாறாமல் ஏமாற்றுவது தர்ம விரோதம். நேற்று அவன் அப்படிக் கேட்டபடி சென்ட்ரலிலிருந்து மட்டும் கொடுத்திருந்தால் காப்பி சாப்பிட்டிருக்கலாம்.

'இப்பொழுது காப்பி சாப்பிட்டால் கொஞ்சம் விறுவிறுப்பாகத்தான் இருக்கும்.'

இப்படியாக மேற்படியூர் மேற்படி விலாசப் பிள்ளையவர்கள் தர்ம விசாரத்தில் ஈடுபட்டிருக்கும் பொழுதுதான் அவருக்குக் கடவுள் பிரசன்னமானார்.

திடீரென்று அவருடைய புத்தி பரவசத்தால் மருளும்படித் தோன்றி, "இந்தா, பிடி வரத்தை" என்று வற்புறுத்தவில்லை.

"ஐயா, திருவல்லிக்கேணிக்கு எப்படிப் போகிறது!" என்றுதான் கேட்டார்.

"டிராமிலும் போகலாம், பஸ்ஸிலும் போகலாம், கேட்டுக் கேட்டு நடந்தும் போகலாம்; மதுரைக்கு வழி வாயிலே" என்று சொன்னார் ஸ்ரீ கந்தசாமிப் பிள்ளை.

"நான் மதுரைக்குப் போகவில்லை; திருவல்லிக்கேணிக்குத்தான் வழி கேட்டேன்; எப்படிப் போனால் சுருக்கு வழி!" என்றார் கடவுள். இரண்டுபேரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

சாடி மோதித் தள்ளிக்கொண்டு நடமாடும் ஜனக் கூட்டத்திலிருந்து விலகி, செருப்பு ரிப்பேர் செய்யும் சக்கிலியன் பக்கமாக இருவரும் ஒதுங்கி நின்றார்கள்.

மேலகரம் ராமசாமிப் பிள்ளையின் வாரிசுக்கு நாற்பத்தைந்து வயசு; நாற்பத்தைந்து வருஷங்களாக அன்ன ஆகாரமில்லாமல் வளர்ந்தவர் போன்ற தேகக் கட்டு; சில கறுப்பு மயிர்களும் உள்ள நரைத்த தலை; இரண்டு வாரங்களாக க்ஷவரம் செய்யாத முக வெட்டு; எந்த ஜனக் கும்பலிலும், எவ்வளவு தூரத்திலும் போகும் நண்பர்களையும் கொத்திப் பிடிக்கும் அதி தீட்சண்யமான கண்கள்; காரிக்கம்ஷர்ட், காரிக்கம் வேஷ்டி, காரிக்கம் மேல் அங்கவஸ்திரம்.

வழி கேட்டவரைக் கந்தசாமிப் பிள்ளை கூர்ந்து கவனித்தார். வயசை நிர்ணயமாகச் சொல்ல முடியவில்லை. அறுபது இருக்கலாம்; அறுபதினாயிரமும் இருக்கலாம். ஆனால் அத்தனை வருஷமும் சாப்பாட்டுக் கவலையே இல்லாமல் கொழு கொழு என்று வளர்ந்த தளதளப்பான மேனி வளப்பம்.



ஸ்ரீ சொ. விருத்தாசலம் "புதுமைப்பித்தன்"

தலையிலே துளிக்கூடக் கறுப்பில்லாமல் நரைத்த சிகை, கோதிக்கட்டாமல் சிங்கத்தின் பிடரி மயிர் மாதிரி கழுத்தில் விழுந்து சிலிர்த்துக் கொண்டு நின்றது. கழுத்திலே கட்ட நடுவில் பெரிய கறுப்பு மறு. கண்ணும் கன்னங் கறேலென்று, நாலு திசையிலும் சுழன்று, சுழன்று வெட்டியது. சில சமயம் வெறியனுடையது போலக் கனிந்தது. சிரிப்பு! —அந்தச் சிரிப்பு, கந்தசாமிப் பிள்ளையைச் சில சமயம் பயமுறுத்தியது. சில சமயம் கபடமற்ற குழந்தையுடையதைப் போலக் கொஞ்சியது.

"ரொம்பத் தாகமாக இருக்கிறது" என்றார் கடவுள்.

"இங்கே ஜலம் கிலம் கிடைக்காது; வேணுமென்றால் காப்பி சாப்பிடலாம்; அதோ இருக்கிறது காப்பி ஹோட்டல்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"வாருங்களேன், அதைத்தான் சாப்பிட்டுப் பார்ப்போம்" என்றார் கடவுள்.

கந்தசாமிப் பிள்ளை பெரிய அபேதவாதி. அன்னியர், தெரிந்தவர் என்ற அற்ப பேதங்களைப் பாராட்டுகிறவர் அல்லர்.

"சரி, வாருங்கள் போவோம்" என்றார். 'பில்லை நம் தலையில் கட்டிவிடப் பார்த்தால்!' என்ற சந்தேகம் தட்டியது. 'துணிச்சல் இல்லாதவரையில் துன்பந்தான்' என்பது கந்தசாமிப் பிள்ளையின் சங்கற்பம்.

இருவரும் ஒரு பெரிய ஹோட்டலுக்குள் நுழைந்தனர். கடவுள் கந்தசாமிப் பிள்ளையின் பின் புறமாக ஒண்டிக் கொண்டு பின் தொடர்ந்தார்.

இருவரும் ஒரு மேஜையருகில் உட்கார்ந்தார்கள். பையனுக்கு மனப்பாடம் ஒப்பிக்க இடங் கொடுக்காமல், "சூடா, ஸ்ட்ராங்கா இரண்டு கப் காப்பி!" என்று தலையை உலுக்கினார் கந்தசாமிப் பிள்ளை.

"தமிழை மறந்து விடாதே. இரண்டு கப் காப்பிகள் என்று சொல்" என்றார் கடவுள்.

"அப்படி அல்ல; இரண்டு கப்கள் காப்பி என்று சொல்ல வேண்டும்" என்று தமிழ்க் கொடி நாட்டினார் பிள்ளை.

முறியடிக்கப்பட்ட கடவுள் அண்ணாந்து பார்த்தார். "நல்ல உயரமான கட்டிடமாக இருக்கிறது; வெளிச்சமும் நன்றாக வருகிறது" என்றார்.

"பின்னே பெரிய ஹோட்டல் கோழிக் குடில் மாதிரி இருக்குமோ! கோவில் கட்டுகிறது போல என்று நினைத்துக் கொண்டீராக்கும்! சுகாதார உத்தியோகஸ்தர்கள் விடமாட்டார்கள்" என்று தமது வெற்றியைத் தொடர்ந்து முடுக்கினார் பிள்ளை.

கோவில் என்ற பதம் காதில் விழுந்ததும் கடவுளுக்கு உடம்பெல்லாம் நடுநடுங்கியது.

"அப்படி என்றால்...!" என்றார் கடவுள். தோற்றாலும் விடவில்லை. "சுகாதாரம் என்றால் என்ன என்று சொல்லும்!" என்று கேட்டார் கடவுள்.

"ஓ! அதுவா! மேஜையை லோஷன் போட்டுக் கழுவி, உத்தியோகஸ்தர்கள் அபராதம் போடாமல் பார்த்துக் கொள்வது பள்ளிக்கூடத்திலே, பரீக்ஷையில் பையன்கள் தோற்றுப் போவதற்கென்று சொல்லிக் கொடுக்கும் ஒரு பாடம். அதன்படி இந்த ஈ, கொசு எல்லாம் ராக்ஷஸர்களுக்குச் சமானம். அதிலும் இந்தமாதிரி ஹோட்டல்களுக்குள்ளே வந்துவிட்டால் ஆபத்துத்தான். உயிர் தப்பாது என்று எழுதி யிருக்கிறார்கள்" என்றார் கந்தசாமிப் பிள்ளை. அவருக்கே அதிசயமாக இருந்தது இந்தப் பேச்சு. நாக்கில் சரஸ்வதி கடாட்சம் ஏற்பட்டுவிட்டதோ என்று சந்தேகித்தார்.

கடவுள் அவரைக் கவனிக்கவில்லை. இவர்கள் வருவதற்கு முன் ஒருவர் சிந்திவிட்டுப் போன காப்பியில் சிக்கிக் கொண்டு தவிக்கும் ஈ ஒன்றைக் கடவுள் பார்த்துக்கொண்டே இருந்தார். அது மூக்கி முனகி ஈரத்தை விட்டு வெளியே வர முயன்று கொண்டிருந்தது.

"இதோ இருக்கிறதே!" என்றார் கடவுள். உதவி செய்வதற்காக விரலை நீட்டினார். அது பறந்து விட்டது. ஆனால் எச்சில் காப்பி அவர் விரலில் பட்டது.

"என்ன ஐயா, எச்சிலைத் தொட்டுவிட்டீரே! இந்த ஜலத்தை எடுத்து மேஜைக்குக் கீழே கழுவும்" என்றார் பிள்ளை.

"ஈயை வர விடக்கூடாது. ஆனால் மேஜையின் கீழே கழுவ வேண்டும் என்பது சுகாதாரம்" என்று முனகிக் கொண்டார் கடவுள்.

பையன் இரண்டு 'கப்' காப்பி கொண்டு வந்து வைத்தான்.

கடவுள் காப்பியை எடுத்துப் பருகினார். சோம பானம் செய்த தேவ களை முகத்தில் தெறித்தது.

"நம்முடைய லீலை" என்றார் கடவுள்.

"உம்முடைய லீலை இல்லைங்காணும், ஹோட்டல்காரன் லீலை. அவன் சிக்கரிப் பவுடரைப் போட்டு வைத்திருக்கிறான்; உம்முடைய லீலை எல்லாம் பில் கொடுக்கிற படலத்திலே" என்று காதோடு காதாய்ச் சொன்னார் கந்தசாமிப் பிள்ளை. சூசகமாகப் பில் பிரச்னையைத் தீர்த்துவிட்டதாக அவருக்கு ஓர் எக்களிப்பு.

"சிக்கரிப் பவுடர் என்றால்......!" என்று சற்றுச் சந்தேகத்துடன் தலையை நிமிர்த்தினார் கடவுள்.

"சிக்கரிப் பவுடர் காப்பி மாதிரிதான் இருக்கும்; ஆனால் காப்பி அல்ல; சில பேர் தெய்வத்தின் பேரைச் சொல்லிக் கொண்டு ஊரை ஏமாற்றி வருகிற மாதிரி" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

தெய்வம் என்றதும் திடுக்கிட்டார் கடவுள்.

பெட்டியடியில் பில்லைக் கொடுக்கும்பொழுது, கடவுள் புத்தம் புதிய நூறு ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டினார்; இதைப் பார்த்த கந்தசாமிப் பிள்ளை திடுக்கிட்டார்.

"சில்லறைக் கேட்டால் தரமாட்டேனா! அதற்காக மூன்றணா பில் எதற்கு! கண்ணைத் துடைக்கவா, மனசைத் துடைக்கவா!" என்றார் ஹோட்டல் சொந்தக்காரர்.

"நாங்கள் காப்பி சாப்பிடத்தான் வந்தோம்" என்றார் கடவுள்.

"அப்படியானால் சில்லறையை வைத்துக் கொண்டு வந்திருப்பீர்களே!" என்றார் ஹோட்டல் முதலாளி. அதற்குள் சாப்பிட்டு விட்டு வெளியே காத்திருப்போர் கூட்டம் ஜாஸ்தியாக, வீண் கலாட்டா வேண்டாம் என்று சில்லறையை எண்ணிக் கொடுத்தார். "தொண்ணூற்று ஒன்பது ரூபாய் பதின்மூன்று - சரியா! பார்த்துக் கொள்ளும் சாமியாரே!"

"நீங்கள் சொல்லிவிட்டால் நமக்கும் சரிதான்; எனக்குக் கணக்கு வராது" என்றார் கடவுள்.

ஒரு போலிப் பத்து ரூபாய் நோட்டைத் தள்ளி விட்டதில் கடைக்காரருக்கு ஒரு திருப்தி.

வெளியே இருவரும் வந்தார்கள். வாசலில் அவ்வளவு கூட்டமில்லை. இருவரும் நின்றார்கள்.

கடவுள், தம் கையில் கற்றையாக அடுக்கியிருந்த நோட்டுக்களில் ஐந்தாவதை மட்டும் எடுத்தார். சுக்கு நூறாகக் கிழித்துக் கீழே எறிந்தார்.

கந்தசாமிப் பிள்ளைக்கு, பக்கத்தில் நிற்பவர் பைத்தியமோ என்ற சந்தேகம். இடுக்கிட்டு வாயைப் பிளந்து கொண்டு நின்றார்.

''கள்ள நோட்டு என்னை ஏமாற்றப் பார்த்தான்; நான் அவனை ஏமாற்றி விட்டேன்'' என்றார் கடவுள். அவருடைய சிரிப்பு பயமாக இருந்தது.

''என் கையில் கொடுத்தால் பாப்பான் குடுமியைப் பிடித்து மாற்றிக் கொண்டு வந்திருப்பேனே!'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

''சிக்கரிப் பவுடருக்கு நீர் உடன்பட்டீரா இல்லையா! அந்தமாதிரி இதற்கு நான் உடன்பட்டேன் என்று வைத்துக் கொள்ளும். அவனுக்குப் பத்து ரூபாய்தான் பெரிசு; அதனால்தான் அவனை ஏமாற்றும்படி விட்டேன்'' என்றார் கடவுள்.

வலிய வந்து காப்பி வாங்கிக் கொடுத்தவரிடம் எப்படி விடை பெற்றுக் கொள்ளுவது என்று பட்டது கந்தசாமிப் பிள்ளைக்கு.

''திருவல்லிக்கேணிக்குத்தானே! வாருங்கள் டிராமில் ஏறுவோம்'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

''அது வேண்டவே வேண்டாம்; எனக்குத் தலை சுற்றும்; மெதுவாக நடந்தே போய்விடலாமே'' என்றார் கடவுள்.

''ஐயா, நான் பகலெல்லாம் காலால் நடந்தாச்சு. என்னால் அடி எடுத்து வைக்க முடியாது; ரிக்ஷாவிலே ஏறிப் போகலாமே'' என்றார் கந்தசாமிப் பிள்ளை. 'நாம்தாம் வழி காட்டுகிறோமே; பத்து ரூபாய் நோட்டைக் கிழிக்கக் கூடியவர் கொடுத்தால் என்ன!' என்பதுதான் அவருடைய கட்சி.

''நர வாகனமா! அதுதான் சௌக்கியமானது'' என்றார் கடவுள்.

இரண்டு பேரும் ரிக்ஷாவில் ஏறிக் கொண்டார்கள். ''சாமி, கொஞ்சம் இருங்க; வெளக்கை ஏத்திக்கிறேன்'' என்றான் ரிக்ஷாக்காரன்.

பொழுது மங்கி, மின்சார வெளிச்சம் மின்னியது.

''இவ்வளவு சீக்கிரத்தில் அன்னியோன்னியமாகிவிட்டோமே! நீங்கள் யார் என்றுகூட எனக்குத் தெரியாது; நான் யார் என்று உங்களுக்குத் தெரியாது. பட்டணத்துச் சந்தை இரைச்சலிலே, இப்படிச் சந்திக்க வேண்டும் என்றால்......''

கடவுள் சிரித்தார். பல், இருட்டில் மோகனமாக மின்னியது. ''நான் யார் என்பது இருக்கட்டும், நீங்கள் யார் என்பதைச் சொல்லுங்களேன்'' என்றார் அவர்.

கந்தசாமிப் பிள்ளைக்குத் தம்மைப் பற்றிச் சொல்லிக் கொள்வதில் எப்பொழுதுமே ஒரு தனி உத்ஸாகம். அதிலும் ஒருவன் ஓடுகிற ரிக்ஷாவில் தம்மிடம் அகப்பட்டுக்கொண்டால் விட்டு வைப்பாரா! கனைத்துக் கொண்டு ஆரம்பித்தார்.

''சித்த வைத்திய தீபிகை என்ற வைத்தியப் பத்திரிகையைப் பார்த்ததுண்டா!'' என்று கேட்டார் கந்தசாமிப் பிள்ளை.

''இல்லை'' என்றார் கடவுள்.

''அப்பொழுது வைத்திய சாஸ்திரத்தில் பரிசயமில்லை என்றுதான் சொல்லவேண்டும்'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

''பரிசயம் உண்டு'' என்றார் கடவுள்.

'இதென்னடா சங்கடமாக இருக்கிறது!' என்று யோசித்தார் கந்தசாமிப் பிள்ளை. ''உங்களுக்கு வைத்திய சாஸ்திரத்தில் பரிசயமுண்டு. ஆனால் சித்த வைத்திய தீபிகையுடன் பரிசயமில்லை என்று சொல்வோம்; அப்படியாயின் உங்கள் வைத்திய சாஸ்திர ஞானம் பரிபூர்ணமாகவில்லை. நம்மிடம் பதினேழு வருஷத்து இதழ்களும் பைண்டு வால்யூம்களாக இருக்கின்றன. நீங்கள் அவசியம் வீட்டுக்கு ஒரு முறை வந்து அவற்றைப் படிக்க வேண்டும்; அப்பொழுதுதான்......''

''பதினேழு வருஷ இதழ்களா! பதினேழு பன்னிரண்டு இருநூற்று நாலு.'' கடவுளின் மனசு நடுநடுங்கியது. 'ஒருவேளை கால் வருஷம் ஒரு முறைப் பத்திரிகையாக இருக்கலாம்' என்ற ஓர் அற்ப நம்பிக்கை தோன்றியது.

''தீபிகை மாதம் ஒரு முறைப் பத்திரிகை. வருஷ சந்தா உள்நாட்டுக்கு ரூபாய் ஒன்று; வெளி நாடு என்றால் இரண்டேமுக்கால். ஜீவிய சந்தா ரூபாய் 25. நீங்கள் சந்தாதாராகச் சேர்ந்தால் ரொம்பப் பிரயோஜனம் உண்டு; வேண்டுமானால் ஒரு வருஷம் உங்களுக்கு அனுப்புகிறேன். அப்புறம் ஜீவிய சந்தாவைப் பார்க்கலாம்'' என்று கடவுளைச் சந்தாதாராகச் சேர்க்கவும் முயன்றார்.

'பதினேழு வால்யூம்கள் தவிர, இன்னும் இருபத்தைந்து ரூபாயை வாங்கிக் கொண்டு ஓட ஓட விரட்டலாம் என்று நினைக்கிறாரா! அதற்கு ஒரு நாளும் இடம் கொடுக்கக்கூடாது' என்று யோசித்துவிட்டு, ''யாருடைய ஜீவியம்!'' என்று கேட்டார் கடவுள்.

''உங்கள் ஆயுள்தான். என் ஆயுளும் அல்ல. பத்திரிகை ஆயுளும் அல்ல; அது அழியாதது. நான் போனாலும் வேறு ஒருவர் சித்த வைத்திய தீபிகையை நடத்திக் கொண்டுதான்



இருப்பார் ; அதற்கும் ஏற்பாடு பண்ணியாச்சு'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

இந்தச் சமயம் பார்த்து ரிக்ஷாக்காரன் வண்டி வேகத்தை நிதானமாகவிட்டுப் பின்புறமாகத் திரும்பிப் பார்த்தான்.

வேகம் குறைந்தால் எங்கே வண்டியில் இருக்கிற ஆசாமி குதித்து ஓடிப்போவாரோ என்று கந்தசாமிப் பிள்ளைக்குப் பயம்.

''என்னடா திரும்பிப் பாக்கிறே! மோட்டார் வருது, மோதிக்காதே ; வேகமாகப் போ'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

''என்ன சாமி, நீங்க என்ன மனுசப் பெறவியா அல்லது பிசாசுங்களா! வண்டிலே ஆளே இல்லாதமாதிரி காத்தாட்டம் இருக்கு'' என்றான் ரிக்ஷாக்காரன்.

''வாடகையும் காத்தாட்டமே தோணும்படி குடுக்கிறோம் ; நீ வண்டியே இஸ்துக்கினு போ'' என்று அதட்டினார் கந்தசாமிப் பிள்ளை.

''தவிரவும் நான் வைத்தியத் தொழிலும் நடத்தி வருகிறேன் ; சித்த முறைதான் அநுஷ்டானம். வைத்தியத்திலே வருவது பத்திரிகைக்கும், குடும்பத்துக்கும் கொஞ்சம் குறையப் போதும். இந்த இதழிலே ரசக்கட்டைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கேன் ; பாருங்கோ, நமக்கு ஒரு பழைய சுவடி ஒன்று கிடைத்தது ; அதிலே பல அபூர்வப் பிரயோகம் எல்லாம் சொல்லியிருக்கு'' என்று ஆரம்பித்தார் கந்தசாமிப் பிள்ளை.

'ஏதேது, மகன் ஒய்கிற வழியாய்க் காணுமே' என்று நினைத்தார் கடவுள். ''தினம் சராசரி எத்தனை பேரை வேட்டு வைப்பீர்?'' என்று கேட்டார்.

''பெருமையாகச் சொல்லிக் கொள்ளும்படி அவ்வளவு ஒன்றுமில்லை. மேலும் உங்களுக்கு, நான் வைத்தியத்தை ஜீவனோபாயமாக வைத்திருக்கிறேன் என்பது ஞாபகம் இருக்கவேண்டும். வியாதியும் கூடுமானவரையில் அகன்று விடக்கூடாது. ஆசாமியும் தீர்ந்துவிடக்கூடாது ; அப்பொழுதுதான், சிகிச்சைக்கு வந்தவனிடம் வியாதியை ஒரு வியாபாரமாக வைத்து நடத்த முடியும். ஆள் அல்லது வியாதி என்று முரட்டுத்தனமாகச் சிகிச்சை பண்ணினால், தொழில் நடக்காது. வியாதியும் வேகம் குறைந்து படிப்படியாகக் குணமாக வேண்டும் ; மருந்தும் வியாதிக்கோ மனுஷனுக்கோ கெடுதல் தந்து விடக்கூடாது. இது தான் வியாபார முறை. இல்லாவிட்டால் இந்தப் பதினேழு வருஷங்களாகப் பத்திரிகை நடத்திக் கொண்டிருக்க முடியுமா!'' என்று கேட்டார் கந்தசாமிப் பிள்ளை.

கடவுள் விஷயம் புரிந்தவர்போலத் தலையை ஆட்டினார்.

''இப்படி உங்கள் கையைக் காட்டுங்கள், நாடி எப்படி அடிக்கிறது என்று பார்ப்போம்'' என்று கடவுளின் வலது கையைப் பிடித்தார் கந்தசாமிப் பிள்ளை.

''ஓடுகிற வண்டியில் இருந்து கொண்டா!'' என்று சிரித்தார் கடவுள்.

''அது வைத்தியனுடைய திறமையைப் பொறுத்தது'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

நாடியைச் சில விநாடிகள் கவனமாகப் பார்த்தார். ''பித்தம் ஏறி அடிக்கிறது ; விஷப்



பிரயோகமும் பழக்கம் உண்டோ!'' என்று கொஞ்சம் வியப்புடன் கேட்டார் பிள்ளை.

''நீ கெட்டிக்காரன்தான் ; வேறும் எத்தனையோ உண்டு'' என்று சிரித்தார் கடவுள்.

''ஆமாம், நாம் என்னத்தை யெல்லாமோ பேசிக் கொண்டிருக்கிறோம். அதிருக்கட்டும், திருவல்லிக்கேணியில் எங்கே!'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

''ஏழாம் நம்பர் வீடு, ஆபீஸ் வேங்கடாசல முதலி சந்து'' என்றார் கடவுள்.

''அடெடெ! அது நம்ம விலாசமாச்சே ; அங்கே யாரைப் பார்க்க வேண்டும்!''

''கந்தசாமிப் பிள்ளையை!''

''சரியாய்ப் போச்சு, போங்க ; நான்தான் அது. தெய்வந்தான் நம்மை அப்படிச் சேர்த்து வைத்திருக்கிறது. தாங்கள் யாரோ! இனம் தெரியவில்லையே!'' என்றார் கந்தசாமிப் பிள்ளை.

''நானா! கடவுள்!'' என்றார் சாவகாசமாக, மெதுவாக. அவர் வானத்தைப் பார்த்துக் கொண்டு தாடியை நெருடினார்.

கந்தசாமிப் பிள்ளை திடுக்கிட்டார். கடவுளாவது, வருவதாவது!

''பூலோகத்தைப் பார்க்க வந்தேன் ; நான் இன்னும் சில நாட்களுக்கு உம்முடைய அதிதி.''

கந்தசாமிப் பிள்ளை பதற்றத்துடன் பேசினார். ''எத்தனை நாள் வேண்டுமானாலும் இரும் ; அதற்கு ஆட்சேபம் இல்லை. நீர் மட்டும் உம்மைக் கடவுள் என்று தயவு செய்து வெளியில் சொல்லிக் கொள்ள வேண்டாம் ; உம்மைப் பைத்தியக்காரன் என்று நினைத்



"ஏன் ஸார், பையனைக் கண் வைத்தியத்துக்குப் படிக்க வைக்கலாமா, பல் வைத்தியத்துக்குப் படிக்க வைக்கலாமா?"

"பல் வைத்தியமே படிக்கட்டும்! ஏனென்றால், எல்லோருக்கும் இருப்பது இரண்டு கண்கள்தான். ஆனால் பற்கள் முப்பத்திரண்டு அல்லவா? பல் வைத்தியத்துக்குத்தான் ரொம்பப்பேர் வருவார்கள்!"

நாலும் பரவாயில்லை. என்னை என் வீட்டுக்காரி அப்படி நினைத்து விடக்கூடாது" என்றார்.

"அந்த விளக்குப் பக்கத்தில் நிறுத்துடா" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

வண்டி நின்றது. இருவரும் இறங்கினார்கள்.

கடவுள் அந்த ரிக்ஷாக்காரனுக்குப் பளபளப்பான ஒற்றை ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்தார்.

"நல்லா இருக்கணும் சாமி" என்று உள்ளம் குளிரச் சொன்னான் ரிக்ஷாக்காரன்.

கடவுளை ஆசீர்வாதம் பண்ணுவதாவது!

"என்னடா, பெரியவரைப் பார்த்து நீ என்னடா ஆசீர்வாதம் பண்ணுவது!" என்று அதட்டினார் கந்தசாமிப் பிள்ளை.

"அப்படிச் சொல்லடா அப்பா; இத்தனை நாளா காது குளிர மனசு குளிர இந்தமாதிரி ஒரு வார்த்தை கேட்டதில்லை. அவன் சொன்னால் என்ன!" என்றார் கடவுள்.

"அவன்கிட்ட இரண்டணாக் கொறச்சுக் குடுத்துப் பார்த்தால் அப்போ தெரியும்!" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"எசமான், நான் நாயத்துக்குக் கட்டுப்பட்டவன். அநியாயத்துக்குக் கட்டுப்பட்டவனில்லெ, சாமி! நான் எப்பவும் அன்னு அந்த லெக்கிலெதான் குந்திக்கிட்டு இருப்பேன்; வந்தா கண் பாக்கணும்" என்று ஏர்க்காலை உயர்த்தினான் ரிக்ஷாக்காரன்.

"மகா நியாயத்துக்குக் கட்டுப்பட்டவன்தான்! தெரியும் போடா; கள்ளுத் தண்ணிக்கிக் கட்டுப்பட்டவன்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"வாடகை வண்டியெ இஸ்துகிட்டு நான் மூச்சுடும் வெயிலிலெ ஓடினாத் தெரியும். உன்னை என்ன சொல்ல! கடவுளுக்குக் கண்ணில்லெ; உன்னியெ சொல்ல வச்சான், என்னியெ கேக்க வச்சான்" என்று சொல்லிக்கொண்டே வண்டியை இழுத்துச் சென்றான்.

கடவுள் வாய்விட்டுச் சிரித்தார். விழுந்து சிரித்தார். மனசிலே மகிழ்ச்சி, குளிர்ச்சி.

"இதுதான் பூலோகம்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"இவ்வளவுதானா!" என்றார் கடவுள்.

இருவரும் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

வீட்டுக்கு எதிரில் உள்ள லாந்தல் கம்பத்தின் பக்கத்தில் வந்ததும் கடவுள் நின்றார்.

கந்தசாமிப் பிள்ளையும் காத்து நின்றார்.

"பக்தா!" என்றார் கடவுள்.

எதிரில் ஒருவனும் நிற்கவில்லை.

புலித் தோலாடையும், சடா முடியும் மானும், மழுவும், பிறையுமாகக் கடவுள் காட்சி யளித்தார். கண்ணிலே மகிழ்ச்சி வெறி துள்ளியது. உதட்டிலே புன்சிரிப்பு.

"பக்தா!" என்றார் மறுபடியும்.

கந்தசாமிப் பிள்ளைக்கு விஷயம் புரிந்து விட்டது.

"ஓய் கடவுளே, இந்தா பிடி வரத்தை என்கிற வித்தை எல்லாம் என்கிட்டச் செல்லாது. நீர் வரத்தைக் கொடுத்து விட்டு உம் பாட்டுக்குப் போவீர். இன்னொரு தெய்வம் வரும், தலையைக் கொடு என்று கேட்கும். உம்மிடம் வரத்தை வாங்கிக் கொண்டு பிறகு தலைக்கு ஆபத்தைத் தேடிக் கொள்ளும் ஏமாந்த சோணகிரி நான் அல்ல. ஏதோ பூலோகத்தைப் பார்க்க வந்தீர்; நம்முடைய அதிதியாக இருக்க ஆசைப்பட்டீர்; அதற்கு ஆட்சேபம் எதுவும் இல்லை. என்னுடன் பழகவேண்டுமானால் மனுஷனைப் போல, என்னைப் போல் நடந்து கொள்ள வேண்டும்; மனுஷ அத்துக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும்; நான் முந்திச் சொன்னதை மறக்காமல், வீட்டுக்கு ஒழுங்காக வாரும்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

கடவுள் மௌனமாகப் பின் தொடர்ந்தார். கந்தசாமிப் பிள்ளையின் வாதம் சரி என்று பட்டது. இதுவரையில் பூலோகத்திலே வரம் வாங்கி உருப்பட்ட மனுஷன் யார் என்ற கேள்விக்குப் பதிலே கிடையாது என்றுதான் அவருக்குப் பட்டது.

கந்தசாமிப் பிள்ளை, வாசலருகில் சற்று நின்றார். "சாமி, உங்களுக்குப் பரமசிவம் என்று பேர் கொடுக்கவா! அம்மையப்பப் பிள்ளை என்று கூப்பிடவா!" என்றார்.

"பரமசிவந்தான் சரி; பழைய பரமசிவம்."

"அப்போ, உங்களை அப்பா என்று உறவு முறை வைத்துக் கூப்பிடுவேன்; உடன்பட வேணும்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"அப்பா என்று வேண்டாமப்பா; பெரியப்பா என்று கூப்பிடும். அப்போதுதான் என் சொத்துக்கு ஆபத்தில்லை" என்று சிரித்தார் கடவுள். பூலோக வழமுறைப்படி நடப்பது என்று தீர்மானித்தபடி சற்று ஜாக்கிரதையாக இருந்துகொள்ள வேண்டும் என்று பட்டது கடவுளுக்கு.

"அப்படி உங்கள் சொத்து என்னவோ!" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"இந்தப் பிரபஞ்சம் முழுவதுந்தான்" என்றார் கடவுள்.

"பயப்பட வேண்டாம்; அவ்வளவு பேராசை நமக்கு இல்லை" என்று கூறிக்கொண்டே நடைப்படியில் காலை வைத்தார் கந்தசாமிப் பிள்ளை. (அடுத்த இதழில் முடியும்)



உணர்வும் ஊசியும்

பரிசுக் கதை

ராஜம் கிருஷ்ணன்

[அகில உலகச் சிறுகதைப் போட்டிக்காக "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை நடத்திய அகில இந்தியச் சிறுகதைப் போட்டிக்கு அனுப்பப்பட்ட தமிழ்க் கதை.]

பிற்பகலின் நிசப்தத்தில் ஒரு குழலோசை, அம்மலைப் பிராந்தியத்தின் நாலா புறமும் ஒலித்தது. பனிச்சென்று நீலவான மும், பச்சைக் கம்பளப் புல்தரையும், அமைதியான சூழ் நிலையில் ஒலித்த குழலோசையும், கவிஞன் ஒருவனை வா வா என்று அழைத்தன. ஆனால், அப்போது அங்கே குழலூதிக் கொண்டிருந்த அச்சிறுவனைத் தவிர வேறு மானிடப் பூண்டே இருக்கவில்லை. இருந்தால் என்ன? கடவுள் சிருஷ்டியில், மனிதன் ஒருவன்தானா கவியுள்ளம் படைத்தவனாக இருக்க முடியும்? மற்ற ஜீவராசிகளும் கவியுள்ளம் படைத்திருக்க முடியாதா? மனிதனுக்குத் தன் உள்ளத்தில் பொங்கி யெழும் உணர்ச்சிகளை வெளியிடப் பேச்சு இருக்கிறது. சர்வ வல்லமை பொருந்திய எழுதுகோல் இருக்கிறது. மற்ற ஜீவராசிகளுக்கு இந்த வசதியில்லை. இதனால் அவைகளுக்குச் சிந்திக்கும் சக்தியும் உணர்ச்சிப் பெருக்கும் இல்லையென்று நிர்ணயித்துவிட முடியாதல்லவா?

அழகிய இயற்கையை ரசிக்கும் ஒரு கவிஞனைப் போல்தான், சிலியும் ஜோகியின் குழலிசையைக் கேட்ட வண்ணம் ஆனந்த

மாகப் புல் தரையில் அமர்ந்து அசை போட்டுக் கொண்டிருந்தது. ஜோகியோ சுற்றுப்புறம் ஒன்றையுமே கவனியாது, புதிதாக நடக்கக் கற்றுக் கொள்ளும் குழந்தை தடுக்கி விழுவதையும் பொருட்படுத்தாமல் பின்னும் எழுந்து நடப்பதைப் போல், தன் குழலினின்றும் வெளிப்பட்ட அபஸ்வரங்களையும் பொருட்படுத்தாது அந்த அடிகளையே திருப்பித் திருப்பி வாசித்துக் கொண்டிருந்தான்.

“ரகுபதி ராகவ ராஜாராம்; பதித பாவன சீதாராம்” என்று அந்தக் குழல் அவன் காதுகளில் ஒலித்தன. உதட்டில் இசையை எழுப்பின. கைகள் தன்னை மறந்து குழலுடன் கொஞ்சின.

முன் தினம் கோயிலில் நடந்த பஜனையில் அவன் மாமன் மரியன் அவ்வடிகளைக் குழலில் இசைக்க ஜோகி கேட்டான். அப்போதே, தானும் அம்மாதிரி குழலில் இசைக்க வேண்டும் என்ற தாகம் அவன் நெஞ்சில் உண்டாகியிருந்தது. ஆனால் அவனிடத்தில், தனக்கென்று சொந்தமாக ஒரு குழல் இல்லையே? மாமன் வெளியே போயிருக்கும் சமயம் பார்த்துத் திருட்டுத் தனமாய் எடுத்து ஊதி ஊதி அவன் ஒரு மாதிரியாகக் குழலில் இசையை எழுப்பக் கற்றுக் கொண்டிருந்தான். அன்றிரவெல்லாம் அவன் தூங்கவில்லை. குழலை எப்படி எடுப்பது என்றே திட்டம் போட்டுக் கொண்டிருந்தான். நல்ல வேளையாகப் பொழுது விடிந்ததும் அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால், மரியன் காலையிலேயே டவுனுக்குச் சந்தைக்குப் போய் விட்டான். ஜோகியின் உள்ளம் ஆனந்தத்தால் துள்ளியது. குழலை எடுத்துக் கொண்டு மாடுகள் சகிதம் புல்வெளிக்கு வந்து விட்டான். நான்கு மணி நேரமாக குழலின் மேல் அவன் விரல்கள் எப்படி எல்லாமோ அசைந்தன. ஆனால் அவன் மனத்தில் குடிகொண்டிருந்த இசை எழும்பவில்லை. சப்த ஸ்வரங்களின் தன்மையை அறிந்த ஞானி அல்லவே அவன்? எனினும் முயற்சி வீண் போகவில்லை. அவன் காதுகளில் சரியான இசை ஒலித்தது. வெகு நாட்கள் தவம் செய்து இறுதியில் எம்பெருமானைக் கண்ட முனிவர்களின் தன்மய நிலையை அடைந்தான் ஜோகி.



அந்தத் தன்னை மறந்த இன்பத்தில் அவன் எழுந்து கைகளைக் கொட்டிச் சிரித்தான். ஆனந்தக் கூத்தாடினான். அவன் கூத்தைக் கண்டு சந்தோஷமடைந்து, தானும் அதில் பங்கு பெறவோ என்னவோ சிலியும் அசை போடும் நிலையிலிருந்து எழுந்தது. அதைப் பார்த்த ஜோகி ஓடி வந்து, அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டான். சிலி அவன் மேல் முகத்தை வைத்து அன்புடன் முகர்ந்தது. ‘முரட்டு மாடு, முட்ட வருகிறது’ என்று முதலாளி அப்பாஜி கௌடரே, அதன் அருகில் வரச் சற்றுப் பயப்படுவார். துல்லிய வெள்ளை வேஷ்டிக்கு மேலே, சர்ஜ் கோட் அணிந்து கம்பீரமாக வரும் முதலாளியைக் கண்டால் முட்ட வரும் சிலிக்கு, ஜோகியின் மாசு படிந்த மேனியும்

உடையும் அருவருப்பைக் கொடுக்காதது ஏனோ? ஜோகியின் மேனியும், உடையும் மாசு படிந்ததா யிருந்தாலும், உள்ளத்தில் மாசு படியவில்லை என்பதை அது அறிந்திருந்ததோ ஒரு வேளை? இருக்கலாம்.

உடல் வெவ்வேறு இனத்தைச் சார்ந்திருந்தாலும் உள்ளங்கள் இரண்டும் தங்களை யறியாமலேயே ஒன்று பட்டிருக்கக் கூடாதா? அவைகளின் உணர்ச்சிகளையும் ஒன்றை யொன்று அறியும் தன்மையையும், புறக்கண் கொண்டு பார்க்க முடியாததை உள்ளது உள்ளபடியே, எழுத்தில் எப்படிக் காட்டமுடியும்? மனத்தை மனத்தால் உணரலாம்; விவரிக்கலாம். அந்த அகண்டமான சக்திக்கு எழுதுகோல் அளவுகோல் ஆக முடியவே முடியாது.

ஜோகிக்கும் செவிக்கும் ஒரு விதத்தில் முழு ஒற்றுமை இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். செவி, இயற்கையன்னை அளித்த புல்லைத் தின்று, அவள் மடியில் வளர்ந்தது. ஜோகி, புல்லைத் தின்னவில்லையே தவிர, அவனும் இயற்கை யன்னையின் பாலகனாய்த்தான் இருந்தான். செவிக்கு அதன் முன்னோரை எப்படித் தெரியாதோ, அதே போல் ஜோகிக்கும் அவன் அம்மாவையும், அப்பாவையும் தெரியாது. அவன் உலகமெல்லாம் மலைசூழ்ந்த அப்புல்வெளி, மாட்டு மந்தை, கொட்டில், பூதலவளி அப்பாஜி கௌடர், மாமன் மரியன் இதற்குள் அடங்கியவைதான். இந்த உலகிற்குள் அவனுடைய மாசற்ற இளம் மனத்தை, செவியும் சூழ்ந்தும் கவர்ந்தன. அவன் எண்ணங்களில் குடிகொண்ட லட்சியம், பொருள் ஈட்ட வேண்டும் என்பதோ, சீமைப் பிரயாணம் செய்ய வேண்டும் என்பதோ அல்ல. மூங்கிற் குழலொன்று சொந்தத்தில் வாங்க வேண்டும்; மனம் போனபடி ஊதவேண்டும். அவ்வளவுதான். காலையிலும், மாலையிலும் மலைமேலிருந்த குடிசைக்குப் போய், மாமன் கொடுத்ததைச் சாப்பிட்டு வரும் நேரத்தைத் தவிர மீதிப் பொழுதெல்லாம் அவன் வாழ்க்கை மாடுகளுடனேயே கழிந்தது. பகலெல்லாம் புல்வெளியில் திரிவான். இரவில், கொட்டிலின் ஒரு மூலையில் பழைய கம்பளி ஒன்றைச் சுற்றிக் கொண்டு சுருண்டு கிடப்பான். தனக்கு நினைவுதெரிந்த நாட்களாக ஜோகி இப்படித்தான் இருந்து வருகிறான். கடந்த இரு மாதங்களாக மட்டும் இதில் ஒரு சிறு மாறுதல். அதாவது பூதலவளி அப்பாஜி கௌடர் அவனுக்கு மாதம் பதினைந்து ரூபாய் சம்பளம் கொடுத்து வந்தார். ஆனால் ஜோகி கைநீட்டி வாங்கவில்லை.



அவன் மாமன் மரியனுக்கு இன்னமும் கலியாணம் ஆகவில்லை. அவனுக்கு அரசாங்கத் தோட்டத்தில் கூலி வேலை. ஜோகிக்கு அவனைக் காணும் போதே சிம்ம சொப்பனமா யிருக்கும். அவன் மாதம் பிறந்தவுடன் ஜோகியின் சம்பளத்தை வாங்கிக் கொண்டதற்கு அடையாளமாகச் சிறுவனிடம் "எலே, எதாச்சும் வாங்கித் தின்னு!" என்று காலணா கொடுப்பான். அப்படித் தனக்குக் கிடைத்துவந்த காலணாவை ஜோகி தன் அழுக்குக் கச்சைக்குள் பத்திரமாகச் சொருகி வைத்திருந்தான். எதற்குத் தெரியுமா? சொந்தத்தில் குழல் ஒன்று வாங்க! மாடு கறக்கும் பேட்டனின் மகன், டவுனிலிருக்கும் தன் மாமன் வீட்டுக்குப் போகப் போவதாகவும் அங்கு சந்தையில் வாங்கி வருவதாகவும் சொல்லி யிருந்தான்.

2

மாட்டின் மேல் சாய்ந்தவாறே இடுப்பிலிருந்த காசைக் கையால் தடவிப்

பார்த்துத் தனக்குள் ஏதோ நினைத்து மகிழ்ந்தான் ஜோதி. அப்போது அவன் முகத்தில் புன்னகை மிளிர்ந்தது. அந்தக் காட்சியை யார் கண்டாலும் அன்றொரு நாள் ஆயர் பாடியில், பசுக்களின் நடுவே ஆடிப் பாடி மகிழ்ந்த எம்பெருமானின் நினைவுதான் வரும். ஆனால் நகரத்துச் சந்தையிலிருந்து முதலாளி அப்பாஜி கௌடருடன் எங்கோ நடக்கும் யுத்தத்தைப் பற்றியும், விலைவாசிகளின் ஏற்றத்தைப் பற்றியும் பேசிக் கொண்டு வந்த மரியனுக்கு, அப் புனித நினைவு எழவில்லை.

"ஜோதி!" என்ற சிம்ம கர்ஜனைபோல் வந்த குரலைக் கேட்டதும், ஜோதி மட்டுமில்லை, சிலியும் மிரண்டு விட்டது. திரும்பிப் பார்த்தான் சிறுவன். கண்களில் கனல் பறக்க அவன் முதலாளி, "ஏண்டா, உனக்கு மாசம் பதினைந்து ரூபா சம்பளம் கொடுத்துத் தண்டத்துக்கா வைச்சிருக்கு? கறுப்பு மாடு, அந்தாண்டை கோல் தோட்டத்துலே போய் மேஞ்சதுத்தன்னு காவக்காரன் பட்டிக்கு ஓட்டிப் போறானே? நீ என்னடா பண்ணுறே இங்கே?" என்று அதட்டினார். ஜோதியின் முகம் கறுத்துச் சிறுத்தது. அங்கங்களைக் குறுக்கிக்கொண்டு பரிதாபமாக நின்றான். கள்ளங்கபடமற்ற அவன் விழிகள் மன்னித்து விடச் சொல்லிக் கெஞ்சின.

அன்பில் ஊறிய மனம் படைத்தவர்களானால் அவனை மன்னித்திருப்பார்கள். வியாபாரத்திலும், லாபத்திலும் உலகில் தன் தொழிலுக்கு உண்டான இடைஞ்சல்களைப் பற்றிச் சிந்திப்பதிலுமே மூழ்கிப் போயிருக்கும் முதலாளியின் மனதிற்கு, அன்பால் பண்பட ஏது நேரம்? சுட்டு விடுபவர்போல் அவர் அவனை விழித்துப் பார்த்தார். மரியனோ, தலையில் சுற்றியிருந்த முண்டாசை அவிழ்த்து இறுக முறுக்கினான்.

ஜோதியின் உடல் நடுங்கியது.

தொடர்ந்து 'வீர் வீர்' என்று அடிகள் விழுந்தன.

ஆமாம், முதலாளி அவன் வேலைக்குச் சீட்டுக் கொடுத்துவிட்டால் யாருக்கு கஷ்டம்?

"ஐயோ, இனிமேல் இல்லை..." என்று மேலும் மரியனின் ஓங்கிய கையைத் தடுத்த வண்ணம் அலறினான் ஜோதி.

கீழே புல்தரையில் கிடந்த குழல் வேறு மரியனின் கோபத்திற்கு இன்னும் கொஞ்சம் தூபம் போட்டது. "பாட்டும் ஆட்டமும் வேறு நீ கெட்ட கேட்டுக்கு? அதை ஏண்டா இங்கே எடுத்து வந்தே? நான் இல்லாத வேளையில் வீட்டுக் கதவைத் திறந்து எடுக்க உனக்கு எவ்வளவு துணிச்சல்? வர வர நானும் பார்த்துக் கிட்டே வாரேன்; துளுத்துக்கிட்டே வருது! வேலையைச் சரியாச் செய்யாம தன்னுனு பாட்டா பாடுறே!" என்று பின்னும் இரண்டு முதுகில் போட்டான்.

"ஊ......ஊ......" என்று முகத்தில் கண்ணீர் கறை படியச் சத்தம் போட்டு அழுதான் ஜோதி.

"அம்மோ......வ்!" என்று சிலி அவன் பக்கம் திரும்பி அனுதாபக் குரல் கொடுத்தது.

3

"இராத்திரிக்குப் புல் வெட்டினையாடா?" என்று முதலாளி கேட்டார். "இதோ போறேனுங்க!" என்று கூறிவிட்டு, ஜோதி சாக்கைத் தோளில்



மாமா:—கமலம், இன்றைக்குத் தேதி என்ன? தெரியவில்லையே! இன்றைய பேப்பர் இருந்தால் பார்த்துச் சொல்லு!

கமலா:—இன்றைய பேப்பர் இல்லையே மாமா!

மாமா:—சரி, சரி; நீ கையில் வைத்துக்கொண்டிருக்கிறாயே அது நேற்றைய பேப்பர்தானே? அதிலே பாரேன்!

கமலா:—அது பிரயோஜனமில்லையே! நேற்றையத் தேதியல்லவா போட்டிருக்கிறது!

போட்டுக் கொண்டு கையில் கத்தி சகிதம் வெளியே நோக்கி நடந்தான். அன்று அவன் மனம் கட்டுக் கடங்காத மகிழ்ச்சியில் மிதந்தது. பேட்டனின் மகன் இன்னும் இரண்டு நாட்களில் அவனுக்கென்று, ஒரு குழல் வாங்கி வந்து விடுவான். அப்புறம் கேட்பானேன்?

கண்கள் சுற்றுப்புறமுள்ள மாடுகளைக் கண்காணிக்க, கைகள் 'சர் சர்' என்று இளந் தளிர்ப் புற்களை அறுத்துச் சாக்கில் தள்ளிக் கொண்டிருந்தன.

நவம்பர் மாத ஆரம்பத்திலேயே நீலகிரி மலையில் பனி விழ ஆரம்பித்துவிடும். ஆனால் அந்த வருஷம் நவம்பர் பிறந்து பத்து தினங்கள் ஆகியும் முற்பனி விழவில்லை. பனி விழுந்து விட்டால் புல்லுக்கு மிகவும் கஷ்டமாகிவிடும். புல்லுக்காகக் காடுகள் எல்லாம் சாக்கும் கத்தியுமாய்ச் சுற்றி அலைய வேண்டி நேரும்.

மேலே நிரம்பிவிட்ட சாக்கைக் குலுக்கி, ஜோகி புல்லை உள்ளே தள்ளினான். சாக்கின் அடியில் சிறிதாகக் கிழிந்திருந்த பொத்தல் பெரிதாகி, அத்தனை புல்லும் கீழே விழுந்தன.

"அடேடே! கிழிஞ்சு போச்சா? இனி போடவே முடியாதா?" என்று முணுமுணுத்த வண்ணம் அவன் இடுப்பில் கையை வைத்துக் கொண்டு ஒரு கணம் நின்றான்.

பிறகு ஏதோ யோசித்தவனாக, சற்றுத் தொலைவில் உள்ள தோட்டத்தை நோக்கி நடந்தான். "அந்தக் காவற்காரனிடம் ஊசி இருக்கும். வாரா வாரம் அவன்தான் வெளியூர்களுக்குக் கோஸ் கட்டிப்போடுகிறானே" என்று எண்ணியவாறே அவன் சென்றான். வழியில் மேய்ந்து கொண்டிருந்த சிவி, ஜோகி தோட்டத்துப் பக்கம் செல்வதைப் பார்த்துத் தானும் அவனைப் பின் தொடர்ந்து சென்றது. முட்டைக் கோஸ் இலை என்றால் சிவிக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி!

இதைக் கண்ணுற்ற ஜோகி, "ஏகோ! தோட்டத்துக்கு வாரியா? நீ பவுண்டுக்குப் போறதுமல்லாம, என் முதுகுத் தோலை வேறு உரிக்கப் போடுவார் முதலாளி!" என்று செல்லமாக அதைத் தட்டிக் கொடுத்து அங்கேயே நிறுத்தினான்.

காவற்காரனிடம் சென்று அவன், "கொஞ்சம் கோணி ஊசியிலே சணல் கோத்துத் தாரியா, மாமா? கோணி பிஞ்சு போச்சு. ஒரு குத்துப் போட்டுத் தாரேன்?..." என்றான்.

"கோணி ஊசியா? அது மொனை ஒடுங்கிருக்கே? செத்த சின்ன ஊசிதான் இருக்கு பரவாயில்லையா?" என்று கேட்டவாறே அவன் தோட்டத்தைச் சார்ந்த அறைக்குள் சென்றான். "பரவாயில்லை, மாமா!" என்று கூறிய ஜோகி அவன் திரும்பி வருவதற்குள் கீழே பழுத்து இருந்த கோஸ் இலைகள் எட்டைச் சாக்கில் பொறுக்கிச் சுருட்டிக் கொண்டான்.

ஊசியுடன் வந்த காவலாளி, "என்ன தம்பி, சாக்கில் சுருட்டிக்கிட்டே?" என்று சிரித்துக் கொண்டே, ஆனால் சற்று கடுமை தோய்ந்த குரலில் கேட்டான்.

"ஒண்ணுமில்லைங்க......பழுத்த இலை... மாட்டுக்கு......" என்று தன் பற்களைத் திறந்த வண்ணம் சிறுவன் சாக்கைப் பிரித்துக் காட்டினான்.

"உங்கப்பன் வீட்டு மாடு மாதிரி எண்ணுறியே? உனக்கு எத்தினி பால்கொடுக்கிறது தம்பி?" என்று அவன் நகைத்தான். அதற்கு மௌனமாகப் புன்னகை செய்த ஜோகி, ஊசியை வாங்கிக் கொண்டு திரும்பினான்.


"பட்சணம் வாங்கி வா அப்பா!" என்று கூறி வழியனுப்பிய குழந்தை, மாலை தந்தையின் வரவை ஆவலுடன் எதிர் நோக்கி நிற்பதைப் போன்ற நிலையில் சிவி, ஜோகியின் வருகையை எதிர் பார்த்து நின்றது.

"மோப்பம் தெரிஞ்சு போச்சா, போக்கிரி!" என்று கொஞ்சிக்கொண்டே ஜோகி, சாக்கிலிருந்த இலைகளை உதறினான். பின்னர் புல் கிடந்த இடத்திற்கு வந்து, சாக்கின் கிழிந்த பாகத்துப் பிரிசல்களை ஒழுங்கு செய்து கொண்டான். தைப்பதற்காக, ஊசியையும் சணலையும் எங்கே வைத்தோம் என்று பார்த்தான். கீழே காணவில்லை, இடுப்பில் சொருகிக் கொண்டோமா என்று கச்சையை அவிழ்த்து உதறினான். ஊசி இல்லை, கோணியில் எங்காவது குத்தி வைத்தோமோ என்று திரும்பித் திரும்பிப் பார்த்தான்; காணோம்.

சட்டென்று அவனுக்கு நினைவு வந்தது. நெஞ்சம் துடிக்க, முகத்தில் திகில் கவ்வ, சிவியை நோக்கிக் குடல் தெறிக்க ஜோகி ஓடினான்.


சிவி, முட்டைக் கோஸ் இலை தின்ற மகிழ்ச்சியில், கன்பனை முகத்தை ஆட்டி வரவேற்றது. ஆனால், அது எதிர் பார்த்தபடி அவன் முகத்தில் மகிழ்ச்சியும், புன் சிரிப்பும் தவழவில்லை. "என்ன விசேஷம்?" என்று கேட்கும் பாவனையில், அது அவனை உற்றுப் பார்த்தது.

[அடுத்த இதழில் முடியும்]



துணிப்பொம்மை

சாமா





○●○

சுந்தரும், நீலாவும் அண்ணன் தங்கைகள். அவர்கள் இருவருக்கும் எப்பொழுதும் சண்டையாகவே இருக்கும். இரண்டுபேருக்கும் அம்மா ஏதாவது வாங்கிக் கொடுத்தால், சுந்தர் வைத்திருப்பதைத்தான் நீலா கேட்பாள். அதேமாதிரி நீலா வைத்திருப்பதைத்தான் சுந்தர் கேட்பான். பிறகு சண்டைக்குக் கேட்பானேன்? பிரமாதப்படும். கொஞ்ச நாழிகை வீட்டில் அமளிதான்.

ஒருநாள் அவர்கள் தாயார் இரண்டு அழகான துணிப் பொம்மைகள் வாங்கினாள். முதலில் சுந்தர், நாய் பொம்மையை எடுத்துக் கொண்டான். நீலா முயல் பொம்மையை எடுத்துக் கொண்டாள். கொஞ்ச நேரம் பொறுத்து, நீலா தனக்கு நாய் பொம்மையும் வேண்டும் என்று அதை அவன் கையிலிருந்து இழுத்தாள். சுந்தரும் இழுத்தான். பாவம் நாயின் கால்கள் பிய்ந்து போய்விடும் போலிருந்தன. கண்டபடி இழுத்து விட்டார்கள். அதேமாதிரி முயல் பொம்மைக்கும் ஆபத்து வந்தது. சண்டை தீரவில்லை......

அன்றிரவு, இரண்டு குழந்தைகளும் தூங்கிவிட்டார்கள். பொம்மைகள் மேஜைமேல் வைக்கப்பட்டிருந்தன.

ஆனால் அந்தப் பொம்மைகளை இப்போது பார்த்தால் வாங்கின உடனே பார்த்தது போல் அவ்வளவு ஜோராக இல்லை. தொய்ந்து போய்ச் சாய்ந்து கிடந்தன.

பாதித் தூக்கத்தில் நீலா ஒரு பயங்கரக் கனவு கண்டாள். அவளும் அவள் அண்ணன் சுந்தரும் பொம்மைகளாகி விட்டமாதிரியிருந்தது. அவர்கள் இருவரும் பொம்மையானதும் மேஜைமேலிருந்த துணிப் பொம்மைகளுக்கு உயிர் வந்து விட்டது!

இரண்டு உயிர் பெற்ற பொம்மைகளும் கடைக்குப் போயின. கடையில் வைத்திருந்த பொம்மைகளில் சுந்தர், நீலா ஆகிய இரண்டு பொம்மைகளையும் வாங்கி வந்து, ஒன்றுக் கொன்று எனக்கு நீலா தான் வேண்டும், எனக்கு சுந்தர்தான் வேண்டும் என்று அவர்களைக் கண்டபடி இழுத்து, ரொம்ப வேதனைப் படுத்தி விட்டன. அதுவும் அல்லாமல் ஒன்றின்மேல் ஒன்று சுந்தர் பொம்மையையும், நீலாவையும் விட்டெறிந்து கொண்டார்கள். மண்டைகள் உடைபடுவது போல் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு நீலா எழுந்திருந்தாள். திரும்பி மேஜையைப் பார்த்தாள். பரம சாதுக்கள் போல் இரண்டு பொம்மைகளும் பார்த்துக் கொண்டிருந்தன. பொழுதும் விடிந்துவிட்டது. நீலாவும் சுந்தரும், என்றும் இல்லாத மாதிரி ரொம்பப் பிரியமாகச் சேர்ந்து உட்கார்ந்திருந்தார்கள்.

சுந்தர், "நீலா, உனக்கு வேண்டிய பொம்மையை நீ எடுத்துக் கொள். இரண்டு பொம்மைகளும் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்!" என்று அன்போடு சொன்னான்.

நீலா, "அடாடா! நல்ல மாதிரியாக ஆகிவிட்டாயே! உனக்கும் அதே சொப்பனம் வந்ததா? இந்தா, உனக்குப்பிடித்த பொம்மையை நீயே எடுத்துக் கொள்" என்றாள். குழந்தைகள் திடீரென்று இப்படி ஒற்றுமையாக இருப்பதைக் கண்டு அம்மாவும் அப்பாவும் மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.



பாப்பா மலர்



கிணற்றுத் தேவதை

ரா.நா.

1. அழகுப் போட்டி

சூரிடானின் குழந்தைகள் என்ற பெயர் கொண்ட அழகிய தீவுகள் முன்னொரு காலத்தில் இருந்தன. அந்தத் தீவுகளை ஷாஸமான் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவன் மகா பலசாலி. அத்துடன் தனது நாட்டையும் நீதி தவறாமல் ஆண்டு வந்தான். அதனால் அவனிடம் அவனது குடிமக்கள் மிகவும் விசுவாசமாக இருந்தனர்.

இவ்வளவு பலம் வாய்ந்த, நல்ல குணம் படைத்த அரசனுக்கு ஒரே ஒரு குறை இருந்தது. வயது ரொம்ப ஆகியும் அவனுக்குப்பின் அந்த நாட்டை ஆளப் பிள்ளை இல்லை. சந்ததி இல்லாமல் தான் இறந்துவிட்டால் தனக்குப் பின் யாராவது அன்னியன் அக்கிரமமாக ஆட்சி நடத்தி, தனது அருமைக் குடிகளைக் கஷ்டப்படுத்தினால் என்ன செய்வது என்று அரசன் கவலை கொண்டான். ஆனால் தன்னை வருத்தி வரும் கவலையைப் பற்றி அவன் வெகுநாட்கள் வரையில் யாரிடமும் சொல்லிக் கொள்ளவில்லை. கவலை நீங்காமலே இறந்து-விட்டால் என்ன செய்வது என்று ஒரு நாள் தனது ராஜ்யத்திலுள்ள பக்திமான்களையெல்லாம் தனது தர்பாருக்கு வரவழைத்தான். அவர்களுக்கு ஏராளமான தான தர்மங்கள் செய்து உபசாரங்கள் செய்தான். பிறகு அரசன், "மகா ஜனங்களே, எனக்குப் பிறகு இந்த நாட்டை ஆள எனக்குப் பிள்ளை இல்லையே என்று நான் வெகு நாட்களாகக் கவலைப்பட்டு வருகிறேன். உங்களுக்கு நான் கொடுத்த பணத்தை ஏழைகள் மனம் குளிர அவர்களுக்குக் கொடுங்கள். அரச வம்சத்தின் பெயர் அழியாமலிருக்க எனக்கு ஒரு மகன் பிறக்கவேண்டும் என்று உங்கள் இஷ்ட தெய்வங்களுக்குப் பிரார்த்தனை செய்யுங்கள். அதற்காகத்தான் உங்களை என் தர்பாருக்கு அழைத்தேன்" என்று அன்போடு சொன்னான்.

அவ்வாறே செய்வதாக பக்திமான்கள் மன்னரிடம் வாக்களித்துவிட்டுச் சென்றனர். அன்றைய தினத்திலிருந்து நாடெங்கும் பக்தர்கள் பிரார்த்தனை நடத்தினார்கள். நல்லவர்கள் செய்யும் பிரார்த்தனை வீண் போகுமா? கடவுளும் கண் திறந்தார். அரசனுக்கு ஒரு அழகிய பிள்ளை பிறந்தான். அரசகுமாரனின் அழகைப்பார்த்து எல்லோரும் பிரமித்துப் போனார்கள். சந்திர பிம்பம் போலிருந்தது குழந்தை. அதனால் அதற்கு கமரஸ்ஸமான்

என்று பெயரிட்டனர். வெகு காலம் கழித்து, அதுவும் தவமிருந்து பிறந்த பிள்ளையல்லவா? ஆகையால் அரசன் தன் மகனை மிகவும் ஜாக்கிரதையாக வளர்த்தான். அரசகுமாரனுக்கு வேண்டிய பயிற்சி எல்லாம் அவனுக்குக் குறைவு இல்லாமல் அளித்தான். இளவரசனும் அழகுக்கேற்ற புத்தி கூர்மையுடன் வளர்ந்து வந்தான். ராஜகுமாரனுக்குப் பதினைந்து வயதானவுடன் அரசன் அவனுக்குப் பட்டம் கட்டி விட்டுத் தான் அரசு புரியும் வேலையிலிருந்து விலக விரும்பினான். ஆட்சிப் பொறுப்பில்லாமல் வளர்ந்தால் தன் மகன் தீய வழிகளில் போய்விடுவான் என்னும் கவலை வேறு அரசனுக்கு. ஆகையால் உடனே தனது பிரதம மந்திரியை அழைத்து யோசனை கேட்டான்.

அதற்குப் பிரதம மந்திரி, "அரசே! இவ்வளவு பெரிய ராஜ்யத்தை ஆளுவதற்கான வயதாகவில்லை இளவரசருக்கு. முதலில் அவருக்குக் கலியாணம் செய்து வைக்க ஏற்பாடு செய்யுங்கள். கலியாணமானால் அவருக்குப் பொறுப்பு ஏற்படும்" என்று சொன்னான்.



பிரதம மந்திரி கூறும் யோசனை நியாயமானது என்று தோன்றிற்று அரசனுக்கு. ஆகையினால் உடனே தனது மகனை வரவழைத்துத் தனக்கும் பிரதம மந்திரிக்கும் நடந்த சம்பாஷணையை அவனுக்குத் தெரிவித்தான்.

தந்தை சொன்னதைக் கேட்டதும் இளவரசன் ஆச்சரியமடைந்தான். உடனே அவன் தன் தந்தையைப் பார்த்து, "தந்தையே! நீங்கள் கூறுவது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. கலியாணம் செய்து கொள்ளும்படி எனக்கு அவ்வளவு வயதாகிவிட்டதா? மேலும் பெண்களின் கொடூரத்தைப் பற்றி நான் படித்த பிறகு எனக்குக் கலியாணம் என்றாலே பயமாயிருக்கிறது", என்றான்.

தன் சொல்லுக்கு இளவரசன் மறுசொல் சொல்லுவான் என்று அரசன் எதிர்பார்க்கவில்லை. ஆகையால் மகனின் பதிலைக் கேட்டு மன்னன் மிகுந்த வருத்தமடைந்தான். இன்னும் ஒன்று அல்லது இரண்டு வருஷங்கள் பொறுத்திருந்தால் இளவரசன் மனம் மாறும் என அரசன் தனக்குத் தானே ஆறுதல் செய்து கொண்டு மகனை அனுப்பிவிட்டான்.

இரண்டு வருஷங்கள் கழித்து அரசன் மறுபடியும் தன் மகனைத் தர்பாருக்கு அழைத்தான். எல்லோர் முன்னிலையிலும் மீண்டும் அரசன் தன் மகனைத் தக்க பெண்ணை மணந்து கொள்ளும்படி கேட்டான். முன்போலவே மறுபடியும் இளவரசன் "அப்பா, பெண்களைப் பற்றிய கெட்ட அபிப்பிராயம் எனக்கு இன்னும் மாறவில்லை. என்னைத் தயவுசெய்து மன்னித்து விடுங்கள், அப்பா!" என்று கூறினான்.

ஒரே பிடிவாதமாகத் தன் மகன் இருப்பதைக் கண்டு அரசன் ஆத்திரங்கொண்டு தனது சேவகர்களை அழைத்து "இந்த துஷ்டனுக்கு நல்ல புத்தி வரும் வரையில் சிறையில் அடைத்து வையுங்கள்" என்று உத்தரவிட்டான்.

மன்னன் கட்டளைப்படி சேவகர்கள் இளவரசனைக் கைது செய்து ஒரு தனிமையான கோபுரத்தில் அடைத்தார்கள். அவனுக்கு வேண்டியதைக் கொணர்ந்து கொடுக்க ஒரு கறுப்பு அடிமையை மட்டும் அனுமதித்தனர். படிப்பதற்குப் புத்தகங்கள் தவிர இளவரசனுக்கு உற்ற தோழர்களே கிடையாது.

தன் தந்தைக்குக் கோபம் வரும்படி நடந்ததற்கு இளவரசன் வருந்தினாலும் தான் தவறு செய்ததாக அவன் நினைக்கவேயில்லை. தனியாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது பற்றிச் சிந்தனை செய்து

கொண்டே. இருட்டியவுடன் இளவரசன் நித்திரையிலாழ்ந்து விட்டான்.

இளவரசன் இருந்த சிறைக்குப் பின்புறத்தில் ஒரு கிணறு இருந்தது. இந்தக் கிணற்றில் ஒரு நல்ல தேவதை வசித்து வந்தாள். அவள் பெயர் மாயமாள். இருட்டியதும் இந்தத் தேவதை கிணற்றிலிருந்து வெளியேறித் தன்னிஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும் உலாவி வருவான். இவ்வாறு உலாவிக் கொண்டு வருகையில் இளவரசன் தூங்கிக் கொண்டிருக்கும் அறைக்கு வந்து சேர்ந்தான்.

அந்தத் தேவதை ராஜகுமாரன் இருந்த அறைக்கு வந்ததும் அவளுக்கு அவளையும் அறியாமல் உடம்பு முழுவதும் சிலிர்த்தது. அவள் ஆச்சரியத்துடன் அறை முழுவதும் சுற்றிப் பார்த்தாள். பேரழகனை ராஜகுமாரனைப் பார்த்த மாயமாளுக்குச் சற்று நேரம் ஒன்றும் தோன்றவில்லை. தன்முன் அழகே உருவெடுத்த இளைஞன் ஒருவன் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு அங்கே மயங்கி நின்று விட்டாள். அவள் இதுவரை பார்த்தவர்களில் இந்த இளவரசன் மாதிரி அழகனை அவள் கண்டதேயில்லை. அவள் தேவதையானதால் அந்த இளைஞன் எக்காரணத்தினால் இங்கே அடைபட்டுக் கிடக்கிறான் என்பதை ஒரு நொடியில் அறிந்து கொண்டாள். அவன் நிலையை நினைத்து வருந்தினாள் தேவதை.

மாயமாளுக்கு அந்த அரசகுமாரனை எழுப்பி அவனுடன் கொஞ்ச நேரமாவது பேச்சுக் கொடுக்க வேண்டும் என்று ஆசையாயிருந்தது. அவனை எழுப்பலாம் என்று நினைத்து அவன் கட்டிலை நெருங்கினாள். இளைஞனைத் தொட்டு எழுப்புவதற்காக அவள் குனிந்த சமயம் அங்கே தெஹனூஷ் எனும் கொடிய அரக்கன் வந்து சேர்ந்தான். மாயமாளும் தெஹனூஷும் நண்பர்களல்ல. சீக்கிரத்தில் இளவரசனுடைய அழகைப்பற்றி இருவருக்கும் வாக்குவாதம் நடந்தது.

தங்கள் முன் தூங்கிக் கொண்டிருக்கும் கமருஸ்ஸமான் தான் உலகிலேயே அழகிற் சிறந்தவன் என வாதித்தாள் மாயமாள். தான் சமீபத்தில் பார்த்த சீன தேசத்து இளவரசியான பதூரா தான்




உலகின் முதல்தர அழகி என்று எதிர்வாதம் செய்தான் தெஹூஷ்.

தனது தந்தை கூறியபடி விவாகம் செய்து கொள்ள மறுத்ததால் சீன தேசத்து அரசன் தன் மகள் பஹதூராவைப் பைத்தியம் எனக் கருதி ஒரு தனிச் சிறையில் அடைத்திருப்பதாகவும் அவளுக்குக் காவலாகப் பத்து கிழவிகளை நியமித்திருப்பதாகவும் தெஹூஷ் கூறினான்.

தௌஹூஷ் கூறியது உண்மையென மாயமான் ஒப்புக் கொள்ளவில்லை. அவன் கூறுவது உண்மையானால் அந்தச் சீனதேசத்து இளவரசியை உடனே அங்கு கொண்டு வரும்படி தௌஹூஷிடம் கூறினான். அவ்வாறு அவன் சீன இளவரசியைக் கொண்டு வந்தால் இருவரில் யார் அதிக அழகு வாய்ந்தவர் என்பதை முடிவு செய்யலாம் என்பது மாயமானின் எண்ணம்.

அவ்வாறே தௌஹூஷ் சீனாவுக்குச் சென்று தூங்கிக் கொண்டிருக்கும் அழகி பஹதூராவைக் கொண்டுவந்து கமரல்ஸமானருகில் வைத்தான். இளவரசன் இளவரசி இருவரையும் சேர்த்தாற்போல்பார்த்தும் இவர்களில் யார் அதிக அழகு என்பது பற்றி மாயமானுக்கும், தௌஹூஷுக்கும் ஒற்றுமை ஏற்படவில்லை. தங்கள் இருவரையும் விட்டு விட்டு மூன்றாவது மனிதர் மத்யஸ்தப்படி போகலாம் என மாயமான் கூறினான். இந்த யோசனையை தௌஹூஷும் ஒப்புக் கொள்ளவே, உடனே மாயமான் தன் காலால் பூமியை உதைத்தான். உடனே குரூபியான, கூன் விழுந்த ஆறு கொம்புகளும், நீண்ட நகங்களும் உள்ள ஒரு அரக்கன் தோன்றி தேவதையின் கட்டளை என்ன என்று கேட்டான்.



“இங்கே உனக்கு எதிரில் தூங்கிக் கொண்டிருக்கும் இளைஞன், யுவதி இருவரில் யார் அதிக அழகு வாய்ந்தவர் என்று சொல், பார்க்கலாம்” என்று மாயமான் கேட்டான். இந்தக் கேள்விக்கு, புதிதாக வந்த அரக்கனாலும் பதில் கூற முடியவில்லை. கடைசியில் மாயமானும் அந்த அரக்கனும் இது விஷயமாக யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தனர். தூங்குகிறவர்களை ஒவ்வொருவராக எழுப்புவதென்றும், யார் மற்றவரை அதிகமாகப் புகழ்கிறார்களோ அவரே அழகில் குறைந்தவர் என்றும் முடிவு செய்தார்கள்.

உடனே தேவதை மாயமான் ஒரு வெட்டுக்கிளியாக மாறி இளவரசன் கழுத்தில் உட்கார்ந்து வேகமாகக் கொட்டினான். இளவரசன் கமரல்ஸமான திடுக்கிட்டு விழித்துக் கொண்டு நாற்புறமும் பார்த்தான். பிறகு தேவதை வெட்டுக்கிளியிலிருந்து தன் சுயரூபமாகிய தேவதையாக மாறி, என்ன நடக்கிறதென்று பார்த்துக் கொண்டிருந்தான். (தொடரும்)

மத்திய கேந்திரம்

ஜெயமணி



யெமன் : ஓமான்

அதிர்ஷ்ட அரேபியா அல்லது ஆனந்த அரேபியா என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா? யெமன் நாட்டைத்தான் அதிர்ஷ்ட அல்லது ஆனந்த அரேபியா என்று சொல்லுகிறார்கள்.

வறண்ட பாலைவனங்களால் சூழப்பட்டுள்ள அரேபியாவில் யெமன் தேசம் மாத்திரம் அபூர்வமான நந்தவனமாகத் திகழ்வதே அதற்குக் காரணம்.

யெமன் பிரதேசம் எவ்வளவு செழுமையானது என்பதை ஓர் உதாரணத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

சௌதி அரேபியாவில் ஐம்பது லட்சம் ஜனங்கள்தான் இருக்கிறார்கள். ஆனால் அந்த நாட்டின் நிலப் பரப்பில் பத்தில் ஒரு பங்கு உள்ள யெமனில் முப்பத்தைந்து லட்சம் மக்கள் வசிக்கிறார்கள்.

முஸ்லீம் சகாப்தம் ஆரம்பமாவதற்கு முன் யெமன் நாடு நாகரிகத்தில் சிறந்து விளங்கியதாகக் கூறப்படுகிறது. சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் குடி தண்ணீர் வசதிக்காக யெமன் வாசிகள் நிர்மாணித்துள்ள பெண்டுக் குளங்கள் இன்றும் அந்த நாட்டுக்குச் செல்லும் யாத்ரீகர்களை ஆச்சரியத்தில் மூழ்கும்படி செய்கின்றன.

உலக சரித்திரத்திலே ஒரு புதிய படலத்தைச் சிருஷ்டித்த பெருமையும் யெமன் மக்களுக்கு உண்டு. மெக்காவில முகமது நபி நாயகத்துக்கு எதிர்ப்பு அதிகமானபோது அவரை மெதினாவுக்கு வரவேற்று அடைக்கலம் அளித்த பெருமை யெமன் மக்களுக்கே உரியது. இல்லாவிடில் முஸ்லீம் உலக சரித்திரம் வேறு விதமாக மாறியிருக்கலாம்.

யெமன் பல நூற்றாண்டுகள் வரையில் துருக்கி சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டிருந்தது. ஆனால் முதலாவது மகா யுத்தத்துக்குப் பின் துருக்கி தோல்வியடைந்ததும், யெமன் சுதந்திர நாடாயிற்று. அன்றிருந்து இன்று வரையில் அது சுதந்திர நாடாகவே இருந்து வருகிறது. சௌதி அரேபியாவை அல்லல் படுத்திய தொல்லைகள் அதிர்ஷ்டவசமாக யெமன் நாட்டை அணுகவில்லை.

அந்த நாட்டில் உற்பத்தியாகும் காப்பிக் கொட்டை உலகப்பிரசித்தி பெற்றது. அந்த நாட்டிலிருந்து தோல்களும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

சில தினங்களுக்கு முன் பிரிட்டிஷ் இன்ஜினீயர்கள் யெமனில் இருநூறு கோடி டன் எண்ணெய் உற்பத்தியாகும் பிரதேசத்தைக் கண்டு பிடித்திருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறின. எனவே, எண்ணெய்ச் செல்வத்தில் மற்ற முஸ்லிம் நாடுகளைப் போல் யெமனும் முக்கிய ஸ்தானத்தை வகிக்கும் காலம் அதிக தூரத்தில் இல்லை.




யெமன் மன்னர்

யெமனின் தலைநகரான ஸானா நாலாபுறமும் கோட்டைச் சுவர்களால் சூழப்பட்டிருக்கிறது. அந்த நகருக்கு எட்டு பெரிய வாசற்படிகள் இருக்கின்றன.

யெமன் மன்னரான இமாம் அப்துல்லா பிரிட்டனுடன் உடன்படிக்கை செய்து கொண்டிருப்பதால் யெமன் நாட்டுக்கும் பிரிட்டனுக்கும் நெடுங்காலமாக நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது.

* * *

யெமனைப் போல் ஓமான் நாடும் சுதந்திர



காடுதான். அது சுல்தான் டெய்மூரின் ஆட்சியில் இருந்து வருகிறது. எண்பத்திரண்டாயிரம் சதுர மைல் விஸ்திரணம் உள்ள ஓமான், யெமன் தேசத்தைக் காட்டிலும் ஐந்து லட்சம் சதுர மைல்கள் பெரியது. ஓமான் தேசத்தின் கடற்கரை ஓரம் சுமார் ஆயிரம் மைல்கள் தூரம் இருக்கிறது.

அந்த நாட்டில் உள்ள ஐந்து லட்சம் மக்களில் பெரும்பாலோர் அராபியர்கள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. எனினும் அங்கு கடற்கரை ஓரமாகப் பதினாயிரக் கணக்கில் நீக்ரோக்களும் வசிக்கிறார்கள்.

ஓமானில் ஏராளமாகப் பேரீச்சம் பழங்கள் உற்பத்தியாகின்றன. நூற்றுக் கணக்கான மைல்கள் தூரம் பேரீச்சம் பழத் தோட்டங்கள் இருக்கின்றன.

அந்த நாட்டுக்கு மற்ற தேசங்களைக் காட்டிலும் இந்தியாவுடனேயே அதிகமாக வர்த்தகத் தொடர்பு இருந்து வருகிறது.

ஐயாயிரம் ஜனங்கள் வசிக்கும் மஸ்காட் நகரம் ஓமான் நாட்டின் தலைநகராகவும் துறைமுகமாகவும் இருக்கிறது.

* * *

அரேபியாவிலிருந்து செங்கடல் வழியாக நாம் எகிப்துக்குச் செல்லு முன், உலகத்தின் கப்பல் போக்கு வரத்துக்குக் கேந்திர ஸ்தானமாக விளங்கும் ஏடன் பிரதேசத்தையும் துறைமுகத்தையும் பார்த்து விட்டுச் செல்ல வேண்டியது அவசியம்.

ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கும் மற்ற எல்லா ஆசியா நாடுகளுக்கும் செல்லும் கப்பல்கள் ஏடன் வழியாகத்தான் செல்ல வேண்டும். எனவே வருஷந்தோறும் ஏடன் வழியாகப் பல நாடுகளையும் சேர்ந்த ஆயிரக் கணக்கான கப்பல்கள் போவதும் வருவதுமாக இருக்கின்றன.

முக்கியமாக அரேபியாவில் உற்பத்தியாகும் காப்பிக் கொட்டை, தோல், புகையிலை முதலியவற்றை ஏடன் துறைமுகத்தில் தான் கப்பல்களில் ஏற்றுகிறார்கள். ஏடன் நகரில் உப்பும் சிகரெட்டுகளும் ஏராளமாக உற்பத்தியாகின்றன.

உலகத்திலே மிக மிக உஷ்ணமான நகரங்களில் ஏடனும் ஒன்று. அங்கு வருஷத்தில் இரண்டு அங்குலம் தான் மழை பெய்கிறது. எனவே அங்கு ஜனங்கள் குடி தண்ணீருக்குக் கூட, உப்பை அகற்றி விட்டுக் கடல் நீரையே உபயோகிக்கிறார்கள்!

எழுபத்தைந்து சதுர மைல் விஸ்திரணம் உள்ள ஏடன் காலனி பிரிட்டிஷாரின் நேர் நிர்வாகத்தில் இருந்து வருகிறது.

ஆனால் ஒரு லட்சம் சதுர மைல்களுக்கு மேல் விஸ்திரணம் உள்ள ஏடன் பிரதேசம் பிரிட்டிஷாரின் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு அராபிய சிற்றரசர்களின் ஆட்சியில் இருந்து வருகிறது. அந்தப் பிரதேசத்தின் ஜனத் தொகை சுமார் ஆறு லட்சம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

மத்திய கிழக்கில் உள்ள ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், சௌதி அரேபியா, யெமன், ஓமான் முதலிய ஆறு நாடுகளைப் பற்றிய விவரங்கள் இத்துடன் பூர்த்தியாகிவிட்டன. இனி செங்கடலைக் கடந்து முஸ்லிம் நாடுகளிடையே முக்கிய ஸ்தானம் வகிக்கும் எகிப்து தேசத்துக்குச் செல்லலாம்.



"நீங்கள் படிக்கிறீர்களா?"

"ஆமாம்."

"அப்படியானால் நான் தொந்தரவு செய்யவில்லை. அப்புறம் வருகிறேன்!"

"என்ன? என்ன? லக்ஷ்மி இங்கே வா! அதற்குள் போய் விடுகிறாயே!"

"இல்லை, படிக்கிறவர்களைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று என் சின்ன வயசிலே எங்க அப்பா எனக்குப் புத்தி சொல்லி யிருக்கா......"

"ஆனால், உனக்கு இப்ப சின்ன வயசு இல்லையே? அதனால் அந்தப் புத்தி இப்பச் சரிப்படுமா?......அது சரி...... இப்ப நீ இங்கே எதற்கு வந்தாய்?"

"இந்த வயசிலே இங்கே வருவதற்குக் காரணம் கூட வேண்டுமா?"

"அடி கள்ளி! அப்படியானால் நீ சும்மா தான் வந்தாயா?" என்று சொல்லிக் கொண்டே அவள் கரம் பற்றச் சென்றான்.

'ஆமாம்,' என்ற பாவனையில் தலை யசைத்துக் கண் சிமிட்டிக் கொண்டு வெகு வேகமாக அவள் மாடி யறையை விட்டுக் கீழே இறங்கிச் சென்றாள்.

அவன் மனசுக்குள் சிரித்துக்கொண்டே தான் படித்துக் கொண்டிருந்த காவலின் இருபத்தைந்தாம் பக்கத்தைப் படித்தான்.

ஒரு மணி நேரம் ஆயிற்று.

"என்ன அப்படிச் சிரித்துக்கொண்டே படிக்கிறீர்கள்? அதில் ஏதாகிலும் அவ்வளவு சுவாரஸ்யமாக இருக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டே அவன் நாற்காலியின் பின்புறம் வந்து நின்றாள்.

அடுத்த கணம், "ஐய்யய்ய!" என்றாள்.

"என்ன?" என்றான்.

"நான் ஒரு மணி நேரத்துக்கு முன் வந்தபோது பார்த்தேன். நீங்கள் இதே இருபத்தைந்தாவது பக்கத்தை அப்போது படித்துக் கொண்டிருந்தீர்கள்!"

"ஆமாம், லக்ஷ்மி! நீ வந்துவிட்டுப் போனதுக் கப்புறம் இதே பக்கத்தை முப்பது தரம் படித்திருப்பேன். என்ன படித்தேன் என்பது மனசுக்கு எட்டினால் தானே?" என்றான் ரகுராமன்.

"அப்படியா?......பின் நீங்கள் பி.ஏ. எம். ஏ. பரீக்ஷை எல்லாம் பாஸ் பண்ணி யிருப்பதாகச் சொல்கிறார்களே! அதெல்லாம் எப்படித்தான் பாஸ் பண்ணி னீர்களோ?"

"அப்போதெல்லாம் நீ இல்லாததனால் தான் லக்ஷ்மி, என்னால் பாஸ் பண்ண முடிந்தது. அதுதான் ரகசியம்!"

இதைச் சொன்னதும் லக்ஷ்மியின் கண்களில் நீர் பெருகி விட்டது!

"என்ன லக்ஷ்மி? அழுகிறாயா என்ன? நான் உன்னை ஒன்றும் சொல்லவில்லையே?"

உடனே அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு, "என்னை ஒன்றும் சொல்லவில்லை, சரிதான். ஆனால் உங்கள் ரகசியத்தை என்னிடம் எதற்குச் சொன்னீர்கள்? பெண்களிடம் ரகசியம் சொல்லக் கூடாது என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள், இல்லையா?" என்று சொல்லிச் சிரித்தாள்.

அவனும் சிரித்தான்.

பிறகு, "நீங்கள் படித்தது போதும். குளித்து விட்டுச் சாப்பிட வாருங்கள். ஆபீசுக்கு நேரமாகிறது!" என்றாள்.

"அவ்வளவு நேரமாகி விட்டதா? இந்த புஸ்தகத்தை ஆபீசிலாவது படிக்கப் பார்க்க வேண்டும்!" என்று சொல்லிக் கொண்டு எழுந்திருந்தான்.

அன்று மாலை ரகுராமன் ஆபீஸிலிருந்து வந்ததும், "லக்ஷ்மி, இன்றைக்கு ஏதாகிலும் தபால் உண்டா?" என்று எப்பொழுதும் கேட்பது போல் கேட்டான்.

"ஓ, உண்டு!" என்று சொல்லிக் கொண்டு ஒரு 'கார்டு' கொண்டு வந்து கொடுத்தாள்.

அதைப் பார்த்ததும் ரகுராமன் திடுக்கிட்டான். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:

அன்புள்ள ஐயா,

தாங்கள் எங்கள் புத்தகாலயத்திலிருந்து எடுத்துச் சென்ற புஸ்தகம், தாங்கள் கைவசம் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட பதினைந்து நாட்களுக்கு மேல் மூன்று நாட்களாகி விட்டன. இந்த மூன்று நாட்களுக்கும் மூன்றணா அபராதம் செலுத்தவேண்டும். இன்னும் தாமதிக்கப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஓரணா வீதம் வசூலிக்கப்படும்.

இப்படிக்கு,
காரியதரிசி.

"லக்ஷ்மி, பார்த்தாயல்லவா, வெட்கக் கேட்டை? பதினைந்து நாளில் முந்நூறு பக்கங்கள் கொண்ட நவீனத்தை முடிக்க முடியவில்லை என்றால். ஆனால் இதே நான் ஒரு காலத்தில் ஆயிரத்து முந்நூறு பக்கங்கள் கொண்ட "சிவகாமியின் சபத"த்தை ஒரே நாளில் படித்து என் நண்பர்களை வியக்க வைத்தேன். டால்ஸ்டாய் எழுதிய "போரும் அமைதியும்" என்ற நாலாயிரம் பக்கங்கள் கொண்ட நவீனத்தை ஆங்கிலத்தில் ஐந்தே நாட்களில் படித்து முடித்து நண்பர்களின் பெருவியப்புக்கு ஆளானேன். அப்படிப்பட்ட எனக்கு நேர்ந்துள்ள கதியைப் பார்த்தாயா? பதினெட்டு நாட்களில் முந்நூறு பக்கங்கள் படிக்க முடியவில்லை. இருநூற்றியிருபது பக்கம்தான் படித்திருக்கிறேன்! எப்படியாகிலும் பாக்கி எண்பது பக்கத்தை நாளைக்குள் படித்து முடித்து, நாளை மாலை புத்தகாலயத்தில் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் புஸ்தகத்தை!" என்று சபதம் செய்தான்.

"சரி, நீங்கள் படியுங்கள்; நான் உங்களைத் தொந்தரவு செய்யவில்லை" என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள் லக்ஷ்மி.

மறு நாள் மாலை ரகுராமன் ஆபீஸிலிருந்து வந்ததும் ஒரு கடிதத்தை லக்ஷ்மி நீட்டினாள். "இதோ பார்த்தீர்களா! இன்றைக்கும் ஒரு கடிதம் வந்திருக்கிறது!" என்றாள்.

ரகுராமன் வாங்கிப் பார்த்தான். அது அவள் தந்தையிடமிருந்து வந்திருந்தது. லக்ஷ்மி இல்லாமல் வீடு வெறிச்சென்றிருக்கிறதாம். ஒரு மாதம் தம்மிடம் லக்ஷ்மியை வைத்துக் கொண்டிருந்து விட்டு அனுப்புவதாக எழுதியிருந்தார்.

இந்த விஷயத்தை ரகுராமன் தன் மனைவிக்குச் சொன்னான். "என்ன? அப்பா என்னை வரச்சொல்லி எழுதியிருக்கிறாரா?" என்று கேட்டு அகமும் முகமும் மலர்ந்தாள் லக்ஷ்மி.

ரகுராமனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவளுடைய உற்சாகத்தில் தண்ணீர் தெளிக்க விரும்பாமல் வாய் மூடி மௌனியாக இருந்தான்.



ஆனால் லக்ஷ்மி அவனைச் சும்மா விடுவதாக இல்லை. "பின் எப்பொழுது புறப்பட வேண்டும்? அப்பாவை வந்து அழைத்துப் போகச் சொல்லப் போகிறீர்களா? அல்லது நீங்களே என்னைக் கொண்டு போய் விடப் போகிறீர்களா?" என்று ஆயிரம் ஆயிரம் கேள்விகள் கேட்டு அவனை வதைத்தாள்.

அதற்கெல்லாம் அவன் பதிலே சொல்ல வில்லை. கடைசியாக ஒரே ஒரு கேள்விதான் கேட்டான்: "லக்ஷ்மி நீ இப்பொழுது போய்த்தான் ஆகவேண்டுமா?"

"என்ன கேட்கிறீர்கள்?" என்று ஆத்திரத்துடன் எதிர்க் கேள்வி போடத்தான் தோன்றியிருக்கும் வேறு யாருக்கும். ஆனால் லக்ஷ்மிக்கு அவ்வாறு தோன்ற வில்லை. ரகுராமனின் கேள்வியைக் கேட்டதும், அவள் தந்தையிடம் கொண்டிருந்த பாசம் நூறு மடங்கு பெருகிற்று. தாயிடம் கொண்டிருந்த அன்பு இருநூறு பங்காக வளர்ந்தது. தன் அருமைத் தம்பி பாலுவைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை அளவு கடந்து சென்றது. தான் புக்ககத்துக்கு வரும்போது, வீட்டில் சினையாக இருந்த பசு, இப்பொழுது கன்று போட்டிருக்கும்; அந்த அழகிய கன்றைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் கட்டுக் கடங்காமல் போயிற்று. இருப்பினும் அவள் ரகுராமனை "இப்பொழுது நான் போவதில் உங்களுக்கு இஷ்ட மில்லையா?" என்று மிகவும் பணிவுடன் கேட்டாள்.

அவள் கேட்ட பாவம் அவனை என்னவோ செய்தது. "எனக்கு இஷ்ட மில்லாமல் என்ன? ஆனால்? ...... உன்னை அனுப்பி விட்டு நான் எப்படித் தனியாக இருப்பேன்" என்றான்.

இது லக்ஷ்மிக்குப் புரியவே இல்லை. 'ஏன், ரகுராமன் தன்னைப்பற்றி நினைக்கும் சமயம் மிக மிகச் சொற்ப மாயிற்றே. மற்ற நேரங்களில் எல்லாம், ஆபீஸ் என்றும் நண்பர்கள் என்றும் சினிமா என்றும் டிராமா என்றும் போய் விடுகிறாரே......பின்னர் இவருக்குத் தனிமை ஏது!' இவ்வாறுதான் நினைத்தாள். ஆனால் இதை வாய் விட்டுச் சொல்ல வில்லை லக்ஷ்மி.

* * *

அன்று மாலை காரியாலயத்திலிருந்து வந்ததும் ரகுராமனே பேச ஆரம்பித்தான். காலையில் லக்ஷ்மியை உற்சாகமாகப் 'பிறந்தகம் போய் வா' என்று சொன்

பய முறுத்துகிறார்!

ஒரு சமயம் ஜனாப் ரபி அகமது கித்வாய் தம்முடைய சொந்த விலாசத்துக்கே ஒரு கடிதம் எழுதினார். பத்திரமாகத் தபாலில் அனுப்பிவிட்டார். அது போகவேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தது! கித்வாயின் கோரிக்கை வெற்றி பெற்றது! இது ஒரு புதிர் மாதிரி இருக்கிறது அல்லவா! இந்தியாவிலே ஒத்துழையாமை இயக்கம் மும்முரமாக நடந்து கொண்டிருந்த காலத்தில் கித்வாய்க்கு வரும் கடிதங்கள் தணிக்கை அதிகாரியின் பரிசோதனைக்கு உள்ளாகி மிகத் தாமதித்து வந்தன. பல கடிதங்களின் கதி என்ன ஆயிற்று என்பதே தெரியவில்லை. தணிக்கை அதிகாரியிடம் முறையிட்டுக் கொள்ளலாம் என்றால், அவர் யார்! எங்கே இருக்கிறார்! என்பதெல்லாம் பரம இரகசியமாக இருந்தன. எனவே கித்வாய் ஒரு யுக்தி செய்தார். தம்முடைய விலாசத்துக்கே ஒரு கடிதம் எழுதினார். ஆனால் உறைக்குள் இருந்த கடிதம் தணிக்கை அதிகாரிக்கு எழுதப்பட்டிருந்தது. அதிலிருந்து அவர் சம்பந்தப்பட்ட வரையில் தணிக்கை அதிகாரியின் தொல்லை நின்றது! அவருக்கு மேற்கண்டவாறு தொல்லை கொடுத்த அதே தபால் இலாகாவுக்குக் காங்கிரஸ் ஆட்சியில் கித்வாய் மந்திரியானார். கித்வாயின் நிர்வாகத்தில் தபால் இலாகாவின் அபிவிருத்தி பிரமாதம்! தபால் கார்டு, கவர்களின் விலை வருஷா வருஷம் உயர்ந்தன! ஞாயிற்றுக் கிழமை ஒருநாள் விடுமுறை வந்து, சனி, ஞாயிறு, திங்கள் மூன்று தினங்களும் தபால்கள் தடைப்பட்டன! கித்வாய் காங்கிரஸை விட்டுவிடப் போவதாகப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்! தபால் இலாகாவையும் விட்டுப் போவாரா, அல்லது இன்னும் கொஞ்சம் விலை உயர்த்தி விட்டுத்தான் போவாரா என்று தெரியவில்லை.



ஸ்ரீ கித்வாய்

அடங்காத பிள்ளை!

ஐ. ஸி. எஸ். குழாமைச் சேர்ந்த யாவரும் பிரிட்டிஷார் இரிய கோட்டைத் தாண்டாத நல்ல பிள்ளைகள் என்று பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் எண்ணிக் கொண்டிருந்தது. அப்போது மேற்படி அதிகாரிகளுக்கு இடி இடித்தாற் போன்ற ஒரு செய்தி கிடைத்தது. ஸ்ரீ ஹரி விஷ்ணு காமத் ஐ. ஸி. எஸ்., தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டுக் காங்கிரஸில் சேர்ந்தார் என்பதுதான் அந்தச் செய்தி. அதைக் கேட்ட பிரிட்டிஷ் கவர்னர்களில் ஒருவர், "ஐ. ஸி. எஸ். குலத்தைக் கெடுக்க இப்படி ஒரு அடங்காத பிள்ளை வந்து சேர்ந்ததே" என்று அங்கலாய்த்தாராம். பதவியைத் தியாகம் செய்து சுதந்திர இயக்கத்தில் சேர்ந்த ஸ்ரீ எச். வி. காமத் பல தடவை சிறை சென்றார். இப்போது அவர் சுதந்திர இந்தியாவின் பார்லிமெண்டில் அங்கத்தினராக இருந்து காங்கிரஸ் மந்திரிகளைத் திணற அடித்து வருகிறார்! ஐ. ஸி. எஸ். வர்க்கத்தில் அடங்காத பிள்ளையாக இருந்த ஸ்ரீ காமத் இப்போது காங்கிரஸிலும் அடங்காத பிள்ளை என்று பெயர் வாங்கி யிருக்கிறார்!



ஸ்ரீ காமத்

லாததால், சோர்ந்து போயிருப்பான்; அவனை உற்சாகமூட்ட வேண்டுமென்றே, 'லக்ஷ்மி! லக்ஷ்மி!' என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

"என்ன?" என்று கேட்டுக்கொண்டே எதிரே வந்தாள் லக்ஷ்மி.

"இன்றைக்கு 'லைப்ரரி'யிலிருந்து ஒரு அருமையான நாவல் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன். கதை ரொம்பப் பிரமாதமாக இருக்குமாம். இதைக் கோடி கோடியாகச் செலவழித்து அமெரிக்காவில் படமாகக்கூட எடுத்திருக்கிறார்களாம். இவ்வளவு அருமையான புஸ்தகம் இத்தனை நாள் கிடைக்காமலிருந்தது. இன்றுதான் கிடைத்தது!" என்று மிகப் பெருமையாகச் சொல்லிக் கொண்டான்.

"கிடைத்து என்ன பிரயோஜனம்?" என்றாள் லக்ஷ்மி முகவாட்டத்துடன்.

"அது என்ன அப்படிச் சொல்கிறாய், லக்ஷ்மி?" என்றான் ரகுராமன் திடுக்கிட்டு.

"உங்களால் தான் படிக்க முடிவதில்லையே, என் தொந்தரவு காரணமாக!" என்றாள்.

"ஓகோ, அதற்குச் சொல்கிறாயா?" என்று சொல்லி விட்டுச் சிரித்தான் ரகுராமன்.

"வேண்டுமானால் ஒன்று செய்யுங்களேன். என்னை ஊருக்கு அனுப்பி வையுங்கள். நான் ஒரு பதினைந்து நாட்கள் இருந்துவிட்டு வருகிறேன். அதற்குள் நீங்களும் இந்த நாவலை யாதொரு விதமான இடையூறுமின்றிப் படித்துவிடலாம்" என்றாள்.

"அதுவும் வாஸ்தவம் தான்!" என்று சொன்னான் ரகுராமன்.

மறுநாள் லக்ஷ்மியைத் தக்க துணையுடன் அவள் பிறந்தகத்துக்கு அனுப்பி வைத்தான்.

லக்ஷ்மி தன் பிறந்தகத்திலிருந்த போது ஒரு நாள் தபால்காரன் "லக்ஷ்மி ரகுராமன்" என்று குரல் கொடுத்தான்.

உள்ளேயிருந்த லக்ஷ்மி ஓடி வந்து அந்தக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டாள். கவரின் மீது எழுதப் பட்டிருந்த எழுத்தைப் பார்த்ததுமே, தன் கணவனிடமிருந்துதான் வந்திருக்கிறது என்று அறிந்து அவள் அடைந்த ஆனந்தம் இவ்வளவு அவ்வளவு அல்ல!

என் அன்பிற்குரிய லக்ஷ்மி,

நீ புறப்பட்டுச் சென்று இன்றுடன் பன்னிரண்டு நாளாகிறது! படிக்க வேண்டும் என்று ஆவலுடன் கொண்டு வந்த புஸ்தகத்தில் ஒரு பக்கங்கூட இதுவரை படிக்க முடியவில்லை. நீ இங்கே இருந்த பொழுதாவது, வீட்டில் படிக்க முடியவில்லை என்றாலும், ஆபீஸில், டிராமாவில், பஸ்ஸில், சினிமாக் கியூ வரிசைகளில் இப்படிப் பல இடங்களில் படிக்க முடிந்தது. இப்பொழுது எங்கேயும் படிக்க முடிவதில்லை. அதனால் இந்தக் கடிதத்தைக் கண்டவுடனே புறப்பட்டு வரவும்.

இப்படிக்கு உன் அன்புள்ள
ரகுராமன்

* * *

இரண்டு நாளில் லக்ஷ்மி புறப்பட்டு வந்து விட்டாள். வந்ததும் வராததுமாக அவள், அவனைக் கேட்ட கேள்வி இது தான்: "என்னை இத்தனை நாளும் மறந்து தானே இருந்தீர்கள்? ஞாபகம் இருந்திருந்தால், பன்னிரண்டு நாட்களா பொறுத்துக் கொண்டிருந் திருப்பீர்கள்? அப்போதே, நான் போன நாலாவது நாளே வரச் சொல்லி எழுதியிருக்க மாட்டீர்களா? என்ன இருந்தாலும் புருஷர்கள் சுபாவம் உங்களை விட்டு எங்கே போகும்?" என்று கண்ணீருக்கு இடையே கூறினாள்.

ரகுராமன் 'என்ன இருந்தாலும் பெண் பெண் தான்! அவளை விட்டு அந்தச் சுபாவம் எங்கே போகும்?" என்று எண்ணிக் கொண்டான்.

* * *

சென்ற ஞாயிற்றுக் கிழமை புத்தகாலயத்துக்குப் போயிருந்தேன். அங்கே ரகுராமனும் வந்திருந்தான்.

ரகுராமன் தன்னுடன் கொண்டு வந்த புஸ்தகத்தைப் புஸ்தகாலய குமாஸ்தாவிடம் நீட்டினான்.

அவர் அவன் புஸ்தகத்தைப் பார்த்து விட்டு "ஸார், நீங்கள் ஒரு ரூபாய் இரண்டணா அபராதம் செலுத்த வேண்டும். நீங்கள் புஸ்தகம் திருப்பித் தரவேண்டிய தேதிக்கு மேல் பதினெட்டு நாள் வைத்துக்கொண்டிருந்திருக்கிறீர்கள்!" என்றார்.

"ஆமாம்" என்று சொல்லிக் கொண்டே ஒரு ரூபாய் இரண்டணாவைக் கொடுத்தான்.

நான் பிரமித்துப் போய் "என்ன ரகுராமா, ஏன் இவ்வளவு அபராதம் செலுத்துகிறாய்? புஸ்தகத்தைக் காலா காலத்தில் திருப்பிக் கொடுத்திருக்கப் படாதோ?" என்றேன்.

"புஸ்தகம் திருப்பிக் கொடுக்க வேண்டிய சமயத்தில் ஊருக்குப் போயிருந்த என் மனைவி வந்து சேர்ந்தாள். அதில் புத்தகாலயத்திலிருந்து புஸ்தகம் வாங்கியதே மறந்து போய் விட்டது!"

"பலே, புதுக்குடித்தனமோ இல்லையோ அப்படித்தான் இருக்கும்!" என்று என் மனக்குள் சொல்லிக் கொண்டேன்.



கூடத்து நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து கொண்டு அன்றையத் தினப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான் ரமணி. அவன் தம்பி கோபுவும் தங்கை லக்ஷ்மியும் தரையில் உட்கார்ந்து தாயக் கட்டம் ஆடிக் கொண்டிருந்தனர். பத்திரிகை படிப்பதில் பெரிதும் ஈடுபட்டிருந்த அவனுக்கு எதிரே அவன் தாயார் வந்து நின்றது கூடத் தெரியவில்லை.

"ஏண்டா ரமணி! உன் பெரிய அத்தை நூறு தரம் சாப்பிடக் கூப்பிட்டு விட்டுப் போயிருக்கிறாளே! நீ போக வில்லையா!" என்று கேட்டாள் அவன் தாயார்.

"நான் ஒன்றும் போகப் போவதில்லை" என்று பத்திரிகையைப் பார்த்துக் கொண்டே பதிலளித்தான் ரமணி.

"அப்படிச் சொல்லாதேடா! நீ போகா விட்டால் என் மேல்தான் உன் பெரிய அத்தை வீண் பொல்லாப்புக் கூறுவாள். இந்தத் தடவை மட்டும் நீ போய்விட்டு வந்து விடு...!" என்று கெஞ்சினாள் ரமணியின் தாயார்.

"போ, அம்மா! என்னைத் தொந்தரவு செய்யாதே" என்று வெறுப்புடன் பதிலளித்து விட்டுப் பத்திரிகை படிப்பதில் கவனத்தைச் செலுத்தினான் ரமணி.

"அம்மா! அண்ணாவை மட்டும் பெரிய அத்தை அடிக்கடி சாப்பிடக் கூப்பிடுகிறாளே......! என்னைக் கூப்பிட்டால் நான் ஒன்றும் அண்ணாவைப் போல் பிகு பண்ணிக் கொள்ள மாட்டேன். ஆனால் பெரிய அத்தை என்னை ஒரு தடவையாவது கூப்பிடவில்லையே!" என்று அலுத்துக் கொண்டான் அவன் தம்பி கோபு.

"போடா! உனக்கும் வயதானால் எல்லோரும் உன்னைப் போட்டி போட்டுக்கொண்டு கூப்பிட வருவார்கள். கவலைப்படாதே!" என்று அவனுக்கு ஆறுதல் கூறினாள் ரமணியின் தாயார்.

"அம்மா, நேற்று நான் ஆற்றங் கரைக்குக் குளிக்கப் போனேன் அல்லவா? அப்போ பெரிய அத்தையும் என் கூடக் குளிக்க வந்தாள். எதிரே சின்ன அத்தை குளித்து விட்டு வந்து கொண்டிருந்தாள். பெரிய அத்தையைப் பார்த்ததும் சின்ன அத்தை என்ன செய்தாள் தெரியுமோ? முகத்தைத் திருப்பிக் கொண்டு தூர ஒதுங்கிப் போய்விட்டாள். ஏன், அம்மா! பெரிய அத்தைக்கும் சின்ன அத்தைக்கும் சண்டையா, என்ன?" என்று சந்தேகத்துடன் கேட்டாள் லக்ஷ்மி.

"ஆமாம்! இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதில்லைதான். ஒருவர் வீட்டுக்கு ஒருவர் போவதில்லை. எல்லாம் உன் அண்ணாவாலேதான்!" என்றாள் ரமணியின் தாயார்.

"ஏன் அம்மா! அண்ணாவுக்குச் சின்ன அத்தை பெண் ஜெயத்தைத்தானே கல்யாணம் பண்ணி வைக்கணும்! அவள்தான் பெரிய அத்தை பெண் பத்மாவை விட அழகு......!" என்று கூறினாள் லக்ஷ்மி.

"போடி! அண்ணாவுக்கு ஜெயம் ஒன்றும் வேண்டாம். பத்மாவின் வீட்டிலேதான் காரு, வண்டி எல்லாம் இருக்கிறது. ஜெயத்தின் அகத்திலே என்ன இருக்கிறது? பிரம்பும் இரண்டு டிராயிங் கோட்டுக்களுந் தானிருக்கும்" என்று இடைமறித்தான் கோபு.

"போடா! ஜெயத்துக்குத்தான் நன்றாகப் பாடத் தெரியும். பத்மாவுக்குப் பாடத் தெரியுமா? அவள் பாடினால் கர்ண கடூரமாயிருக்கும். கேட்கச் சகிக்காது" என்றாள் லக்ஷ்மி, ஜெயத்துக்குச் சாதகமாக.

"பத்மாவுக்குப் பாடத் தெரியா விட்டால் என்ன! அவர்கள் வீட்டு ரேடியோவைத் திருப்பி விட்டால் பாடிக்கொண்டே யிருக்குமே! உங்க ஜெயத்தின் வீட்டிலே ரேடியோ இருக்கா!" என்று எக்காளத்துடன் கேட்டான் கோபு.

இவ்வளவு நேரமும் அவர்களது பேச்சில் ஆழ்ந்திருந்த ரமணிக்குக் கையிலிருந்து பத்திரிகை நழுவிக் கீழே விழுந்ததுகூடத் தெரியவில்லை. மெதுவாகக் குனிந்து பத்திரிகையை எடுத்துப் படிக்கத் தொடங்கினான். ஆனால் அவன் எண்ணம் கோபுவும் லக்ஷ்மியும் பேசின பேச்சிலேயே லயித்து நின்றது. அதன் காரணமாக அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

உண்மையிலேயே ரமணியின் பாடு திண்டாட்டமாகத்தான் இருந்தது. பெரிய அத்தையும் சின்ன அத்தையும் போட்டி போட்டுக் கொண்டு அவனிடம் அன்பு பாராட்டியதில் அவன் திணறித் திண்டாடிப் போனான் என்றுதான் சொல்ல வேண்டும்.

பெரிய அத்தை அவனைக் கண்டு விட்டால் போதும்! உடனே அவள், "ஏண்டா ரமணி! எங்கள் வீட்டுப் பக்கமே தலைகாட்டவில்லையே! அந்தப் பெண் ஜெயத்தின் மினுக்கிலும் தளுக்கிலும் மயங்கி விட்டாயோ!" என்று கேட்பாள். ரமணி பதில் சொல்ல முடியாமல் திகைப்பான். சின்ன அத்தையின் கண்ணில் பட்டு விட்டால், "ஏண்டா, அப்பா! எங்கள் வீட்டுக்கெல்லாம் வருவாயா! பணக்காரப் பெரிய அத்தை கூப்பிட்டால் போவாய். என்ன இருந்தாலும் நான் ஏழை டிராயிங் வாத்தியாரின் மனைவிதானே! என்னை லட்சியம் செய்து வருவாயா!" என்று இடித்துக் கூறுவாள். ரமணியோ அவளுடைய பேச்சுக்குப் பதில் சொல்ல முடியாமல் விழிப்பான். ஏதாவது பதில் சொன்னால் அதையும் அவள் தவறுதலாக எடுத்துக் கொண்டு விட்டால் என்ன செய்வது! அதனால் ஒரு பதிலும் சொல்லாமல் வாய் மூடி மௌனியாக நின்று கொண்டிருப்பான். இவ்வாறு இரண்டு அத்தைகளிடமும் அகப்பட்டுக் கொண்டு இருதலைக்கொள்ளி எறும்பு போல் தவித்து வந்தான் ரமணி.

★


ரமணியின் தகப்பனார் தாசில்தாராக இருந்து ரிடையரானவர். அவர் வேலையிலிருந்து ஓய்வு எடுத்துக் கொண்டதும் தனது சொந்த ஊரிலேயே குடியேறினார். அவருக்கு மூன்று குழந்தைகள். மூத்தவன்தான் ரமணி. அவன் பி. ஏ., வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். இரண்டாவது பெண் லக்ஷ்மி. அவள் கான்வெண்டில் முதல் பாரம் படித்துக் கொண்டிருந்தாள். கடைசிப் பையன் கோபு மூன்றாம் வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தான்.

அவருக்கு இரண்டு சகோதரிகள் இருந்தனர். இருவரும் உள்ளூரிலேயே வாழ்க்கைப் பட்டிருந்தார்கள். மூத்த சகோதரியின் கணவர் உள்ளூரிலேயே பெரிய வக்கீல். அவருக்குப் பெரிய வீடும், காரும், நிறைய பூஸ்திதியும் இருந்தன. இளைய சகோதரியின் கணவர் உள்ளூர் ஹைஸ்கூலிலேயே டிராயிங் மாஸ்டராக இருந்து வந்தார்.

நாட்கள் ஆமைபோல் நகர்ந்து சென்றன. ரமணியும் பி. ஏ., பரிக்ஷையில் பாஸ் செய்து விட்டான். அவனுடைய மாமா ஜகதீசய்யர் சென்னையில் பிரபல கம்பெனியில் மானேஜர். அவருடைய தயவினால் சென்னையில் ஒரு நல்ல உத்தியோகம் அவனுக்குக் கிடைத்து விட்டது. ரமணிக்குத் தன் ஊரை விட்டுப் போவதில் உண்டான ஆனந்தம் கொஞ்ச நஞ்சமல்ல. ஆம்! தன் அத்தைகளிருவருடைய சிரமத்திலிருந்தும் விடுதலை கிடைக்கப் போவதென்றால் அவன் மகிழ்ச்சியடைவதற்குக் கேட்பானேன்!

ரமணி சென்னைக்கு வந்து தன் உத்தியோகத்தை ஏற்றுக் கொண்டான். அவன் மாமாவின் வீட்டிலிருந்து கொண்டே ஆபீஸ் போய் வந்து கொண்டிருந்தான். ரமணிக்கு ஜகதீசய்யரின் வீட்டில் ஆசார உபசாரங்களும் தடபுடல் பட்டது. ஜகதீசய்யர் ரமணிக்கு அக்கறையுடன் வேலை வாங்கிக் கொடுத்து, தன் வீட்டிலேயே அவனை வைத்துக் கொண்டதற்குக் காரணம் கல்யாண வயதில் அவருக்கு ஒரு பெண் இருந்ததுதான்.

ரமணிக்கு வேலையாகி விட்டதை யறிந்ததும் அவன் கல்யாணப் பேச்சு அடிபட ஆரம்பித்



தது. அவனுடைய தகப்பனார் தன் சகோதரிகளில் யாராவது ஒருத்தியினுடைய பெண்ணைத் தான் தன் பிள்ளைக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டுமென்று எண்ணினார். ஆனால் ரமணியின் தாயாரோ, 'அதெல்லாம் கூடாது. என் அண்ணாவின் உதவியினால்தான் ரமணிக்கு உத்தியோகம் கிடைத்திருக்கிறது. அதனால் அவன் அவருடைய பெண்ணைத்தான் மணந்து

கொள்ள வேண்டும்' என்றாள். கடைசியில் ரமணியின் தாயார் பக்கம்தான் ஜெயித்தது. ரமணி தன் மாமா ஜெகதீசய்யரின் பெண்ணையே மணந்து கொள்ள வேண்டியதாயிற்று.

★

ஒரு வாரம் லீவு எடுத்துக்கொண்டு ரமணி தன் மனைவியுடன் சொந்த ஊருக்கு வந்து சேர்ந்தான். ரமணியின் தாயார் அவனையும் அவன் மனைவியையும் ஆரத்தி சுற்றி வரவேற்றாள். அவளுக்கு ஆனந்தம் நிலைகொள்ள வில்லை. தன் அண்ணாவின் பெண்ணையே தன் விருப்பப்படி ரமணி மணந்துகொண்டான் என்றால் அவள் பூரிப்புக்குக் கேட்பானேன்!

ரமணிக்குத் தன் அத்தைமார்கள் இருவரையும் போய்ப் பார்த்துவிட்டு வர வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. ஆனால் அவர்கள் கடுமையாகப் பேசினால் என்ன செய்வது என்கிற பயம் அவனை அவர்கள் வீட்டுக்குப் போகவொட்டாமல் தடுத்தது.

அன்று மாலை உலாவுவதற்காகத் தெருவில் போய்க்கொண்டிருந்தான் ரமணி. அவனுடைய பெரிய அத்தை எதிரே வந்து கொண்டிருந்தாள். ரமணி அவளைப் பார்த்ததும் சிறிது திகைத்து நின்றான். தன்னிடம் வந்து கண்டபடி அவள் திட்டப் போகிறாள் என்று எதிர்பார்த்தான். ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக அவனுடைய பெரிய அத்தை முகத்தைத் திருப்பிக்கொண்டு ஒதுங்கிப் போனது அவனுக்கு ஆச்சர்யத்தை விளைவித்தது.

ஆனால் இதைவிட மிகுந்த ஆச்சர்யத்தையும் திகைப்பையும் அளித்தது மறுநாள் காலையில் நடந்த சம்பவம்தான்.

மறுநாள் காலை எட்டு மணியிருக்கும். ரமணி குளிப்பதற்காக நதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். அவன் குளிக்கும் துறைக்கு அருகே வந்ததும் யாரோ இருவர் பலத்த குரலில் பேசிக்கொண்டிருந்தது அவன் காதில் தெளிவாக வந்து விழுந்தது. அவர்களுடைய பேச்சு அவனைப் பற்றியிருந்ததனால் ரமணிக்கு அதற்கு மேல் அடியெடுத்து வைக்க முடியவில்லை. யார் பேசுகிறார்கள் என்று கூர்ந்து நோக்கினான். அவன் அங்கு கண்ட காட்சி அவனைத் தூக்கி வாரிப் போடும்படி செய்தது. ஆம்! அவன் திருமணத்துக்கு முன் எலியும் பூனையுமாக இருந்த அவனுடைய அத்தைகளிருவருந்தான் அங்கே பேசிக்கொண்டிருந்தார்கள். அருகிலிருந்த ஒளிவில் மறைந்து நின்று கொண்டு அவர்கள் பேச்சைக் கூர்ந்து கேட்கத் தொடங்கினான் ரமணி.

"ஏன், அக்கா! அந்தப் பிள்ளை ரமணி தன் அகமுடையாளோடு வந்திருக்கிறதாமே! அவர்கள் வந்ததில் அவன் அம்மாவுக்குத் தலை கால் தெரியவில்லையாமே!"

"எந்தச் சனியன் வந்தால் என்ன! நமக்கு என்ன வந்தது! பார்! கூடை கூடையாக என் அகத்துக்காரர் வாங்கி வந்த ஆப்பிள் பழத்தையும், மாம்பழத்தையும் அவர்கள் வீட்டில் கொண்டு போய்க் கொட்டினேன். கடைசியில் எல்லாம் விழலுக்கு இறைத்த நீர் போல ஆச்சு......!"

"அக்கா! நானுந்தான் எங்கள் வீட்டில் காய்த்த முருங்கைக் காயும், வாழைக் காயும் கொண்டுபோய்க் கொடுத்தேன். கடைசியில் என் பெண்ணையும் அந்தப் பிள்ளைக்குக் கட்டிக் கொள்ளவில்லை. எல்லாவற்றையும் வாங்கி வைத்துக்கொண்டு ஏமாற்றி விட்டான்...!"

"அதுசரி! அப்படியாவது உன் பெண்ணையாவது அந்தப் பிள்ளைக்குக் கல்யாணம் செய்திருந்தால் வருத்தப்பட்டிருக்க மாட்டேன். நான் உனக்குக் குறுக்கே வந்து கூட நின்றிருக்கமாட்டேன். அதையெல்லாம் விட்டு விட்டு எங்கேயோ ஒரு குடிசடையை அல்லவா பார்த்து முடித்து விட்டான்!......"

"அக்கா! உன் பெண்ணுக்கு என்ன குறைச்சல்! பணமென்ன, அந்தஸ்தென்ன! அந்தப் பெண்ணைக் கட்டிக் கொள்ளக் கசந்ததே! உறவு முறைகூட அற்றுப் போய்விட்டதே! என்ன செய்வது!"

"அது சரி! அவர்கள் எக்கேடும் கெட்டுப் போகட்டும். சாயந்திரம் என் வீட்டுக்கு வருகிறாயா! பட்சணம் கொஞ்சம் பண்ணலாமென்றிருக்கிறேன். நீ வந்தால் கொஞ்சம் ஒத்தாசையாயிருக்கும்...!"

"ஆகட்டும் அக்கா! காரியமெல்லாம் முடிந்ததும் அங்கே வந்து விடுகிறேன்!"



அவர்களுடைய சம்பாஷணை ரமணியைச் சிறிது நேரம் திகைப்படையும்படிச் செய்து விட்டது.

எலியும் பூனையுமா யிருந்த அத்தைகள் இருவரும் ஒன்று சேர்ந்தது அவனுக்குப் பெரு மகிழ்வை யூட்டியது. இதற்குக் காரணம் என்ன? தன் கல்யாணம். ஆகவே ரமணி வந்த சுவடு தெரியாமல் திரும்பி மற்றொரு துறைக்குக் குளிக்கக் கிளம்பினான். அவன் வாய் அவனையுமறியாமல், "வாழ்க நம் கல்யாணம்!" என்று மனமார வாழ்த்தியது.



ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரஸ்வாமி

40. கண்டமாலை

மாங்காய் மாலை, காக மாலை என்றெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் கண்ட மாலை என்பதைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா! இதை எங்கும் வாங்க முடியாது. எந்தக் கடைகளிலும் விற்காது. அந்த ஆபரணங்கள் அழகைத்தரும். இது விகாரமாய் இருக்கும். (கண்டத்தை) கழுத்தைச் சுற்றி சிறு சிறு கட்டிகளாக வருவதால் 'கண்ட மாலை' என்று பெயர் வைத்தார்கள் போலும்.

இதுவும் தைராய்ட் கெடுவதால்தான் வருகிறது. தைராய்ட் கோளங்கள் தன் ரஸத்தைச் சரிவரச் சுரக்காத போது சரீரத்தில் அயோடின் சக்தி குறைகிறது. சரீரத்தில் ஏற்படும் மாறுதல்களையெல்லாம் சரி செய்வது தைராய்ட் ரஸமே. தசை நார்களைச் சீர்செய்து கட்டுவதும் வேண்டாத கழிவு பதார்த்தங்களைக் கழிப்பதும் இத்தைராய்ட் ரஸமே. இது சரிவரக் கிடைக்காத போது அவயவங்களில் பல பெருகவும், வீங்கவும் செய்கின்றன.

சிலருக்குத் தாடைக்குக் கீழே கழுத்தைச் சுற்றிக் கட்டிகளாக இருக்கும். சிலருக்குக் கழுத்தில் ஒருபக்கம் மட்டும் அப்படியே வீங்கி இருக்கும். சிலருக்குக் கட்டிகளாக வெளியிலும் தெரியச்செய்யும். ஒரு சிலருக்கு மிகவும் முற்றிக் கட்டிகள் மேல் கட்டிகளாக, சிறுசாகவும் பெரிசாகவும் காய்த்துத் தொங்கும். மனிதனின் அழகைக் கெடுக்க இதைவிட வேறென்ன வேண்டும்!

மாங்காய் மாலை காக மாலை போட்டவர்கள் கழுத்தைத் திருப்புவது ஒரு தினுசாய் இருக்கும். பணத்தின் பெருமையோ! அல்லது கனத்தின் அழுத்தலோ! ஆனால் இந்தக் கண்டமாலை வந்தவர்கள் பணத்தின் பெருமையாய் இல்லாவிட்டாலும் கட்டிகளின் கனம் அழுத்துவதால் கழுத்தைத் திருப்பவும் கஷ்டப்படுவர்.

இதை மிக ஆரம்பப் பருவத்திலேயே தக்க சிகிச்சை செய்து கொண்டால் குணமாய் விடும். இல்லையானால் பிறகு குணப்படுத்துவது கஷ்டம். முடியாது என்று கூடச் சொல்லலாம். சிலருக்கு வலி இருக்கும். அதனால் தான் கழுத்து திரும்ப முடியவில்லை. சிலருக்கு வலி இருக்காது. சிலருக்குக் கட்டிகள் உடைந்து சீழ் வரும். ஆனால் லேசில் ஆறாது. மிகவும் ஜாக்கிரதையாய் ஆற்ற வேண்டும். சிலருக்குக் கட்டிகள் உள்ளேயே உடைந்து சீழும் ரத்தமும் தொண்டைக்கு உள்ளே சென்று விடும். அவர்கள் வாந்தி செய்வர். சீழும் ரத்தமும் வரும். இம்மாதிரி கேஸ்கள் பிழைப்பது கஷ்டம்.

தற்காலத்தில் இதற்கு அல்ட்ரா வயலெட் சிகிச்சை தருகிறார்கள். அந்த ரஸ்மி, தைராய்டைத் தூண்டிவிடுகிறது. பலநாள் இப்படிச் செய்தால் தைராய்ட் கிளர்ச்சி அடைந்து தன் வேலையைச் சரிவரச் செய்கிறது. பிறகு இக் கட்டிகள் தானாகக் கரைந்து விடுகிறது. ஆனால் எத்தனை பேருக்கு இச்சிகிச்சை அளிக்கமுடியும்! நகரங்களில் பெரிய ஆஸ்பத்திரிகளில் இச்சிகிட்சை அளிக்கப்படுகிறது. மற்றவர்களுக்கு!

இந்த வியாதிக்கு மேல் நாட்டார் கழுத்துப் பயிற்சி செய்யச் சொல்லுகின்றனர். சாதாரணமாய் உள்ளவர்கள் இம்மாதிரி வராமல் இருப்பதற்காகச் செய்யலாம். வியாதியின் ஆரம்ப நிலையில் உள்ளவர்களால் செய்ய முடியாது. கழுத்தை விறைப்பாய் வைத்துக் கொண்டு இரண்டு முஷ்டிகளைத் தாடைக்குக் கீழ் கொடுத்து நெக்கிப் பின்புறம் தலையைச் சாய்ப்பது. பிறகு முன் பக்கம் வளைப்பது. இம்மாதிரி பல சொல்லுகின்றனர். சாதாரணமாய் ஒரு இடத்தை அழுத்தினால் முன்பைவிட அந்த இடத்தில் அதிக ரத்தம் வரத்தான் செய்யும். அந்த முறைப்படி இந்தப் பயிற்சியிலும், ரத்தம் வரலாம். அதனால் தைராய்டிற்கும் சிறிது பலன் என்னமோ உண்டு. ஆனால் சர்வாங்காசனத்தில் கிடைப்பதைப் போல முழுப் பலன் இதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அப்படிக் கிடைத்தாலும் அரை குறையாகக் கிடைக்கும்.

சர்வாங்காசனத்தில், 'தைராய்ட் பூமியின் பக்கம் இருப்பதால், இயற்கை ஆகர்ஷண சக்தி அதற்குத் தானாக ரத்தம் பாயும்படி செய்கிறது. அதனால் செய்பவர்களுக்குக் கஷ்டமில்லை. மிகப் பலவீனமானவர்களும், நோய் வாய்ப்பட்டவர்களும் செய்து குணமடையலாம். ஆனால் மேல்நாட்டுப் பயிற்சியானது திடசாலிகளால் தான் செய்ய முடியும். ஆகவே அவர்களும் தைராய்டை ஊக்குவித்தாலே பலன் காண முடியும், என்ற முடிவுக்கு வந்திருக்கின்றனர். அதுவரைக்கும் திருப்தியே. ஆனால் செய்யும் முறையில்தான் வித்தியாசம்.

இந்த வியாதிக்கு மற்றொரு முறையும் டாக்டர்கள் சிபாரிசு செய்கின்றனர். தைராய்டின் அயோடின் சத்து குறைவினால் இம்மாதிரி வியாதிகள் உண்டாகின்றன. ஆகாரத்தின் மூலம் அதைச் சரிப்படுத்திவிடலாம் என்கின்ற

ளர். கடல் பாசி, கீரைகளில் அயோடின் சத்து அதிகம் இருக்கிறதாம். அது அவர்களுக்குத்தான் தெரியும். எதைச் சாப்பிடக் கூடாது என்பதை யெல்லாம் நாம் யாரிடம் போய்க் கேட்பது! பூசாரத்தின் சத்து குறைந்து விட்டதால் இந்தக் கடல் பாசிகளை எருவாக உபயோகப் படுத்தினால், அதில் விளையும் பொருள்கள் அயோடின் சத்து உடையதாய் இருக்கும் என்கின்றனர். இவைகளெல்லாம் மேல் நாடுகளில் நடக்கலாம். இங்கு கிடைக்கக்கூடிய சாதாரண எருவுக்கே திண்டாடும் குடியானவன், இவற்றை யெல்லாம் எங்கு தேடிப் போடப் போகிறான்! ஆனால் முறை என்னமோ வரவேற்கக் கூடியதுதான்.

காய் கறி, கீரை வெந்த தண்ணீரைக் கொட்டாமல் பால், வெண்ணெய் நிறையச் சாப்பிட்டாலே போதும். கூட சர்வாங்காசனம் செய்தால் நிச்சயமாய்ப் பூரண பலன் உண்டு. வெண்ணெயைக் கையில் வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானேன்! சர்வாங்காசன வெண்ணெய் கையில் இருக்கவே இருக்கிறது. அதைச் செய்து பலன் பெறுவோமே!

இந்த வியாதி பெரியவர்களுக்கு மட்டு மல்ல. சிறு குழந்தைகளுக்கும் வருகிறது. கிளாண்ட் கட்டி என்பர். ஒன்றும் சாப்பிடமாட்டார்கள். அடிக்கடி ஜுரம் வரும். சாப்பிட்ட ஆகாரம் ஜீரணமாகாது. உடம்பு நாளுக்கு நாள் இளைத்து விடும். ரத்த சோகை உண்டாகும். கண்ணில் ஒளி மங்கி விடும். அவர்கள் படும் பாடு காணச் சகிக்காது. அப்பேர்ப்பட்ட குழந்தைகளை நாம் கிட்ட இருந்து காலைப் பிடித்துப் பொறுமையாய்ச் செய்விக்க வேண்டும். விடாமல் 20 நாள் செய்தால், பிறகு நாளுக்கு நாள் குணமானதைக் காண்பீர்கள். 3, 4 மாதத்தில் பூராவும் கரைந்து குழந்தை முன் போல் ஆரோக்கியமாய் விடும்.

வாய்ப் புண் சிலருக்கு வருவதுண்டு. ஒருவித அம்மை என்று சொல்லுவர். இது வந்தால் எதுவும் சாப்பிட முடியாது. விழுங்க முடியாது. தாடையின் கீழ் கோளங்கள் (Glands) வீங்கிவிடும். அதை நெறி என்று சொல்லுவர். இதற்கு இளநீர், வெண்ணெய், கஞ்சி முதலிய காரம் புளிப்பில்லாத வஸ்துக்களாகக் கொடுத்து குணப்படுத்த வேண்டும். சிலருக்கு நல்ல ஜுரம் அடிக்கும். ஜுரமில்லாதபோது சர்வாங்காசனமும் செய்து காரம், புளி இல்லாப் பத்தியமும் இருந்தால் வெகு சீக்கிரம் குணமாய்விடும்.

புட்டாலம்மை அல்லது பொன்னுக்கு வீங்கி என்பர். இதுவும் ஒரு தொத்து நோய். கோளங்கள் வீங்குவதே இதற்குக் காரணம். இதற்கும் நல்ல ஜுரம் அடிக்கும். வீக்கம் தெரிந்த பின் ஜுரம் தணியும். பிறகு மேலே சொன்ன பத்தியங்களுடன் இருக்க வேண்டும். ஜுரம் அடிக்கும் சமயம் சர்வாங்காசனம் செய்யக்கூடாது. போன பின் செய்யலாம்.

ஏன்! எல்லோருமே செய்தால் ஒன்றுமே வராமல் நிம்மதியாய்ப் பயமற்று இருக்கலாமே! நாம் எவ்வளவு சுத்தமாய் இருந்தாலும் குழந்தைகள் பள்ளியில் போய் மற்றக் குழந்தைகளுடன் பழகும் போது பல நோய் பரவ ஏதுவாகிறது. நம் குழந்தைகள், நாம், திடமாய் நல்ல ஆரோக்ய தைராய்ட் உடையவர்களாய் இருந்தால் இம்மாதிரி தொத்து வியாதிகளெல்லாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை அல்லவா! காலரா, அம்மை, கக்குவான், க்ஷயம் இவைகள் எல்லாம் எப்பொழுது நாம் பலவீனப் படுவோம், உள் நுழைந்து விடலாம் என்று காத்திருக்கின்றன. சர்வாங்காசனம் செய்து உடலை உறுதியான கோட்டையாக்கி விட்டால், இவைகள் எல்லாம் என்னதான் வந்து தாக்கினாலும் கோட்டைச் சுவர் தகராது. வியாதிகள் எனும் விரோதி உள் நுழைய மாட்டான். நாம் எந்தவிதத் தொத்து நோய் உள்ள விடத்திற்கும் தாராளமாய்ப் போகலாம். பழகவும் செய்யலாம். (தொடரும்)

★

குமாரியின் நடனம்

தேப்பெருமான் நல்லூரில் சமீபத்தில் நடைபெற்ற அன்னதான சிவன் அவர்களின் ஞாபகார்த்தத் திருவிழாவில், கும்பகோணம் டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர்களின் புதல்வி குமாரி சாருபாலா நடனமாடிச் சபையோரின் பாராட்டுதலைப் பெற்றாள்.

★



கமலா—என் மனைவி

டி. ஜி. பத்ருஸ்வாமி

பட்டணத்துக் கம்பெனி யொன்றில் வேலை பார்த்து வந்த கமலாவின் தகப்பனார் அதன் கிளைக் காரியாலயத்துக்கு மாற்றலாகிக் கும்பகோணம் வந்தபோது அவருக்கு நான் தங்கியிருந்த வீட்டில்தான் இடம் கிடைத்திருந்தது. அவர் முதலில் தனி மனிதராகத்தான் வந்தார். எனக்குக் 'காலேஜூம்' அவருக்கு 'ஆபீஸூம்' மாலை ஆறு மணிக்கப்புறம் இடையாதாகையால் பிரதி தினமும் இரவில் நாங்கள் இருவரும் சேர்ந்தே ஹோட்டலுக்குச் சென்று சாப்பிடுவது வழக்கமாக இருந்தது. பின்னர் ஒருநாள் அவர் தம் குடும்பத்தை அழைத்து வந்துவிடப் போவதாகக் கூறியபோதும் நான் அஸ்வாரஸ்யமாகவே அதைக் கேட்டுவைத்தேன். அவருடன் எனக்கு ஏற்பட்ட நட்பு 'ரயில் சிநேகம்' என்கிறார்களே, அதுமாதிரி என்று எண்ணியிருந்தேன்.

ஆனால் அவருடைய குடும்பத்தினர் வந்து அவர்களுள் கமலாவையும் பார்த்த பின்புதான் என் உள்ளம் தன் தவறை உணர்ந்தது.

அந்தக் குடும்பத்தில் மூன்றே பேர்கள்தான். கமலா—அவளுடைய சித்தியும், தகப்பனாரும். நான் கண்ட முதல் பார்வையிலேயே கமலாவைப் பற்றிய எண்ணம் என்னுள் நிலைத்து விட்டது. அவள் வந்த பின்பு என் நினைவு, செயல்—யாவுமே அவளுடைய விமரிசனத்திற்கு உட்பட்டவை என்ற நம்பிக்கை என்னுள் நான் எவ்வளவோ தடுக்க முயன்றும் வளர்ந்து கொண்டுதான் இருந்தது......

கமலாவின் தாயார் அவள் பிறந்தவுடனேயே இறந்து விட்டாள். அவளைப் பொறுப்புடன் வளர்க்கும் பணிக்காக வென்று அவள் தகப்பனார் இரண்டாங் கல்யாணம் செய்து கொண்டார். ஆனால் மாற்றாந் தாயாக வருபவர்கள் அனைவருமே பாரபட்சமற்ற மனப்பான்மையுள்ளவர்களாக இருந்து விடுவதில்லை யல்லவா! கமலாவின் சித்தி நல்லவள்தான் என்றாலும் கொஞ்சம் முன் கோபம் அதிகம் படைத்தவள்! சில சமயங்களில் அவள் கமலாவைக் 'குறுக்கு விசாரணை' செய்யும்போது எவ்வளவு பொறுமைசாலியாயினும் ஆத்திரம் பிறிட்டுக் கிளம்பத்தான் செய்யும்.

ஏறக்குறையப் பதினேழு வயது நிறைந்து விட்ட கமலாவை அவள் சித்தி அடிக்கடி படுத்திக் கொண்டிருந்தாள். சித்தியின் மிரட்டலையும் அதிகாரத்தையும் தாங்கமாட்டாமல் அவள் விசித்து விசித்து அழுது கொண்டிருக்கும் ஒலியை நான் கேட்க நேரும்போதெல்லாம் என்னுடைய இருதயம் சுக்கு நூறாக வெடித்து விடும் போல் தோன்றும். ஆனால் நான் கமலாவுக்கு இளையுள்ள வயது வந்த பையன்; அவளுக்காக நான் 'வக்காலத்து' வாங்கிக் கொண்டு நேர்மையை எடுத்துக் கூற முயல்வது கமலாவுக்குத் தீமையாக முடிந்து விட்டால்......என்ற பயம் எனக்கு.

கண்ணராவியான அவளுடைய நிலையைப் பார்த்துச் சகிக்கமாட்டாமல் வேதனை யுற்றுக் கொண்டிருப்பதை விட வேறு எங்காவதும் ஜாகை மாற்றிவிடலாம் என்று எண்ணிவிட்டேன். நிர்க்கதியாகத் தவிக்கும் அபலைப் பெண்ணின் துயரை நீக்க முடியாமல் அஞ்சி ஓடுவது போன்ற அறிவீனம் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்க வில்லை.

*

ஒருநாள் நடந்த சம்பவம் இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. அந்த நினைவு தோன்றுகையில் சித்தியின் மீது எனக்கு எல்லையற்ற வெறுப்பு உண்டாகத்தான் செய்கிறது......

சாயங்காலம் காப்பி போடுவதற்கென்று வைத்திருந்த பாலைப் பூனை குடித்துவிட்டதாம். அதற்குக் கமலா என்ன செய்வாள்! அவளுக்கு இருக்க வேண்டும் என்று அடித்துச் சொல்லுகிற அதே பொறுப்பு அவளுடைய சித்திக்கும் அவசியம்தானே!

சித்தியின் அட்டகாசத்தை ஆரம்பத்திலிருந்தே நான் கவனிக்கத் தொடங்கி விட்டேன்.

"அம்மா, கமலா!" என்று ஏகத்தாளமாக அழைத்தாள் சித்தி.

கமலா உள்ளே பற்றுத் தேய்த்துக் கொண்டிருந்தாள். அங்கிருந்தவாறே அவள், "ஏன் சித்தி!" என்று பதிலுக்குக் குரல் கொடுத்தாள்.

"கூப்பிட்டால் இருந்த இடத்திலிருந்துதான் கேட்க வேண்டுமா!" என்று சித்தி கேட்ட மாதிரி அவளுடைய கோபம் உச்சத்தை நோக்கி முன்னேறுவதை உணர்த்திற்று.

அவசரம் அவசரமாகக் கமலா கையை அலம்பிக் கொண்டு வந்தாள்.

"டம்ளரைப் பார்த்தாயா! ஒரு சொட்டு பால்கூட அதில் இல்லை......"

"மூடித்தானே வைத்திருந்தேன், சித்தி!"

"அப்போது நான் குடித்து விட்டு உன்னிடம் போய் சொல்லுகிறேனாக்கும்!"

"பாழாய்ப் போகிற பூனைக்கு எப்படித்தான் தெரிகிறதோ! இத்தனைக்கும் நான் மூடி அலமாரியில் வைத்து விட்டுப் போனேன்."

"நாளைக்குக் கல்யாணம் பண்ணிக்கொண்டு புருஷனோடு வாழப் போகிறவளுக்கு இவ்வளவு அலட்சியம் கூடவே கூடாது. வயது வந்த பெண்ணு லட்சணமா, துளிக்கூட நடந்து கொள்ளத் தெரியவில்லையே! பொறுப்பு இருந்தால் அலமாரியைச் சாத்தாமல் போகலாமோ! நானுந்தான் ஆயிரந் தடவை இந்தப் பக்கம் வந்தேன். நீ இப்படிச் செய்து தொலைத்திருந்தது என் கண்ணுக்குப் பட வில்லை......"

"சாத்தித்தான் இருந்தேன், சித்தி!"

"அப்படியானால் பூனைக்குக் கை முளைத்து அலமாரியைத் திறந்து விட்டதாக்கும்!"

கமலா மௌனமாக நின்று கொண்டிருந்தாள். அவளுடைய கண்கள் மன்னிப்பைக் கோருபவை போல் பரிதாபமாகச் சித்தியை மருண்டு நோக்கின.

"பேசாமல் நின்று கொண்டிருந்தால் காப்பிக்குப் பால் வேண்டுமே! எங்கேயாவது போய் வாங்கிக் கொண்டு வந்துவிடு."

"நான் போயா!" என்று கமலா திடுக்கிட்டாள். இந்த வயதில் அவளுக்குக் கல்யாணம் ஆகியிருக்க வேண்டும்; ஆனால் இன்னும் ஆகவில்லை. ஆகையால் வெளியில் செல்ல அவள் வெட்கப்பட்டாள்.

"ஆமாம்; நீயேதான்! போனால் யாரும் உன்னைப் பிடித்துக் கொண்டு விடமாட்டார்கள்!"

"வேண்டாம், சித்தி. நான் போகவில்லை. எனக்கு வெட்கமாக இருக்கிறது!"

"சனியனே!......ஒரு காரியத்துக்கும் பிரயோஜனமில்லை......"

'பளார்' என்று கேட்ட அந்த சப்தம் என்னுடைய இருதயத்தில் அறைவது போன்றே இருந்தது. பதிலுக்குச் சித்தியை நானே சென்று அறைந்து விடலாம் என்றுகூட என் மனம் துடித்தது. ஆனால் அதற்கு நான் யார்! அவர்கள் குடும்ப விஷயத்தில் தலையிட என்ன உரிமை எனக்கு இருக்கிறது!

அன்று சித்தி இல்லாத சமயத்தில் கமலாவைச் சந்தித்தேன். அழகுத் தெய்வம் மனித உருவில் என் எதிரில் தோற்றினாற் போல் இருந்தாள் அவள். ஆனாலும் அவள் முயற்சிக்கும் அடங்காமல் வெளிப்பட்ட சோகத்தின் சாயை என்னுடைய நெஞ்சில் மிருந்த கலவரத்தை மூட்டி விட்டது.

"கமலா!" என்று நான் வாய் விட்டு முதல் தடவையாக அவளை அழைத்தேன். என்னைச் சிறிதும் எதிர்பாராத அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள். அவளுடைய பார்வையில்தான் எவ்வளவு குறுகுறுப்பும் ஆர்வமும்!

"சித்தி உன்னை மிகவும் கோபித்துக் கொள்ளுகிறாளே, அவளுக்கு ஏற்றாற் போல் நடந்து கொள்ள உன்னால் முடியாதா!" என்று கேட்டேன்.

என்னுடன் நேருக்கு நேர் நின்று பேச, அவளுக்கு வெட்கமாக இருந்திருக்க வேண்டும். அதை மறைக்க அவளுடைய முகத்தில் புன்னகை நிலவியது.

"முடியாதே!" என்று ஒரே வார்த்தையில் அவள் கூறிய பதில் உண்மையில் பொருட் செறிவு நிறைந்ததாகவே எனக்குப் பட்டது.

மனம் விட்டு அவளைப் பேசச் செய்துவிட வேண்டும் என்கிற என்னுடைய அபிலாஷை வியர்த்தமாகிவிடக் கூடாதல்லவா!

"சித்தி சொல்லுகிறபடி எல்லா வேலைகளையும் செய்து விட்டால்......அத்துடன் உன்னுடைய பொறுப்பு விட்டுப்போய் விடுகிறது. அப்புறமும் சித்தி உன்மேல் குறை சொல்ல இடமிருக்காது......"

மெல்ல அவள் நகைத்த போது அவளுடைய உடலும் அழகாகச் சற்றுக் குலுங்கிற்று.

"குடும்பத்தில் உள்ள கஷ்ட நஷ்டங்களில் இன்னும் உங்களுக்குப் பரிச்சயமே உண்டாக



முதல் திருடன்:—இந்த நாயை எதற்காகக் கொண்டு வந்தாய்?

இரண்டாவது திருடன்:—நான் திருடப்போன வீட்டில் ஒன்றும் இல்லை. வெறுங் கையோடு வரக் கூடாது என்று அவர்கள் வீட்டில் காவலுக்காக வைத்திருந்த நாயைக் கொண்டு வந்தேன்!

வில்லை. உங்கள் படிப்பு முடிந்ததும் உங்களுக்குக் கல்யாணமாகி......" என்று சொல்ல வந்ததை முடிப்பதற்கு முன்பாக என் திருஷ்டி அவளுடைய கண்களுடன் சங்கமம் பெற்று விட்டது. எல்லையற்ற குதூகலத்தில் அமிழ்ந்தது போல் அவள் முகம் சிவப்பேறியது.

அதற்குள் சித்தி வந்து விடவே நான் கமலாவைப் பிரிந்து வர நேர்ந்து விட்டது. அவள் சென்ற பின்புதான் அவளுடைய பேச்சின் பொருள் எனக்கும் புரியத் தொடங்கிற்று. சிலருடைய சுபாவமே பிறர்மீது எப்போது பார்த்தாலும் குறை கூறிக்கொண்டிருப்பது தானே! இந்த உண்மையில் என் மனம் நிலைத்ததும் அவள்மீது இருந்த மதிப்பு இன்னும் உயர்ந்து விட்டது ......

கோடை விடுமுறைக்காகக் கல்லூரியை மூடி விட்டார்கள். அதனால் நான் என்னுடைய ஊருக்குத் திரும்பச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. நான் புறப்படும் போது கமலா என்னிடம் ஏதோ சொல்லுவதற்குத் துடிப்பதுபோல் எனக்குள் ஒரு பிரமை! அவளை விட்டுப் பிரிந்து செல்ல எனக்குச் சிறிதும் மனமில்லை. ஆயினும் அந்த நிலைமையில் அவள் யாரோ, நான் யாரோ!

கோடை கழிந்து கல்லூரி திறந்ததும் நான் மீண்டும் கும்பகோணத்துக்கு வந்தேன். ஊரில் இருந்தபோது கமலாவைப் பற்றி என்னென்னவோ நினைவுகள்!

கமலாவின் தகப்பனார் சம்மதித்து விட்டால் எனக்குத் தடை விதிப்பவர்கள் யாரும் இல்லை. என்னுடைய கல்யாண சம்பந்தமான எல்லா சுதந்திரங்களையும் என் தாயார் என்னிடமே விட்டு விட்டாள்.

சமயம் நேரும்போது கமலாவின் தகப்பனாரைக் கல்யாண விஷயமாக நூலைடயாகக் கேட்டு விடலாம் என்று நான் நினைத்துக்

கொண்டிருந்தபோது அவளுக்கு வரன் தேடுவதாக எனக்குச் செய்தி எட்டிற்று......

அன்று ஏதோ விசேஷ தினமாகையால் எனக்குக் கல்லூரி இல்லை. வேறு போக்கிடம் தோன்றவில்லை யாதலால் வெளியில் எங்கும் செல்லவில்லை. கமலாவின் வீட்டில் காணப்பட்ட பரபரப்பிலிருந்து யாரோ அன்னிய மனிதர்கள் வரப்போவதை என்னால் ஊகித்துக் கொள்ள முடிந்தது.

மத்தியானம் மூன்று மணி சுமாருக்குக் கமலாவின் தகப்பனாரும் வேறு இருவரும் வண்டியில் வந்து இறங்கினார்கள். அவர்களை அழைத்து உபசரித்த விதத்திலிருந்து மரியாதைக்குரியவர்கள்போல் தோன்றினார்கள்.

வந்தவர்களுள் ஒருவர் மிகவும் வயதானவர். கிழவர் என்று சொன்னால் கூடப் பொருந்தும். மற்றவருக்கு நாற்பது பிராயத்துக்குக் குறையாது. இருந்தாலும் தம்முடைய இளம் பருவம் மறைந்துவிட்டதைப் பிறர் அறியாமலிருக்க வேண்டும் என விரும்பியவர்போல் ஆடம்பரமாக உடுத்தியிருந்தார். முதலில் நான் அவர்கள் எதற்கு வந்தார்களோ என்று கவனியாமல் இருந்து விட்டேன். ஆனால் அவர்கள் வந்த சற்று நேரத்திற்கெல்லாம் கமலாவின் பாட்டுக் குரல் கேட்கவே நான் துணுக்குற்று விட்டேன். அவர்கள்தான் வரன் பார்க்க வந்திருப்பவர்கள் என்பதற்கு என்ன சந்தேகம்!

'' உன்னை யல்லால் வேறே கதி......''

கமலா பாடிக் கொண்டிருந்தாள். அவளுடைய சாரீரத்தில் ஜீவன் குன்றிவிட்டாற்போல் எனக்கு மனப் பிராந்தி ஏற்பட்டது. அதே சமயம் அவள் மாற்றானின் உடைமையாகி விடப் போகிறாள் என்ற நினைவும் என்னை வதைக்கத் தொடங்கிற்று. அவள் பாடிய அந்தப் பாட்டின் பொருள்!

வந்திருப்பவர்கள் நிச்சயம் சம்மதித்து விடுவார்கள் என்பதில் எனக்குத் துளிக்கூடச் சந்தேகமில்லை. கமலாவைச் சகதர்மிணியாக அடையக் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா! அந்த விஷயத்தில் நான் அதிர்ஷ்டஹீனன் ஆகிவிட்டதாக என் உள்ளம் குறுகுறுத்தது.


அன்று சாயங்கால வண்டிக்கே கமலாவைப் பார்க்க வந்தவர்கள் திரும்பச் சென்று விட்டார்கள். அவர்கள் என்ன அபிப்பிராயம் தெரிவித்து விட்டுப் போனார்கள் என்பதை அறிவதில் நான் கருத்தாய் இருந்தேன்.

கமலாவின் தகப்பனார் சாவகாசமாகத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். உசிதமோ, இல்லையோ, எனக்கு ஏற்பட்டிருந்த மனக் கிளர்ச்சியில் அவரிடம் பேச்சுக் கொடுக்க நான் துணிந்து விட்டேன்.

'' பிள்ளை வீட்டார்கள் சம்மதித்து விட்டார்களா!'' என்று நான் பேச்சைத் துவக்கினேன்.

' இன்னும் அவர்களிடமிருந்து முடிவான பதில் வரவில்லை. பெற்ற தாயார் இல்லை என்று யோசிக்கிறார்கள் போலிருக்கிறது. இதற்கு நாம் என்ன செய்ய முடியும்......!'' என்றார் அவர்.

அவர் பேசியதில் முழுவிவரமும் ஓரளவுக்கு எனக்குப் புரிந்து விட்டது.......



வித்வான்:—யாரையா நீங்கள்? பொய் மீசை வைத்திருக்கும் இந்தப் பையனை எதற்காக அழைத்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?

பையனின் தகப்பனார்:—நம்ம பயல்தான்! அவனுக்கு உங்கள் வாசிப்பிலே அசாத்திய மோகம். உங்கள் மாதிரியே ஆக வேண்டும் என்று ரொம்பப் பிரயத்தனம் செய்கிறான் பயல்! நீங்கள் இவனைச் சிஷ்யனாக வைத்துக் கொண்டால் நன்றாயிருக்கும்!

கமலாவை இரண்டாந் தாரமாக வாழ்க்கைப் படுத்த அவருக்குச் சிறிதும் விருப்பமில்லை. சிநேகிதர் ஒருவரின் தொந்தரவைப் பொறுக்க மாட்டாமல் தான் இசைய நேர்ந்து விட்டது. இத்தனையும் அறிந்து கொண்ட பின்னர் எனக்குச் சொல்லித் தரவா வேண்டும்! அந்த வரனைத் தட்டிக் கழித்து விட எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் அவரிடம் சொல்லி விட்டேன்......

• சித்தியிடம் தொல்லைப்பட்டுக் கொண்டிருப்பதை விட இளையாள் வாழ்வை மேலானதாகக் கமலா கருதி விட்டிருந்தால்...! அவள் மனத்தையும் மாற்றத்தானே வேண்டும்!

கமலாவைத் தனிமையில் சந்திப்பது எனக்கு மிகவும் சுலபமான காரியமாகி விட்டது. அக்கம் பக்கத்து வீடுகள் சித்திக்கு மிகவும் நெருங்கிய பழக்கமானவர்களாகி விட்டபடியால் எந்நேரமும் எங்காவது சென்று வம்பளந்து கொண்டிருப்பது அவளுடைய பொழுது போக்காகி விட்டது. கமலாவும் முன் போல் என்னிடம் அதிகமாக வெட்கப்படுவதில்லை....

"உனக்குக் கல்யாணமாமே!" என்று கேட்டுக் கொண்டே அவளிருக்குமிடம் சென்றேன்.

"ஆமாம், அப்படித்தான் சொல்லிக் கொள்ளுகிறார்கள்." என்று அவள் பதிலளித்தாள்.

"கல்யாணம் ஆகப் போகிறது என்றால் யாருக்குமே சந்தோஷம் அதிகமாகத்தான் உண்டாகும்......... கல்யாணமாகி விட்டால் என்னை மறந்து விடுவாயல்லவா!"

"நிஜந்தான்! சந்தோஷத்தில் எனக்குத் தலைகால் புரியவில்லை. ஆகவே உலகமே எனக்கு மறந்து போய் விட்டது."

அவளுடைய பேச்சில் சிலேடையும் குதர்க்கமும் நிரம்பியிருப்பதை நான் உணரத் தொடங்கி விட்டேன்.

"என்னையும் கூடவா!"

என் கேள்விக்குக் கமலா பதில் ஒன்றும் வாய் திறந்து சொல்லவில்லை. ஆனால் அவள் கண்கள்தான் பேசுகின்றனவே! உடனே அவள் தலை குனிந்து கொண்டு அவ்விடத்திலிருந்து நகர்ந்தாள்.

அது முதல் என் சித்தம் கட்டுக் கடங்க மறுத்து விட்டது. கமலாவின் தகப்பனாரிடம் எப்படிக் கேட்பது என்பது எனக்கு விளங்கவில்லை. கமலா எனக்குக் கிடைக்காவிடில் என் வாழ்க்கை சூன்யமாகிவிடும் என்றுதான் நான் கருதினேன்.

நான்கு நாட்களுக்குப் பின்னர்......

கமலாவின் தகப்பனார் ஏதோ ரகஸ்யமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். அதிலிருந்து கல்யாணத்தேதி குறிப்பிடுவதில் ஏதோ ஆட்சேபணை ஏற்பட்டு ஆலோசனையிலிருப்பதாகத் தோன்றிற்று. ஆனால் அதன் காரணம் என் வரையில் மர்மமாக இருந்தது.

அதை யறிந்ததும் எனக்குச் சிறிது ஆறுதல் உண்டாயிற்று. எவ்விதத்திலோ அந்த விவாகம் நடைபெறாமல் நின்று விட்டது என் அதிர்ஷ்டம் என்றே நான் தீர்மானித்தேன். அந்த நிம்மதியில் தெய்வத்தின் மீதும் எனக்கு அபார நம்பிக்கை பிறந்து விட்டது! ஆனால் அத்துடன் என்னுடைய மனோபீஷ்டம் நிறைவேறவில்லையே! சாத்தியமானதையும் அசாத்தியமானதையும் பற்றி யோசித்துக் கடைசியில் ஒரு தீர்மானத்துக்கு வந்தேன்.

* * *

ஹோட்டலில் சாப்பிடுவது உடம்புக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்றும் என்னுடைய தாயாரை கும்பகோணத்துக்கே வந்து விடுமாறும் கடிதம் எழுதி மறுநாளே தபாலிலும் சேர்த்து விட்டேன்.

பெற்ற பிள்ளையின் தேகாரோக்கியம் கெட எந்தத் தாயாவது அனுமதிப்பாளா! என்னுடைய கடிதம் அவளிடம் சேர்ந்ததோ இல்லையோ ஓடோடியும் வந்து விட்டாள்.

சித்திக்கும் என் தாயாருக்கும் சில தினங்களிலேயே மனம் ஒத்துப்போய் விட்டதில் எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. கமலாவின் மீதும் என்னுடைய தாயாரின் அபிமானம் விழுந்து விட்டது. அவளாக என்னைக் கேட்கட்டுமே என்று நான் அதைப் பற்றிப் பேசாமல் இருந்து விட்டேன்......



கோபு:—நான் எழுதும் மை ரொம்ப கிராக்கியா, அம்மா?

தாயார்:—இல்லையடா, கோபு! எதற்காகக் கேட்கிறாய்?

கோபு:—இல்லை, நான் மை புட்டியிலுள்ள மையையெல்லாம் அப்பா சட்டையின் மேல் கொட்டி விட்டேன். அதற்கு அப்பா என்னை ரொம்பத் திட்டி, இரண்டு அடி கூடக் கொடுத்தார்!

வயது வந்த பெண்ணையும் பையனையும் வைத்துக் கொண்டு பெற்றவர்கள் எத்தனை காலம் வாயை அடக்கி வைத்துக் கொள்ள முடியும்! சித்தி என்னுடைய ஜாதகத்தைத் தரும்படி கேட்டாளாம். நான்தான் அவளுக்காகக் காத்துக்கொண்டிருந்தேனே! நிபந்தனை எதுவுமில்லாமல் என்னுடைய ஜாதகம் அவர்களிடம் போய்ச் சேர்ந்தது......

அன்று முதல் கமலா என் எதிரில் அதிகமாக வருவதில்லை. என்னைக் கண்டால் அவளுக்கு வெட்கம் வந்து விடுகிறதாம்!


* * *

"செவ்வாய்க் கிழமையும் அதுவுமாக சாயங்கால வேளையில் தூங்குகிறீர்களா!" என்று கமலா என்னைத் தட்டி எழுப்பினாள்.

கண்களை மூடிக்கொண்டிருந்ததால் தூங்குவதாக அவள் எண்ணி விட்டாள். நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டே, "வர வர இந்த வீட்டில் உன் தொல்லை பொறுக்க முடியாமல் போய்விட்டது" என்றேன்.

"என்ன சொல்லுகிறீர்கள்!" என்று கேட்டுக்கொண்டே அவள் என்னை நோக்கினாள். அவளுடைய திருஷ்டி கோபித்துக் கொள்ளட்டுமா என்று கேட்பதுபோல் இருந்தது.

எனக்குப் பதில் பேசத் தோன்றவில்லை.



'பீஷ்மன்'

படபட வென்று வானம் உறுமும் சப்தம். 'உஸ்' என்று ஊளையிடும் காற்றின் ஆரவாரம்!

கையில் பிரித்து வைத்துக் கொண்டிருந்த 'பைல்' கட்டை அப்படியே மேஜை மீது போட்டுவிட்டு என் பார்வையை ஜன்னலுக்கு வெளியே ஓட விட்டேன். இயந்திரமாகிக் கொண்டிருந்த என் மனசுக்கு, இயற்கையின் அந்தக் கோர தாண்டவம் ஏதோ இதத்தைக் கொடுப்பதாகத் தோன்றியது. வெளியே காற்று மெதுவாக அடங்கி அமைதியினூடே மழை பொழிய ஆரம்பித்தது. குளிர்ந்த காற்று என் உள்ளத்தில் அடங்கிக் கிடந்த பெருமூச்சை வெளியே கொணர்ந்து என்னை ஆசுவாசப்படுத்தியது.

மணி ஐந்தடித்து நான் ஆபீஸைவிட்டு வெளியேறிய போது சிறு தூறல் போட்டுக் கொண்டிருந்தது. நண்பர்கள் சிலர் மழை பலத்து விடக் கூடாதே என்ற பயத்துடன் மடமட வென்று நடந்து கொண்டிருந்தனர். குடை வைத்துக் கொண்டிருந்தவர்கள் 'குஷால்' நடை போட்டனர். இதனால் எல்லாம் என் உள்ளம் எந்த விதமான பரபரப்பையும் அடைந்து விடவில்லை. அது சோர்வுச் சேற்றிலே புரண்டு கொண்டே மந்தமாக வேதனை-அசை போட்டுக் கொண்டிருந்தது.

தூறல் கொஞ்சம் வலுத்தது. மாலை ஒளி மெல்ல மெல்லச் சூழ்ந்திருந்த மப்பிலே கலந்து இருளாக உருவெடுத்தது. நான் மெதுவாகத் தான் நடந்தேன். மேலே அணிந்து கொண்டிருந்த சட்டை ஈரம் தோய்ந்து உடலிலே குளிர் ஊட்டியது. மழையிலே சொட்டச் சொட்ட நனைந்தால் தானென்ன! வீட்டுக்குப் போனதும், 'ஏன் இப்படி மழையிலே நனைந்து வந்திருக்கிறாய்!' என்று கேட்பதற்கு யாரிருக்கிறார்கள். அவள்......அவளுக்கு மனம் என்று ஒன்று இருந்தால்தானே!

என்னை மேலே யோசிக்கவிடாமல், 'ராகவன், ராகவன்' என்ற அந்தக் குரல் எங்கிருந்தோ அசரீரி போல் ஒலித்தது. திரும்பிப் பார்த்தேன். எதிர்ச் சாரியிலுள்ள ஒரு மாடியில் நின்று கைகாட்டி அங்கே வரும்படி சைகை செய்தான் நண்பன் தெய்வநாயகம். மழை விடும் வரையில் இங்கே தான் தங்கியிருப்போமே என்று எண்ணி நான் மேலே போய் அவன் எதிரில் நின்றேன்.

''அப்படி யென்னடா மழையிலே நனைந்து கொண்டு...சட்டையைக் கழற்றிப் பிழிந்து அந்தக் கொடியிலே உலர்த்து. இந்தா. இந்தத் துண்டை மேலே போட்டுக் கொள்.''

என்ன பரிவான உள்ளம்! நான் ஏதோ யோசித்துக் கொண்டே சட்டையை உலர்த்தி விட்டுத் திரும்பினேன். எதிரே இருந்த பெஞ்சின் மேல் காப்பி டம்ளரை வைத்து விட்டுச் சென்று கொண்டிருந்தாள் நண்பனின் மனைவி. டம்ளரிலிருந்த காப்பியிலிருந்து ஆவி பறந்து கொண்டிருந்தது.

''இதை எடுத்துக் கொள்!'' என்றான் அவன். என் மனம் அந்தத் தம்பதிகளை எண்ணி வியந்தது, என்ன ஒற்றுமை! ஆகா! தெய்வநாயகம் கொடுத்து வைத்தவன்.

''ஏன் ஒன்றுமே பேசமாட்டேன் என்கிறாய்!'' என்றான் அவன்.

''தலைவலி... மனசு வேறு...'' என்று சொல்லியவாறே மேஜை மீதிருந்த ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்தேன். அந்தப் புத்தகத்தின் தாள்கள் காற்றிலே படபடத்தன; என் மனமும் அதே போலத்தான்!

'ஸரஸா அவனைக் குறும்புடன் பார்த்தாள்.'

புத்தகத்திலிருந்த அந்த வரியைப் படித்ததும் என் உள்ளத்தில் திடீரென்று அனல் பொறி தெறித்தது.

ஸரஸா! ஆம். அது அவளுடைய பெயர் தான். என் அருமை மனைவியின் பெயர்தான். 'ஸரஸா...ஸரஸா...' என் வாய் என் உணர்வின்றியே அதைத் திரும்பத் திரும்ப உச்சரித்தது. அந்தப் பெயரில் கூட இனிமை! இனிமையா! ஆம். இனிமையேதான், விஷத்திலும் அனலிலும் கூடச் சுவை இருக்கிறது என்கிறார்களே சில மேதைகள்! அதுபோல... அது எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும். அவள் என்னை வேண்டாமென்று ஒதுக்கி விட்டுப் பிறந்த வீடு போய்விட்டாள். அவளுக்குத்தான் என்ன இறுமாப்பு! அவளைப் பற்றிச் சிந்தனை செய்வதே பாவம்!

ஊஹூம்! இந்தப் பொல்லாத மனம் நம் சொன்னபடி கேட்குமேயானால் பூமியிலே ஏன் துன்பம் பிறக்கப்போகிறது! உண்மையிலேயே அவள் என்னிடம் கொஞ்சம்கூட அன்பில்லாதவளாக இருந்திருந்தால் நான் அவளைப் பற்றிச் சிந்தனை செய்யப்போகிறேனா!—அவள் என்னிடம் அன்பாகத்தான் நடந்து கொண்டாள். கொஞ்சல் மொழியில் தான் பேசுவாள். அப்படிப்பட்டவள் இன்று என் உறவை வெறுத்துவிட்டுத் தனியே போய்ப் பங்களூரில் கவலையின்றி உத்தியோகம் பார்க்கிறாளே! என்ன துணிச்சல்!

கலாசாலையில் ஒருநாள் நாடகம் ஒன்று நடந்தது. ஸரஸாவும் நானும் அதைப் பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தோம். "கதாநாயகி-மாலாவின் மனம் பெண்ணின் குணத்திற்கே ஓர் சான்று" என்றாள் ஸரஸா.

"ஏன்!"

"மாலா தன்னைக் காதலித்தவன் காலால் உதைத்து வெறுத்துத் தள்ளியபோதிலும் அவனுக்காகவே தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டாளே - அந்தத் தன்மை பெண்ணின் மேன்மையான மனத்தையும் பிரேமைக்கு அடிபணியும் குணத்தையும் விளக்கவில்லையா!"

"உண்மைதான். ஆனால் ஆண் என்றால் பெண்ணின் கண்ணீரைக் கண்டு மகிழும் மிருகம் என்பது உன் கருத்தா!"

"நான் உங்களை அந்தக் கதா நாயகனுடன் ஒப்பிடவில்லையே!"

"உன்னைத்தான் 'மாலா'வுடன் ஒப்பிட்டுக்கொண்டாயாக்கும்!" என்று சொல்லி நான் சிரித்தேன். அவளும் சிரித்தாள்.

அதே ஸரஸா இன்று காலத்தைச் சிரிக்க வைத்துவிட்டாள்.

அல்லது காலத்தின் சிரிப்பைக் கண்டு கலங்கிப் போய்த்தான் அவள் நிலை தடுமாறுகிறாளோ, என்னவோ!

என் அம்மா அவளைக் கண்டித்தாளாம். தான் நாகரிகமாக இருப்பது அம்மாவுக்குப் பிடிக்கவில்லையாம். இதனால் அம்மாவை அவளுக்குப் பிடிக்கவில்லையாம்! எப்படி இருக்கிறது கதை! ஏதோ அவர்களுக்குள் நடந்த சின்ன மனஸ்தாபத்திற்காக நான் என் அம்மாவைப் புறக்கணித்து விடவேண்டுமாம்!—அழகாகத்தானே இருக்கிறது!

"அம்மா வயதானவள். அந்தக் காலத்து மனம். கொஞ்சம் அவள் போக்குப்படிதான் நடந்துகொண்டு விடேன்" என்று நான் சமாதானம் கூறினேன். அம்மாவிடம் அவளுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பு அவள் அறிவைச் சிதைத்திருக்க வேண்டும்.

"உங்களுக்கு அம்மா வேண்டுமா, அல்லது மனைவி வேண்டுமா!"—முகத்தை 'உர்' என்று வைத்துக்கொண்டு உச்சஸ்தாயியிலே தான் அவள் இந்தக் கேள்வியைக் கேட்டாள்.

என் இருதயத்தில் பளாரென்று அறைவது போலிருந்தது!

"உனக்காக அம்மாவை இழக்க முடியாது!"

"உங்கள் அம்மாவுடன் என்னால் வாழ முடியாது!"

அவள் மேலே பேசவில்லை. அன்றிரவே பிறந்தகத்திற்குப் புறப்பட்டு விட்டாள். நான் அவளைப் பார்த்து 'எங்கே போகிறாய்!' என்று கூடக் கேட்கவில்லை.

"ஸரஸா ஏன் திடீரெனக் கிளம்பி விட்டாள்!" என்று அம்மா என்னைக் கேட்டாள்.

நெஞ்சிலே பட்டும் படாமலும், "எனக்குத் தெரியாது!" என்றேன் நான்.

அவள் பிறந்த வீடு போய்விட்டாள். வருஷம் மூன்றாகிறது. கடிதம்கூடக் கிடையாது. பங்களூரில் எங்கேயோ பள்ளிக்கூடம் ஒன்றில் உத்தியோகம் பார்க்கிறாளாம்! — என்னைப் பற்றிய நினைவே இல்லையோ என்னவோ!


அவள்தான் போனாள். என் அம்மா! பாவம். நெடுங்காலமாக அவளை வாட்டி வந்த காசம் நான்கு மாதங்களுக்கு முன் அவளை உலகத்திலிருந்தே அடித்துக்கொண்டு போய்விட்டது. அம்மாவின் வாழ்வு முடிந்த விவரத்தை நான் அவளுக்குத் தெரிவிக்கவில்லை. எதற்காகத் தெரிவிக்க வேண்டும்! ஆனால் அவள் நினைவு! அம்மா மறைந்தவுடனேயே தன் தலை மறைவு வாழ்வை முடித்துக்கொண்டு வெளிக் கிளம்பி விட்டது. தனிமை யுணர்ச்சிதான் இந்த நினைவைக் கிளப்புகிறதோ, என்னவோ!

"ராகவன், என்னடா அப்படி யோசனை! பக்கம் ஒன்று கூடப் புரளக் காணோம். நிலைத்த கண் வாங்காமல் தவம் செய்கிறாயே! மழை நன்றாக விட்டுவிட்டது, பார்!"

உடலை வளைத்துச் சோம்பல் முறித்தேன். வெளியே வானம் துடைத்து விடப்பட்ட கண்ணாடியைப்போல நிர்மலமாயிருந்தது.

"நான் வருகிறேன்" என்று விடைபெற்றுக்கொண்டு எழுந்தேன்.

"மாமா, உங்களுக்கு ஒரு கடிதாசி வந்திருக்கிறது! இதோ!" என்று சொல்லிக்கொண்டே குதித்து வந்து என் கையில் அவற்றைக் கொடுத்துவிட்டுப் போனாள், பக்கத்துப் 'போர்ஷ'னில் குடியிருக்கும் ராம சர்மாவின் பெண் அகிலா. இந்த வீட்டிலே இதுவரை வேறு யாரையும் குடி வைத்தது கிடையாது. அம்மாவுக்கு இத்தனை பெரிய வீட்டையும் தானே புழங்கிக் கொண்டிருப்பதில் ஏனோ அவ்வளவு ஆசை. அம்மா மறைந்த பிறகு என்னால் தனியே வீட்டுக்குள் நுழைவதற்கே கஷ்டமாக இருந்தது. ஆகவே வீடு கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருந்த ராம சர்மாவை நானே நேரில் கண்டு என்



ஒருவர் :—அவர் யார் ஸார்?...... உங்களுக்குத் தெரியுமா? ஒரு இடத்தில்கூட நிற்காமல் அங்கு மிங்கும் போய்க் கொண்டிருக்கிறாரே......!

மற்றவர்:—அவர்தான் ஸார்! நமது ராஜ்ய போக்குவரத்து மந்திரி!

வீட்டில் குடியிருக்கும்படி சொன்னேன். அவருடைய ஐந்து வயதுப் பெண் அகிலாவின் விளையாட்டுகளும் பேச்சும்தான் இந்த வீட்டில் எனக்கு ஓரளவு ஆறுதல் தருகின்றன.

கவரின்மேல் எழுதப் பட்டிருந்த விலாசத்தைப் பார்த்ததும் என் நெஞ்சம் துணுக்குற்றது. அவளுடைய கையெழுத்துத்தான். சாய்த்துச் சாய்த்து முத்துக் கோத்தது போல எழுதப் பட்டிருந்ததைப் பார்த்தவுடனேயே அவள் முகம் கண் முன் தோன்றி விட்டது.

இது என்ன கட்டுரையா, கடிதமா! என் கண்கள் என் மனசைக் கயிறு கட்டி இழுத்து கடிதத்தின் வாசகத்துடன் பிணைத்துவிட்டன.

"உங்கள் அம்மா மறைந்த விவரம் சமீபத்தில்தான் எனக்குத் தெரியவந்தது. அதைக் கேட்ட தினத்திலிருந்து எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. ஏதோ அசட்டுத் தனத்தினால் உங்களை விட்டு விட்டு அப்பொழுது வந்து விட்டேன். ஆரம்பத்தில் என் தலைக் கர்வம் என்னறிவைச் சிதைத்து விட்டது. ஆண்மையுடன் ஒன்றுமல் பெண்மை என்றும் தனித்திருக்க முடியாது என்பதை நான் அப்பொழுது உணரவில்லை. ஒரு வருஷம் இரண்டு வருஷம் இந்த அறியாமை மிதப்பிலேயே வாழ்ந்து விட்டேன். கொஞ்ச நாட்களாகத்தான் என் இருதயம் இருதயமாகி என்னைக் குத்திச் சித்திரவதை செய்கிறது. அம்மாவிடம் வந்து காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்றுதான் எண்ணியிருந்தேன். திடீரெனக் கடும் ஜுரத்துடன் படுக்கையில் விழுந்து விட்டேன். என்னால் எழுந்து நடக்கவும் முடியவில்லை. என்ன எழுதுவது எப்படி எழுதுவது என்று தெரியாமலே சில நாட்களைக் கழித்து விட்டேன். இந்தச் சமயத்திலேதான் அம்மா போய் விட்ட தகவல் யாரோ வந்து சொன்னார்கள். உயிரைப் பிடித்துக் கொண்டு எத்தனையோ இடைஞ்சல்களின் மத்தியில் நானே இந்தக் கடிதம் எழுதுகிறேன். நீங்கள் தனியே அங்கே வாழ்வதை நினைத்துப் பார்க்கவும் கஷ்டமாக இருக்கிறது என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் காலில் விழுந்து கெஞ்சுகிறேன். என் அறிவு தெளிந்து விட்டது. நான் இப்பொழுது பெண்ணாகி விட்டேன். என்னை என் பெற்றோர்கள் அங்கே கூட்டி வரமாட்டார்கள். தயைசெய்து சிரமத்தைப் பார்க்காமல், என்னை மன்னித்து இங்கு வந்து அழைத்துப் போங்கள். எனக்கு வேறு ஒன்றும் எழுதத் தெரியவில்லை. என்னை மன்னிக்க மாட்டீர்களா?"

இவ்வளவு தானு!...இன்னும் என்னென்னவோ எழுதியிருந்தாள். சீ! இத்தனை நாட்களாக இல்லாத பரிவு இப்பொழுது வந்து விட்டதாக்கும்! அம்மா ஒழிந்து போகும் வேளையை எதிர்பார்த்திருந்து அந்த சுபச் செய்தி காதில் விழுந்ததும் கடிதம் எழுதி விட்டாள்! நான் போய் அவளை அழைத்து வர வேண்டுமாம்! அழகுதான்! இன்னும் அவ்வளவுக்கு இளித்த வாயனாக நான் ஆகவில்லை.

எரிச்சல் புகைந்து கொண்டு என் இதயத்தைக் கிழித்துக்கொண்டு கிளம்பியது. இத்தனை நேரமாக அவளைப் பற்றிய நினைவிலேயே இன்பம் கண்ட நான் இந்தக் கடிதத்தைக் கண்டதும் அவளையே விஷ உருவாகக் கண்டேன். கடிதம் அவள் உள்ளத்தை மறைத்து ஏதோ திரை போடுவதாக எனக்குத் தோன்றியது.

உண்மையில் என்னிடம் அன்பு உள்ளவளானால் அந்தப் பெற்றோருடன் சண்டை போட்டுக் கொண்டாவது இங்கு வந்திருக்க மாட்டாளா! இங்கிருந்து பிறந்தகத்துக்கு ஓடிப் போகும் பொழுது இருந்த மனோ தைரியம் இப்பொழுது எங்கே போய் விட்டது! அவ்வளவும் பொய்! அவளுக்கு ஜுரமாவது மண்ணாவது குத்துக் கல்போல உட்கார்ந்திருப்பாள். அவள் கைப் பாவை என்று என்னை நினைத்துக் கொண்டு விட்டாளோ!

பல்லைக் கடித்துக்கொண்டு அந்தக் கவரை வெறுப்புடன் அறையின் மூலையில் விட்டெறிந்தேன்.

"என்ன மாமா, இது! அந்தக் காகிதத்தை என் மேலே வீசுகிறீர்களே!" என்று கேட்டுக் கொண்டே கையில் ஒரு 'செலுலாயிட்' பொம்மையைத் தூக்கிக் கொண்டு உள்ளே ஓடி வந்தாள் அகிலா.

"மாமா! அந்த பாபு ராவ் கடையிலே சூட்டு பூட்டெல்லாம் போட்டு ஒரு பொம்மை வைத்திருக்கிறான், பாரு! அது இவளுக்கு ஜோடியாக இருக்கும், மாமா! அதை எனக்கு வாங்கித் தருகிறீர்களா!" என்று என் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள் அகிலா. அந்தப் பொம்மைக்கு ஜோடி யில்லாதது அவளுக்கு ஏதோ பெரிய குறையாக இருந்தது. இந்த 'மாமாப் பொம்மை' தன் ஜோடியைப் பறக்க விட்டுவிட்டு உட்கார்ந்திருப்பது அவளுக்குத் தெரியவில்லை.

"ஏன், ஜோடி யில்லாமல் உன் பொம்மைக்கு அழகு குறைந்து போய் விட்டதா!" என்று கேட்டேன் நான்.

"இந்த லேடி பொம்மையை ஒண்டியாக வைத்துக்கொண்டு எப்படி மாமா விளையாடுகிறது!" என்றாள் அகிலா.



"நாளைக்கு வாங்கித் தருகிறேன். இப்பொழுது எனக்கு வேறு வேலை இருக்கிறது. நீ போய்த் தூங்கு" என்றேன்.

அகிலா அங்கிருந்து ஓடிவிட்டாள்.

குழந்தைக்கு விளையாடக் கூட ஆணும் பெண்ணுமாக ஜோடிப் பொம்மைகள் தான் தேவை. தனிமை அவ்வளவு ரஸமற்றது. அப்படியானால் அவளைப் போய் அழைத்து வந்துவிட்டால் என்ன !—இப்படி ஒரு சிந்தனை.

வெளியே சடசடவென்று சத்தம் கேட்டது. வானம் உறுமிக்கொண்டிருந்தது. வாசற் புறத்தை நோக்கி யிருந்த ஜன்னலைத் திறந்து கொண்டு வெளியே பார்த்தேன். வெளியெங்கும் மழை இருட்டு அடர்ந்திருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக நின்று ஒளி வீசிய மின்சார விளக்குகள் கூட மங்கலாகத் தான் மினுக்கின. தூறல் தூறிக் கொண்டிருந்தது. மின்சார விளக்கின் ஒளியையும் போட்டி யிட்டு வென்று விட்டதுபோல் வெளியே படர்ந்திருக்கும் அதே இருள் என் மனத்திலும் கவிந்து விட்டதோ !

ஜன்னல் கதவைச் சட்டென்று சாத்தினேன். விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கையை விரித்துப் படுத்துக் கொண்டேன்.

வெளியே இருந்து, மூடிய ஜன்னல் கதவுகளையும் தாண்டி என் அறையை நிறைத்தது இருள். இப்படித்தானே வாழ்விலும் இருள் புகுந்து விடுகிறது ! உலகில் இரவில் இருள் பரவுவது இயற்கை நியதி. ஆயின் என் வாழ்வில்......! இந்த இருள் அவள் பரப்பியது தானே ! அவளை மறுபடியும் அழைத்து வந்தால் இந்த இருள் போய்விடுமா !

அதை ஆமோதிப்பது போல கடிகாரம் அமைதியாக டக் - டக் என்று ஒலித்தது.

அடர்ந்திருக்கும் மழை இருளினூடே அடிக்கடி மின்னல் பளிச்சிடுவதுபோல நான் சிந்தனை வெள்ளத்தில் திக்குத்திசை தெரியாமல் திணறும் பொழுதெல்லாம் அகிலா என்னும் அந்தச் சிறு உருவம் தோன்றி என்னை விடுவிக்கும். அந்த ஒரு ஆறுதலும் பறந்து போய்விட்டது. ராம சர்மாவைத் திடீரென்று திருச்சிக்கு மாற்றி விட்டார்கள். சூழ்நிலை சூனியப் பிரதேசமாக மாறிவிட்டது போன்ற பிரமை என்னுள் எழுந்தது. வேறு யாரையும் வீட்டில் குடிவைப்பதற்கும் ஏனோ என் மனம் ஒப்பவில்லை. தனிமை - தனிமை ! ஒரே தனிமை !

வெறுப்பு உச்ச நிலையை அடையும்பொழுது மனிதனுக்குப் பொறுப்பு எதிலுமே பிறப்ப தில்லையல்லவா ! என் நிலையும் அப்படித்தான் ஆயிற்று. ஆபீஸ் அலுவல்களில் ஒரே அசிரத்தை. எதிலும் குழப்பம் ! தவறுதல் !

என் சக குமாஸ்தா சீனு ஒரு நாள் சொன்னான்:—"இனிமேல் உனக்கு ஆபீஸ் வேலையெல்லாம் ரொம்ப ஜோராக ஓடும் - அப்படித் தானே !"

"ஏன் அப்படி !"

"உன் எதிரேதான் அந்த டைப்பிஸ்ட்டு வந்து உட்காரப் போகிறாளாம். ஒரு பெண்ணின் முன் உட்கார்ந்திருக்கிறோம் என்ற நினைப்பே ஒரு சுறு சுறுப்பை ஊட்டி விடுமப்பா !"

"எனக்கு என்றும் ஒரே மாதிரிதான். இந்த மாதிரி க்ஷீத்தரமான உணர்ச்சி வசப்பட்டு என்னை மறந்து விடமாட்டேன், தெரியுமா !" என்றேன் நான். அவன் சிரித்தான்.

"என்னத்தைக் கண்டு விட்டாயப்பா, அப்படிச் சிரிப்பதற்கு !"

"நீ உணர்ச்சி வசப்படமாட்டாய். உணர்ச்சி உன்னை வசப்படுத்தி விடும்! ராகவன், அதிலும் உன்னைப் போல் கல்யாணமாகியும் பிரம்மசாரியா யிருப்பவர்களை அந்தப் பாழும் உணர்ச்சி இமை கொட்டும் நேரத்தில் சிறைப் படுத்திவிடும்."

"என்னை நீ இன்னும் புரிந்து கொள்ள வில்லை."

"நீயே உன்னை நன்றாகப் புரிந்து கொள்ள வில்லையே !" என்று சொல்லிக்கொண்டே சீனு போய் விட்டான்.

என்னை நான் புரிந்து கொள்ள வில்லையா !— எதைப் புரிந்து கொள்வது ! அன்று அதன் விடை எனக்கு விளங்கவில்லை.

ஆனால், ஒரு நாள்......!

நான் எந்த சினிமாவுக்கும் போகும் வழக்கம் கிடையாது. அன்றைக்கு என்னைப் பிடிவாதமாக அந்தப் படத்துக்கு அழைத்துச் சென்று விட்டான் சீனு. உண்மையிலேயே படம் நல்ல படம்தான். கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டிருந்தது. படம் முடிந்து நானும் சீனுவும் ஒருவர் கையை ஒருவர் பற்றிக் கொண்டு அந்த நெருக்கத்தில் ஒருவரோடொருவர் நசுங்கிக் கொண்டே வெளியே வந்தோம். திடீரென்று மின்சார விளக்குகள் எல்லாம் அணைந்து போயின.



என் கையை உதறிவிட்டு, 'அட ஈசுவரா!' என்று கூவினான் சீனு.

பின்னிருந்து வந்த கூட்டம் என்னை கெட்டி முன்னுக்குத் தள்ளியது.

சீனு எங்கேனும் கூட்டத்தில் ஒதுங்கிவிடப் போகிறானே என்று நினைத்து அவன் கையைப் பிடித்திழுத்தேன்.

விளக்குகள் பட்டென்று அந்தக் கணத்தில் பிரகாசமாக எரிந்தன.

நான் தீயைத் தொட்டு விட்டவனைப் போல சடக்கென்று என் கையை உதறினேன். காரணம் வேறொன்றுமில்லை. நான் பிடித்திழுத்தது, சீனுவின் கையை யல்ல. புதிதாக என் ஆபீஸில் டைப்பிஸ்டாக வந்திருந்தாளே, அந்த அழகியின் கையை. கூட்டத்தில், இருட்டில், ஆள் மாறி அவள் கையைப் பிடித்து விட்டேன். கூட்டத்திலே இருந்தவர்கள் என்னை முறைத்துப் பார்த்தார்கள்.

ஆனால் அவள், அந்த 'டைப்பிஸ்ட்' என்னைப் பார்த்துப் புன்னகைதான் செய்தாள். நான் எதிர்பார்த்ததுபோல் கோபப்படவில்லை.

"படம் எப்படி!" என்றாள்.

"பலே, ஜோர்!" என்றேன்.

"நீங்கள் படத்திற்கு வரப்போவதாகச் சொல்லி யிருந்தால், உங்களையே எனக்கும் 'டிக்கட் ரிஸர்வ்' செய்யச் சொல்லியிருப்பேன்" என்றாள் அவள். நான் ஏனோ அவள் முகத்தையே உற்றுப் பார்த்தேன்.

"குட் நைட்!" என்று சொல்லிவிட்டு அவள் போய்விட்டாள்.

"ராகவன், இங்கே நாடகம்! அங்கே சினிமா!" சீனு என் பின்னால் சிரித்தவாறே நின்று கொண்டிருந்தான்.

"என்ன சொல்கிறாய் என்றேன்!" நான்.

"உணர்ச்சி வசப்படாமலா அவள் கையைப் பிடித்தாய்! ராகவன், வெற்றி யாருக்கு!"

அவன் இடிஇடி என்று சிரித்தான். என் உள்ளம் எரிந்தது.

ஆபீஸில் என்னைப் பற்றிக் கசமுச என்று பேச்சு வளர்ந்தது. அன்று கடற்கரையோரமாக வந்து கொண்டிருந்தேன். சற்றுத் தூரத்திலே இரண்டு பேர் பேசிக் கொண்டு சென்றனர்.

"கட்டின பெண்டாட்டியைப் பிறந்த வீட்டில் விட்டு விட்டு, இந்தச் சட்டைக்காரப் பெண்ணைக் கட்டிக் கொண்டு அழுகிறானும் ராகவன்!"

பேசியது ஆபீஸ் காஷியர் அப்பாசாமி.

எத்தனை அபாண்டம்! சீனு செய்த வேலை தான் இதெல்லாம்!

அங்கிருந்தே நேராக அவன் வீட்டிற்குச் சென்று அவனைக் கண்டபடி திட்டினேன். அவன் சொன்னான்:

"ராகவன், நீ பரிசுத்தனாக இருக்கலாம். உன்னுடைய பார்வை பரிசுத்தமாக இல்லை. தனிமை வாட்டி எடுத்த உன் உணர்ச்சி உன்னை மீறி உன் கண்களிலே சில சமயம் கொந்தளித்து விடுகிறது. அதை நீயே உணரவில்லை. பிறர் அதைக் கண்டு சந்தேகித்து விடுகிறார்கள். அதிலும் நீ பெண்டாட்டியைப் பிறந்த வீட்டில் விட்டு விட்டு நான்கு வருஷ காலமாக ஒண்டிக் கட்டையாக வாழ்கிறாயல்லவா! அதனால் உன்னைப் பார்க்கும் யாரையும் சந்தேகம் எளிதில் பற்றி விடுகிறது."

அவன் என்னென்னவோ சொன்னான். எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. வீட்டுக்கு வந்தேன். வரும்பொழுதே அவளைப் பற்றிய—ஸரஸாவைப் பற்றிய நினைவும் எழுந்தது.

அறைக்குள் நுழைந்ததும் கடந்த சில மாதங்களாக வந்த—என்னால் கவனிக்கப்படாத என் மனைவியின் கடிதங்களைச் சேகரித்தேன். ஒவ்வொரு கடிதத்திலும் தன்னை மன்னிக்கும்படியும், வந்து அழைத்துப் போகும்படியும் எழுதியிருந்தாள். கடைசியாக அவளிடமிருந்து கடிதம் வந்து நான்கு மாதமாகிறது.

அவளிடமிருந்து வந்த கடைசிக் கடிதத்தை எடுத்து மறுபடியும் படித்தேன்.

"என் கடிதங்களெல்லாம் ஊமையிடம் கேட்ட கேள்விகளின் நிலையை அடைந்து விட்டன. அநேகமாக இது தான் என் கடைசிக் கடிதமாக இருக்கும். என்னால் எழுதுவதற்கே முடியவில்லை. இடைவிடாத ஜுரம். ஆவி நீங்கு முன் உங்களைக் காணக் கூடக் கொடுத்து வைக்கவில்லை. பாவி நான். என்னை மன்னிப்பீர்களா?"

அவள் எழுதியிருப்பது உண்மையாகத் தானிருக்கும்! எத்தனை கடிதங்கள் எழுதி விட்டாள்! பாவம், குற்றம் செய்து விட்டு இப்பொழுது துடிக்கிறாள்!

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை! விடுமுறை!

போய்ப் பார்த்து விட்டுத் தான் வரலாமே! அறியாமலோ அறிந்தோ அவள் செய்த குற்றத்தை மன்னித்து விட்டால் தானென்ன! சீ! இந்தத் தனிமை வாழ்வின் அவல நிலையை விட அது எவ்வளவு உயர்ந்தது!

என் எண்ணம் வளர்ந்தது. நேரமும் வளர்ந்தது.

* * *

நான் உள்ளே நுழைந்ததும் ஸரஸாவின் தாயார், தந்தை எல்லோரும் என்னை எரித்து விடுபவர்கள் போலத்தான் பார்த்தார்கள். ஆனால் அவள் படுக்கையில்—எலும்பும் தோலுமாய்க் கிடந்தவாறே-பேசமுடியாமல் "என்னை மன்னிப்பீர்களா!" என்றாள்! யார் யாரை மன்னிப்பது! அவள் எழுதிய கடிதங்களைக் குப்பையில் எறிந்துவிட்டு எதை எதையோ நினைத்துக் குமைந்துபோன என்னையல்லவா அவள் மன்னிக்கவேண்டும்!

பாவம்! அவள் தன்னை உணர்ந்து என்னிடம் வர நினைத்த சமயத்திலேயே நோய் அவளை நொறுக்கி எடுத்துவிட்டது. ஆயினும் அவள் எவ்வளவு நொந்து போய்விட்டாள்!

நான் அருகில் சென்றேன். என் கையை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டாள். என் கையெல்லாம் நனைந்து விட்டது.

"என்னை மன்னித்தீர்களா!"

"நீ ஒரு குற்றமும் செய்யவில்லையே சரஸா."


"அம்மா............!" அந்தப் பெருமூச்சு அவள் அடைந்த ஆறுதலைப் புலப்படுத்தியது.

வயிற்றிலுள்ள புளிப்புக்கு பலியா?

இவ்விதம் தீர்த்துக் கொள்ளவும்...

நீ வயிற்றிலுள்ள புளிப்புக்கு பலியாக இருப்பதால், பிரா ஆகாரம் உனக்கு விஷம் என்று தாத்பரியம் கொண்டு கவலைப்படுகிறாயா? அப்படியானால், நிச்சயமும், நம்பிக்கையுள்ளதுவும், கட்டாயம் பயன் தரும் சுலபவழி இதோ இருக்கிறது. சாப்பிட்டவுடன் ஒரு தேக்கரண்டி அளவு பிஸ்மாக் (4 or 5 மாத்திரைகள்) கை கொஞ்சம் ஜலத்துடன் எடுத்துக்கொள்ளவும்.

பிஸ்மாக்கிலுள்ள மருந்து உடனே வேலை செய்யத் தொடங்கி வயிற்றிலுள்ள அதிக புளிப்பை சமனப்படுத்தி, மிருதுவான குடல் ஜாகளை சாந்தப்படுத்தி, சாப்பாடு கெடாமல் பாதுகாக்கிறது. சில நாட்கள் ஒவ்வொரு சாப்பாட்டிற்கு பிறகும் பிஸ்மாக் மருந்து அளவை திரும்பத் திரும்ப சாப்பிட்டால், அதன் குணப்படுத்தும் வேலையை தொடர்ந்து செய்யும்.



"பிஸ்மாக்" எவ்வாறு வலியிலிருந்து குணமளிக்கிறது.

வயிற்றுக் கோளாறுகளுக்கெல்லாம் முக்கிய காரணமான, வயிற்றிலுள்ள அதிகப்படியான புளிப்பை முறித்துப்பயனற்றதாகச் செய்கிறது. "பிஸ்மாக்" புளிப்பை முறிக்கும் பொருள் அதிதுரிதமாக வலியைக் குறைத்தவுடன் மற்றப் பொருள்கள் வேலையைத் துவக்குகின்றன. ஒன்று புளிப்பு வயிற்றிலும் மேலும் சேருவதைத் தடுப்பது. மற்றொன்று வயிற்றின் உள்தோலின் எரிச்சலைக் குறைத்துக் குணப்படுத்துவது.

'பிஸ்மாக்'
க்ஷணமே அஜீர்ணத்தைப் போக்குகிறது



மாத்திரைகளாகவும் பவுடராகவும் கிடைக்கும்

இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:
ஜியாப்மோனர்ஸ் & கோ., லிட்., பம்பாய்-1
கிளைகள்: கல்கத்தா - மதராஸ் - டில்லி



அழகிற்கான அரிய சாதனம் 'ஓடின்'

"OATINE CREAM is indispensable for my toilet. I have been using it for a long time, and find it delightful, and extremely necessary to preserve a perfect skin."

Sadhona Bose

Oatine *Snow*



Oatine *Cream*

Make sure seal is unbroken

O 1



Edited, Printed and Published by R. Krishnamurthy at "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road. Kilpauk, Madras



துணிகளை அடித்துத் துவைக்காமலே வெண்மையாகவும்
பிரகாசமாகவும் சலவை செய்கிறது !